


கம்பன் மலர்

கம்பன் கழகம், கோவை

2011

கம்பன் மலர்

2011

39 ஆம் ஆண்டு

கம்பன் விழா வெளியீடு

கம்பன் கழகம்

மணிமேல்நிலைப் பள்ளி வளாகம்

பாப்பநாயக்கன் பாளையம்

கோவை – 641 037.



கடவுள் வாழ்த்து

தன்னைப் படைத்ததுவும் தானே எனும் தன்மை
பின்னைப் படைத்ததுவே காட்டும்; பெரும்பெருமை
உன்னைப் படைத்தாய் நீ என்றால், உயிர் படைப்பான்
என்னைப் படைத்தாய் நீ எனும் இதுவும் ஏத்து ஆகுமோ?

(இறைவன் தன்னைத் தானே படைத்துக் கொண்டான் என்று சமயநூல்கள் கூறும் உண்மையை, பின்பு நீ நரசிங்கமாக உன்னைப் படைத்துக் கொண்ட இதுவே காட்டும். இந்தப் பெரிய பிரபஞ்சத்தை நீ தோன்றச் செய்தாய் எனும்போது உலகிலுள்ள உயிர்களைப் படைப்பதற்காக நீ என்னை (பிரமதேவனாகிய) படைத்தாய் இது உனது பேராற்றலை உணர்த்தும் புகழுரை ஆகுமோ?)

– இரணியன் வதைப் படலம் – 6345
(பிரமன் துதி)

கம்பன் அறநிலை

அறங்காவலர் குழு

திரு. S. பதி தலைவர்

திரு. C. சௌந்திரராஜ் அறங்காவலர்

திரு. V. செல்வபதி ,,

திரு. சுனிதா சாந்தாராம் ,,

திரு. R.R. பாலசுந்தரம் ,,

திரு. நா.நஞ்சுண்டன் ,,

கம்பன் கழகம்

கோவை

நிர்வாகக் குழு

நிறுவனர்	:	அமரர் ஜி.கே.சுந்தரம்
தலைவர்	:	முத்தமிழ்க் காவலர் திரு. சி. சௌந்திரராஜ்
துணைத்தலைவர்கள்	:	"கம்பர் சீர்பரவுவார்" திரு. வி. செல்வபதி
		திருமதி சுனிதா சாந்தாராம்
செயலாளர்	:	கம்பன் கலைச்செம்மல் திரு. நா. நஞ்சுண்டன்
பொருளாளர்	:	திரு. ஆர்.ஆர். பாலசுந்தரம்
இணைச் செயலர்	:	முனைவர் திரு. க. முருகேசன்
துணைச் செயலர்	:	புலவர் திரு. சு. முரளி

* * * * * *

மலர்ப் பதிப்பாசிரியர்

திரு. நா. நஞ்சுண்டன்

39-ஆம் ஆண்டு கம்பன் விழா நிகழ்ச்சிகளுக்கு

பெருநிதி வழங்கி நிகழ்ச்சிகளை ஏற்ற தொழிலதிபர்கள்

திரு. G. சௌந்திரராஜ், நிர்வாக இயக்குநர்

C.R.I. சாரிடெபிள் டிரஸ்ட், கோவை.

திரு. R. சாந்தாராம், நிர்வாக இயக்குநர்

லக்ஷ்மி கார்டு குளோத்திங் மானுபாக்சரிங் கம்பெனி (பி) லிட்

திரு. ரதீந்திரன், நிர்வாக இயக்குநர்

ஸ்ரீ அனந்தகுமார் மில்ஸ் லிமிடெட்

திரு. K. வேலு, நிர்வாக அறங்காவலர்

ஸ்ரீ வெங்கடேஸ்வரா கல்வி அறக்கொடை அறநிலை

திரு. வி. செல்வபதி, நிர்வாக இயக்குநர்

பொங்கலூர் பயனீர் டெக்ஸ்டைல்ஸ் (பி) லிட்

மற்றும்

நாளிதழ் விளம்பரங்களை ஏற்ற

திரு. மகேந்திரா ராம்தாஸ், நிர்வாக இயக்குநர்

மகேந்திரா பம்ப்ஸ், கோவை

திரு. M. கிருஷ்ணன், ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ்

அழைப்பிதழ்கள் அச்சிட்டு அளித்த

சுபா ஹிந்துமா புராடெக்ஸ்

திரு. R.R. பாலசுந்தரம்

ஆகியோருக்கு எங்கள் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

S. பதி
தலைவர், கம்பன் அறநிலை

சி. சௌந்திரராஜ்
தலைவர், கம்பன் கழகம்

பொருளடக்கம்

தோரண வாயில்*

இம்மண்ணில் தோன்றியுள்ள மானுட உயிர்கள் அறத்தின்வழி நின்றொழுகி, உயர்வான செந்நெறியைக் கடைபிடித்து வாழ்ந்து இம்மைக்கும் மறுமைக்கும் உரித்தாகிய வாழ்வியலை கைக்கொள்வதற்கு வழிகாட்டும் காலக்கண்ணாடிகள் இலக்கியங்களாகும். காலத்திற்கேற்ற வளர்ச்சியும், வளர்ச்சிக்கேற்ற மாற்றமும் சமுதாயத்திற்குத் தேவை என்பதை உணர்ந்து அறச்சான்றோர்களால் அருளப்பெற்ற அருமறைகளாகத் திகழ்பவை தமிழ் இலக்கியப் பனுவல்கள். தமிழன்னையின் திருமேனியில் பட்டொளி வீசிப் பிரகாசிக்கும் பனுவல் மாலைகளில் மனம் மயக்கும் நாற்றமாமலராக விளங்கும் பேறுபெற்றது கவிச்சக்கரவர்த்தி கம்பரின் மகாகாவியம்.

தொட்டஇடமெல்லாம் இலக்கியச்சுவையும், கனிச்சுவையும் தெவிட்ட தெவிட்டக் கம்பநாடரால் படைத்தளிக்கப்பட்ட இக்காவியம் காலங் கடந்து நிற்கும் நிலைபேற்றுத் தன்மையைப் பெற்றுத் திகழ்கின்றது. வான்புகழ் பெற்று உயர்ந்தோங்கும் செந்நெறிகளும், சீர்கெழுச் சிறப்புடைய வாழ்வியல் ஒழுகலாறுகளும், தமிழ்ச் சமுதாயத்தின் தனித்தன்மையாகிய பண்பாட்டுக் கலைவிழுமியங்களும், ஒருசேர ஒளிவீசுவது இதன் பெருமைக்குச் சான்றாகும். இற்றைக்கு 1125 ஆண்டுகளுக்கு முன் திருவெண்ணெய் நல்லூரில் கம்பரால் அரங்கேற்றம் செய்யப்பெற்று, கவியுலகம் 'கவிச்சக்ரவர்த்தி' எனப் போற்றும் பெருமை கம்பருக்குக் கிடைத்தது.

இந்த ஆண்டுக் கம்பன் மலரிலே ஏழு கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. இவற்றுள் 3 கட்டுரைகள் 50 ஆண்டுகளுக்கு முன் வெளிவந்து மீண்டும் பதிப்பிக்கப் பெறாதவையாகும்.

முதல் கட்டுரையாக 'சொல்லின் செல்வர்' ரா.பி.சேதுப்பிள்ளை 80 ஆண்டுகளுக்கு முன் பிரசண்ட விகடன் பத்திரிக்கையில் எழுதிய கட்டுரை. "சிறிய முறுவலும் புதிய முறுவலும் ". அன்னத்தின் நடையழகைச் சீதையின் நடையோடு ஒப்பிட்டு இராமன் சிறிய முறுவல் பூத்ததும், களிறின் நடையை இராமன் நடையோடு ஒப்பிட்டு சீதையின் புதிய முறுவலும் அவரது கைவண்ணத்தால் அழகு பட

அமைந்துள்ளது. இரண்டு முறுவல்களுக்கும் உள்ள வேறுபாட்டை தமக்கே உரித்தான பாணியில் எதுகை மோனைச் சொற்களோடு இதுவரையில் கிடைக்காத புதிய செய்தியைச் சொல்லியுள்ளார். படிக்கப் படிக்கத் தெவிட்டாது.

இரண்டாம் கட்டுரை பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை எழுதியது. 40 வருடங்களுக்கு முன் காரைக்குடி கம்பன் மலரில் வெளியானது. பங்குனி அத்த நாளில் கம்பனின் இராமாவதாரம் அரங்கேறிய செய்தியை நிலைகளனாகக் கொண்டு வான்மீகி, திருவள்ளுவர் இவர்களை முன்னிறுத்தி கம்பன் எவ்வாறு இராமாவதாரத்தை எழுதினான் என்பதை மிகவும் அழகாக தமக்கே உரிய மணிப்பிரவாள பண்டித நடையில் சொல்லுவது நம்மை வியக்க வைக்கிறது.

அடுத்த கட்டுரை கம்பன் அடிசூடி பழ. பழனியப்பன் எழுதியது. கடவுள் வாழ்த்துப் பாடல்கள் கம்பன் எழுதியவைதானா ? என்ற வினாவை எழுப்பியுள்ளார். எப்பொழுதும் எதைப் பற்றிச் சிந்தித்தாலும் சற்று ஆழமாகச் சிந்திக்கும் இயல்பு உடையவர் பழ. பழனியப்பன் ! ஒவ்வொரு காண்டத்தின் கடவுள் வாழ்த்துப் பாடல்களும் காவியப் போக்கிற்கு இயைந்தவையாக இல்லையே என்பதையும், இடைச் செருகலாக வந்திருக்கலாமோ என்றும் வினாவை எழுப்பி சற்று அலசியுள்ளார். கம்பன் ஆய்வாளர்கள் இதைச் சிந்திக்க வேண்டும்.

'என் தெய்வமும் மகனும் - புதிய பார்வை' என்ற கட்டுரை முனைவர் தி. இராஜகோபாலன் அவர்கள் எழுதியது. கைகேயியையும் பரதனையும் தயரதன் துறந்ததை வைத்து, அயோத்தியா காண்டம் முதல் யுத்த காண்டம் வரை குகன், சுக்ரீவன், வீடணன் ஆகியோரைச் சகோதரர்களாக ஏற்றுக் கொண்ட இராமன் மனநிலை எவ்வாறு தயரதனிடமிருந்து வேறுபட்டு நின்றது என்பதை மிகவும் துல்லியமாக சுட்டிக் காண்பிக்கிறார்.

'தூயவன் தயரதன்' என்ற கட்டுரை முனைவர் அகர முதல்வன் கைவண்ணத்தில் வந்துள்ளது. அறத்தையும் தருமத்தையும் வழுவாத தயரதனின் செயல்களை இரத்தினச் சுருக்கமாக

கோடிட்டுக் காட்டி 'வாய்மையும் மரபும் காத்த வள்ளல்' என்பதை நிலை நாட்டுகிறார்.

கம்பன் கண்ட அறமும் பக்தியும் பேரா. அ.ச. ஞானசம்பந்தன் அவர்களின் கட்டுரை, பரந்த அறிவும் விரிந்துபட்ட பல்வேறு இலக்கியங்களின் ஆளுமையும் அவரது கட்டுரையில் காணமுடிகிறது.

அறம், பக்தி இரண்டும் ஒன்றையொன்று சார்ந்திருப்பவை என்பதைக் குகன், இலக்குவன், பரதன் ஆகிய பாத்திரங்களின் மூலம் விளக்கி, காளத்தி வேடன் திண்ணனையும், சிவகோசரியாரையும் எடுத்துக் காட்டி அறமும் பக்தியும் இணை பிரியாதவை என்பதைத் தன்னுடைய வித்தக எழுத்தினால் முத்திரை பதித்துள்ளார். இது 40 ஆண்டுகளுக்கு முன் வெளியான கட்டுரை. மறுபதிப்பு இல்லை.

'கம்பன் கண்ட பெண்மைப் பண்புகள்' என்ற கட்டுரையைக் கம்பன் கழகத் துணைச் செயலர் புலவர் சு.முரளி எழுதியுள்ளார். இராமாயணப் பாத்திரங்களின் பல்வேறு மனநிலைகளைக் கம்பர் எழுதிப் போந்தார். அவைகளில் கைகேயி, கூனி, சூர்ப்பணகை ஆகிய பாத்திரங்களின் உளவியல் போக்கைச் சுட்டிக் காண்பித்திருக்கிறார். உளவியல் நோக்கில் கம்பனைக் காணும் முயற்சி.

மலரில் வெளியாகி உள்ள 7 கட்டுரைகளும் தெவிட்டாத இன்னமுதாக செவி நுகர்க் கனிகளாக இருக்கின்றன. கம்பனைப் புதிய புதிய கோணங்களில் பார்த்துப் படிப்போருக்குத் தெளிவாகக் கொடுத்திருப்பதைக் கண்டு பாராட்ட வேண்டும். மறுபதிப்பு இல்லாத இக்கட்டுரைகள் புத்தக வடிவிலே வந்தால் அனைவரும் பயன் பெறுவர்.

கம்பன் மலருக்கு விளம்பரம் கொடுத்துதவிய நிறுவனங்களுக்கும், தொழிலதிபர்களுக்கும் மலரைச் சிறந்த முறையில் அச்சிட்டுக் கொடுத்த கீதாஞ்சலி அச்சகத்தாருக்கும் எங்கள் நன்றி உரித்தாகுக.

என்றும் கம்பன் பணியில்

நா. நஞ்சுண்டன்

செயலர்

மலர்ப் பதிப்பாசிரியர்

கோவை
12.2.2011

சிறிய முறுவலும் - புதிய முறுவலும்

சொல்லின் செல்வர் பேராசிரியர் ரா.பி. சேதுப்பிள்ளை

சீதையால் இயலுமா ?

இனிய சொற்களால் மக்கள் மனநிலையை ஓர் ஓவியமாக எழுதியமைப்பது உயரிய கவிஞர் இயல்பாகும். மக்கள் மனப்பான்மையை உள்ளவாறுணர்ந்து அதனைக் கற்போர் கண்ணெதிரே அழகுற எழுதிக்காட்டும் கவிஞருள் கம்பர் தலைசிறந்தவர். தேனடைந்த சோலைத் திருநாடு துறந்து கானடைந்த கமலக்கண்ணன் மன நிலையையும் அப்பெருமானைப் பிரியாது பின்னே சென்ற மிதிலை மங்கையின் மனநிலையையும் கம்பர் அறிந்தெழுதும் முறை அறிஞர் மனத்தைக் கவர்வதாகும். அயோத்தி மன்னனது தலைமகனாகப் பிறந்த இராமன் நாடாளும் நற்பதத்தை இழக்க நேர்ந்த விதியை நினைந்து வருந்தினானல்லன். அரசாங்க பாரம் அகன்ற போது அஞ்சன வண்ணனது திருமுகம் அன்று மலர்ந்த செந்தாமரையை வென்றதென்று அருந்தமிழ்க் கவிஞர் கூறுகின்றார். ஆயினும் ஒரு பெருங்கவலை அவ்வீரனது உள்ளத்தை வாட்டி வருத்துவதாயிற்று. மெல்லிய மேனி வாய்ந்த சீதை மரவுரி புனைந்து கானகம் செல்லப் புறப்பட்ட போது மஞ்சு சூழ்ந்த வானம் போல் வீரனது திருமுகத்தில் கவலை பரந்து நிரம்பிற்று. மாளிகையன்றி மற்றோரிடமும் அறியாத திருமகள் கானகத்தின் கடுமையை எவ்வாறு பொறுப்பாளோ என்று ஏங்கினான். அரண்மனையில் அறுசுவை அருந்திப் பழகிய மங்கை கானகத்தில் காயும், கிழங்கும் எவ்வாறு அருந்துவளோ என்று அழுங்கினான். மெல்லிய மஞ்சத்தில் துயிலும் இயலமைந்த மங்கை கானப்புல்லில் எவ்வாறு துயில்வளோ என்று கலங்கினான். பஞ்சிலும், மெல்லியபாவையின் பாதங்கள் கானகக் கல்லில் அழுந்தும் பொழுது எவ்வாறு ஆற்றுமோ என்று வருந்தினான். மந்தமாருதம் தவழும் மாளிகையில் வாழ்ந்த மங்கையின் மாந்தளிர் மேனி கதிரவன் வெம்மையால் எவ்வாறு கருகுமோ என்று உருகினான். குழலும் யாழும் கேட்டுப் பழகிய மங்கையின் செவிகள், களிறுகள் பிளிறுவதையும், ஆந்தைகள் அலறுவதையும் கேட்டு எவ்வாறு ஆற்றுமோ என்று அயர்ந்தான். கான வாழ்விற்குச் சிறிதும் தகுதியற்ற சீதை தன்னுடன் வருவதை நினைந்து நினைந்து வீரன் நெஞ்சம் தளர்ந்தான்.

கணவன் நிழலே கதி

மன்னவன் மனநிலை இவ்வாறிருக்க, கானகம் போந்த மங்கையின் மனநிலை கருதத்தக்கதாகும். கணவனது நிழல்போல் கானகத்திற்குச் சென்ற மிதிலை மங்கை,

மாளிகையையும் மஞ்சத்தையும் மறந்தாள். ஆயத்தையும் அறுசுவை உணவையும் துறந்தாள். கணவனுடன் செல்லும் மங்கைக்குக் காடும் நாடாகவே தோன்றிற்று. கங்கைக் கரையில் களியன்னமும் மட அன்னமும் நடமாடக் கண்டு களித்தாள். காலைப் பொழுதில் கஞ்சம் மலர்வதைக் கண்டு மகிழ்ந்தாள். ஆலைகளில் கரும்பு அறைபடுவதைக் கண்டு ஆனந்தமுற்றாள். இவ்வாறு வழியிலமைந்த புதிய பொருள்களைக் கண்டு களித்து கவலையென்பது சிறிதுமின்றிச் சீதை கணவனுடன் விளையாடிச் சென்றனள்.

அருந்ததிக்கும் ஆசான்

"கருப்பேந்திரம் முதலாயின கண்டாள், இடர்காணாள்
பொருப்பேந்திய தோளனொடு விளையாடினள் போனாள்"

என்று கம்பர் மங்கையின் மனநிலையை மாண்புற உணர்த்திப் போந்தனர். மிதிலைப் பொன்னின் மென்மையறிந்த இராமன், கானகக் காட்சியின் அழகினை இனிய மொழிகளால் எடுத்துரைத்தும், மங்கையின் மனத்தை மகிழ்வித்தனன். மரங்களில் கிளைக்குக்கிளை தாவும் கிளிகளின் அழகையும் கின்னரங்கரின் இசையையும், பொன்னிற வேங்கை நன்மலர் சிந்தும் புதுமையையும் மங்கைக்குக் காட்டி,

"சீலம் இன்னதென்று அருந்ததிக் கருளிய திருவே
நீல வண்டினம் படிந்தெழ வளைந்துடன் நிமிர்வ
சோலை வேங்கையின் கொம்பர்கள் பொன்மலர் தூவி
காலினிற் றொழுது எழுவன நிகர்ப்பன காணாய்"

என்று இயற்கை அழகில் அவள் உள்ளத்தை ஈடுபடுத்தினான். கண்ணினைக் கவரும் வனப்பு வாய்ந்த கானகத்தில் கணவனுடன் வழி நடந்த காரிகையின் மனநிலையை,

"கல்நடு திரள் புயக் கணவன் பின் செல
நல்நக ரொத்தது நடந்த கானகமும்"

என்று கவிஞர் அங்கைக் கனிபோல் அறிவித்துப் போந்தனர். இவ்வாறு நடந்து சென்ற நங்கையின் முகத்தில் மந்தகாசம் மாறாது தவழ்ந்து கொண்டிருந்தது. புத்தமுதம் பொழியும் புனித முகத்தில் புன் முறுவல் பூத்து இலங்கிற்று. கானகத்தின் கடுந்துயர் காணாது களித்து நடந்து வந்த நங்கையின் நிலையை நினைத்து வீரன் மனம் வெதும்பினான். ஆயினும் தான் துயருற்றால், சீதையும் துயருறுவாள் என்றெண்ணி அக்கடுந்துயரை மனத்திற் கரந்து வைத்து,

"மேவு கானம் மிதிலையர் கோன்மகள்
பூவின் மெல்லிய பாதமும் போந்தன
தாவில் எம்பிகை சாலை சமைத்தன
யாவை யாது மிலார்க்கு இயையாதவே"

என்று நினைந்து நினைந்து நெஞ்சம் கரைந்தனன்.

கோதாவரிக்கரை

இவ்வாறு கானகத்தில் நடந்து சென்ற மூவரும் சில நாட்களில் கோதாவரி ஆற்றங்கரையை வந்தடைந்தனர். செஞ்சொற் கவிஞர் உள்ளம் போல் செவ்வையாகத் தெளிந்து விரிந்து பரந்து சென்ற ஆற்றின் அழகைக் கண்டு வியந்தார்கள். அவ்வாற்றின் தெள்ளிய அலைகளையும், அவ்வலைகளில் இனிது அசைந்தாடிய மலர்களின் அழகையும் கண்டு மகிழ்ந்தார்கள். கரையருகே போந்த காதன் மைந்தனைக் கருங்குவளைக் கண்களாற் கண்ட கோதாவரியாறு

"எழுவுறு காதலால் இங்கு இரைத்திரைத்து ஏங்கி ஏங்கி
பழுவநாள் குவளைச் செவ்விக் கண்பனி பரந்து சோர
வழுவிலா வாய்மை மைந்தர் வனத்துறை வருத்தம்நோக்கி
அழுவதும் ஒத்ததால் அவ்வலங்கு நீர்ஆறு மன்னோ"

என்று கவிஞர் கூறுமாறு அழுது மயங்குவது போல் தோன்றிற்று. இவ்வாறு கோதாவரிக்கரையில் காதலர் இருவரும் இனிது செல்லும் போது அவ்வழியாக ஓர் அழகிய அன்னம் ஒதுங்கிச் சென்றது. அவ்வன்னத்தின் நடையையும், தன் காதலியின் அழகிய நடையையும் அஞ்சனவண்ணன் அமர்ந்து நோக்கினான். அப்பொழுது அவன் திருமுகத்தில் சிறிய முறுவல் தோன்றிற்று. இவ்வாறு இராமன் அன்ன நடையை நோக்கி அகமகிழும் பொழுது கோதாவரியாற்றில் நீருண்டு சென்ற ஓர் இளங்களிற்றைச் சீதை கண்டனள். பெருமிதமாக நடந்து சென்ற இளவேழத்தின் நடையைக் கண்ட திருமகள் இராமனது நடையை நோக்கினாள்.

சிறியதும் புதியதும்

அந்நிலையில் அம்மங்கையின் முகத்தில் புதியதோர் முறுவல் பூத்தது. இவ்வாறு இராமன் முகத்தில் தோன்றிய சிறிய முறுவலையும் சீதை முகத்தில் பூத்த புதிய முறுவலையும்,

"ஓதிமம் ஒதுங்கக் கண்ட உத்தமன் உழையளாகும்
சீதைதன் நடையை நோக்கிச் சிறியதோர் முறுவல் செய்தான்
மாதவள் தானும் ஆண்டு வந்துநீர் உண்டு மீளும்
போதகம் நடப்ப நோக்கிப் புதியதோர் முறுவல் பூத்தாள்"

என்று கம்பர் ஓர் அழகிய ஓவியமாக எழுதிப் போந்தனர். மங்கை நடையைக் கண்டபோது, மன்னன் சிறியதோர் முறுவல் செய்தான் என்றும், காதலன் நடைபோன்ற களிற்றின் நடையைக் கண்டபோது திருமகள் புதியதோர் முறுவல் பூத்தாள் என்றும் கம்பர் அமைத்த சொல் நயம் அறிந்து இன்புறத்தக்கதாகும். கானகத்தில் தன் காதலிக்கு என்ன இடர் நேருமோ என்று எண்ணி எண்ணிக் கவலையுற்ற அச்செம்மலது உள்ளம் ஆழம் வாய்ந்த கருங்கடல் போல் அமைந்திருந்தது. அகத்தின் தன்மைக்கு ஏற்ப அப்பெருமானது அழகிய முகமும் அசைவற்றுச் சோலை போல் அமைதியாக விளங்கிற்று. நீர் நிரம்பிய கருங்கடலில் மெல்லிய தென்றல் வீசும் பொழுது அவ்வாழியில் சிறிய அலை தோன்றுவது போல் சீதையின் நடையை நினைந்த இராமனது முகத்தில் சிறிய முறுவல் தோன்றிற்று. ஆயினும் ஆழமாய ஆழியிலெழுந்த சிற்றலை இறைப்பொழுதில் அமைவுற்று அடங்குதல் போல, இராமனது சிந்தனை நிரம்பிய முகத்தில் தோன்றிய சிறிய முறுவல் உடனே அடங்கி மறைந்தது. இளங்காற்று வீசும் பொழுது இலை அசைவுற்று அக்காற்று அடங்கும் பொழுது, மீண்டும் அமைதியுறும் சோலைபோல், மன்னனது முகமும் மீண்டும் சிந்தனையில் ஆழ்ந்தது. இவ்வாறன்றிக் கானகத்தின் கடுமையையுணராது எப்பொழுதும் மந்தகாசம் தவழ்ந்து இலங்கிய மங்கையின் முகத்தில் அப்பொழுது தோன்றிய முறுவல் புதிய முறுவலாய் அமைந்தது. இயல்பாகவே இன்னகை இராமனது முறுவல்போல் தோன்றி மறையாது அத்திருமுகத்தில் நிலைத்திருந்தமையால் புதியதோர் முறுவல் பூத்தாள் என்று கம்பர் நயம்பட எழுதிப் போந்தார். செடி, கொடிகளில் நன்றாய் மலர்ந்து இலங்கிய தன்மையைப் 'பூத்தல்' என்னும் சொல் இனிதுணர்த்துகின்றது. ஆகவே அன்னம் போன்ற சீதையின் நடையை நினைந்த பொழுது சிறிய முறுவல் செய்த செம்மலது தன்மையும் வேழ நடையில் தன் கணவனது விழுமிய நடையைக் கண்டு புதிய முறுவல் பூத்த மங்கையின் தன்மையும், இருவர் மனநிலைக்கும் ஏற்ற முறையில் அமைந்தன.

பீடு நடை

மிதிலைமா நகரில் முதன் முதல் இராமனது பெருமித நடையைக் கண்ட திருமகள் அந்நடையை வேழ நடையோடு ஒப்பிட்டு உள்ளம் தழைத்தமை,

"படர்ந்தொளி பரந்துயிர் பருகு மாகமும்
தடந்தரு தாமரைத் தாளுமேயல;
கடந்தருமாமதக் களிநல் யானைபோல்
நடந்தது கிடந்ததென் னுள்ளம் நண்ணியே"

என்னும் இனிய மொழிகளில் இலங்கக் காணலாம். இவ்வாறு வீரனது நடையை வியந்துரைத்த மங்கை வேழ நடையையும், வீரன் நடையையும் நேராகக் கண்ட போது அகமும் முகமும் மலர்தல் இயல்பேயன்றோ ! கடுமையார் கானகத்தில் கவலையோடு சென்ற கமலக் கண்ணனது மனநிலையையும், கானகத்தில் கணவனுடன் களித்து விளையாடிச் சென்ற மங்கையின் மனநிலையையும், செஞ்சொல் ஓவியமாக எழுதிக்காட்டிய கம்பரது கவிநலம், எஞ்ஞான்றும் எஞ்சாத இன்பம் பயப்பதாகும்.



கம்பன் யார் ?

உள்ளத்தின் ஒளியைக் கூட்டி உணர்வினில் தெளிவை ஊட்டி
கள்ளத்தை இல்லாது ஒட்டி கடமை யோடுரிமை காட்டி
பள்ளத்தில் கிடப்பார் எல்லாம் பதம்பெற அறத்தோடு அன்பு
வெள்ளத்தைப் பாய்ச்சி நிற்கும் விபுதனே கம்பன் என்பான் !

பாரினில் உருவாய் அருவாய் பரந்து பல் நிலையாய் உள்ள
நீரியல் கூறுவான்போல் நிறைபரம் பொருளின் தன்மை
சீரிய முறையில் நந்தம் சிந்தையில் பதியச் செப்பும்
சூரிய ஞானியன்றோ கோக்கவி கம்பன் என்பான் ?

- கம்பனடிப்பொடி சா. கணேசன்

கம்பர் திருநாள்

பேரா. எஸ். வையாபுரிப் பிள்ளை

தமிழிலக்கிய சரிதத்திலே கம்பர் பெருமானது இராமாயண அரங்கேற்றத்தோடு எல்லா வகையினும் ஒத்த சிறப்புடைய பிறிதொரு நிகழ்ச்சி இல்லையெனக் கூறுதலே தகும். இதனோடு ஒருவகையான ஒப்பிடத்தக்கது வள்ளுவப் பெருந்தகையார் தமிழ்-வேதம் அருளிச்செய்த பெரு நிகழ்ச்சியென்பது யாவரும் அறிவர். தெய்வப் புலமைத் திருவள்ளுவரது அறிவின் மாட்சி அதிசயிக்கத்தக்கதே. அவரது பேரறிவு எத்துணைப் பெரியாரையும் தலைவணங்கு மியல்பினது. தேவிற் சிறந்த திருமாலைப் போல, இத்தெய்வப் பெரும்புலவரும் தமது நுண்ணிய மாட்சிமிக்க புலங்கொண்டு அறிவுலகினை முற்ற அளந்து எல்லை கண்டனர். மக்கட்கு உறுதி பயப்பனவற்றை ஆணிமுத்தன்ன செஞ்சொற்களால் தெளித்துத் தந்தருளினர். வாழ்வின் பெருநோக்கங்களை அகன்று கூர்த்து விளங்கும் தமது அறிவினாற்றலாலும் பரந்து கடைபோகிய தமது கல்வி கேள்விகளின் பெருமையினாலும், ஆழ்ந்து சிறந்து முதிர்ந்த தமது அனுபவ வாயிலாலும், நுண்ணிதின் ஆராய்ந்து தெரிந்து தமிழ் மக்கட்கு உதவியருளினர். எவ்வகையினருக்கும் எவ்வகை நிலையினும் துணை நின்றுதவும் அறிவுரைக் களஞ்சிய மொன்றினை அளித்தருளினர் இவ் அருட்பெருஞ் செல்வர். இவர் இயற்றித் தந்த திருக்குறட் பெருநூலிற் காணும் ஒவ்வொரு குறளும் தனித்தனியே செப்பஞ் செய்யப்பெற்றதோர் மணியேயாகும். ஒவ்வொரு குறள்மணியும் உள்ளத்திருள கற்றி யொளிருந் தன்மையது. ஓத இனிதாயும், கேட்க இனிதாயும், உணர இனிதாயும் உள்ளது இத் தெய்வீகப் பெருநூல். இதனை யியற்றியருளிய புலமைத் தெய்வத்திற்குக் கோயிலெடுத்துப் போற்றியும் அவர் திருவவதாரஞ் செய்தருளிய திருநாளினைத் தமிழ்-மக்களது விசேஷ தினங்களுள் ஒன்றாகப் பாராட்டியும் வருவது தமிழுலகத்திற்கு ஓர் பெருமையாகவே என்றும் உள்ளதாகும்.

இத்தெய்வப் புலவரது திருவடிப் பரிசத்தால் தமிழுலகு பரிசுத்த மெய்தியதற்குப் பல நூற்றாண்டுகட்கு முன்பாகவே, அவர் வகுத்தருளியது போன்ற உத்தம வாழ்வின் பெரு விதிகளுக்குத் தனி நிலைக்களமாகிய புருஷோத்தம னொருவனைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று பாரத மாதா பெருந்தவம் புரிந்து வந்தனள். ஆரிய சமுதாயத்தின் மனோபாவனையானது தானறிந்த ஜாதீய-வீரர்களுக்குள் இப்புருஷோத்தமனை கோவைப்படுத்தி அலங்கரிப்பதன் கண்ணும் அநேக

நூற்றாண்டுகளாக முயன்று வந்தது. இம்முயற்சியின் பயன் முதன்முதல் உருவம் பெறத் தொடங்கியது. வால்மீகியென்னும் மஹரிஷியின் காலத்தேதான். ‘ஆதிகவி’ யென்று இப்பொழுது போற்றப்படும் இம் மஹான் தமது அதியற்புத கவித்வ-சக்தியினாலே ஆரியவர்த்தத்தில் பரந்து வழங்கிய அச்சரித்திரங்களை யெல்லாம் ஒருநிலைப்படுத்தி அழகு பெறப் புனைந்து இராமாயணமெனப் பெயர் தந்து இதிஹாஸமாக இயற்றித் தந்தருளினர்.

இம் மஹரிஷியின் காலத்திற்குப் பின்பு, ஆரிய-சமுதாயம் விரிந்து பெருகியது; பரத கண்ட முழுவதும் பரந்து சென்றது. தனித்தனியாய்ப் பலவேறிடங்களில் வாசஞ் செய்து கொண்டிருந்த சமுதாயங்கள் பல ஆரிய சமுதாயத்தோ டொன்றுபடவே, இந்து சமுதாய மென்னும் சிறப்புடைப்பெருஞ் சமுதாயமொன்று பரிணமித் தெழுந்தது. இச் சரித்திர கதிக்குத் தமிழ்ச் சமுதாயமும் உட்பட்டு இந்து சமுதாயத்தின் உத்தம-அங்கங்களுள் ஒன்றாக விளங்கத் தலைப்பட்டது. தனித் தமிழ் மக்கள் உயரிய நாகரிகம் படைத்தவர்; இயற்கை மதி நலம் முதலிய அருஞ் சிறப்புக்கள் பெரிதும் வாய்ந்தவர்; கவித்வ சக்தி நிரம்பவுடையவர். இந்து சமுதாயத்தின் பெருமை இத்தனித் தமிழ்மக்களது கலப்பினால் மிக அதிகரித்தது. அதன் ஆத்மசக்தி உர மிகுந்தோங்கியது; அதன் பாவனாசக்தி வளம் பயின்று விரைவு கொண்டு புதுமை நாடியது; அதன் கவித்வ சக்தி நூற்றுக்கணக்கான விதவித வர்ணங்களுடன் அதி மனோஹரமான ரூப வைசித்திரியங்களாகத் தோற்றஞ்சான்று நின்றது. தமிழ்ப் பண்புமிக்க திராவிட - இந்து சமுதாயத்தின் உள்ளத்தே புதிய உணர்ச்சிகள் கிளர்ந்து பரந்தன; பௌத்தமதம் பரவலுற்றது ; ஜைன - சமயம் நிலைபெற விரும்பிப் பெரிதும் முயன்றது. வைதிக-சமயம் ஆழ்ந்து நிலைகூடி வெற்றியை யெதிர்நோக்கி நின்றது. வீரமுங் காதலும் விளைந்த தமிழ் நிலத்தே இப்பொழுது அன்பும் அருளும் விளைவுபெறத் தொடங்கிற்று. பக்தி ஊற்றுக்கண் திறந்து சுரந்து பெருகுவதாயிற்று. இங்ஙனமாக, இரண்டு ஜீவநதிகள் ஒன்று கூடிப் பெருகி ஓடுவதைப் போல, ஆரியர் நாகரிகமும் தனித் தமிழர் நாகரிகமும் பேதமின்றிக் கலந்து ஒன்றுபட்டுத் தமிழ் நாட்டிலே பிரவஹிப்பதாயிற்று, காலம் விரைந்து சென்றது. நாகரிகக் கலப்பின் ஆரம்பத்தில் நிகழ்ந்த கலகம், பரபரப்பு முதலியனயாவும் நாளடைவில் மறைந்தொழிந்தன. தக்ஷிண இந்து சமுதாய வாழ்வு அமைதியுற்றுச் சென்றது. தமிழ் மக்கட்குரிய மனப்பண்பு, அனுபவம், நாகரிகம், இவற்றிற்குத் தக்கவாறும், காலகதியின் விளைவுக்குத் தக்கவாறும், நூதன சிருஷ்டிகள் முளைத்துச் செழித்தன. பழமையும் பெருமையும் பொருந்திய இருபெரு நாகரிகங்கள் ஒன்றுபட்டதன் முதற் பெரும் பயனாக வள்ளுவரென்னும் புலமைத் தெய்வம் தோன்றித் தமிழ் வேதத்தை அருளிச் செய்து மறைந்து சென்றது. பாரத மாதாவின் கனவு நனவாகுங் காலம் நெருங்கியது.

பன்னெடுங்காலமாக ஆரிய சமுதாயத்தின் உள்ளத்தே ஊறிக்கிடந்து வான்மீகி மஹரிஷியால் உருவமைந்த இராமசரிதம் இப்பொழுது தன் பூர்வகதியை யனு சரித்துத் தக்ஷிண இந்து-சமுதாயத்தின் உள்ளப்பரப்பிலேயும் அழுந்திக்கிடந்து ரஸம் ஊறிக் கனிவதாயிற்று. புதுவதாகிய மனோபாவனையால் புதுக் கோலம் புனையப் பெற்றது. பாரத தேவி அரிதிற் றெரிந்து கொண்ட புருஷோத்தமனது சிறந்த குண விசேஷங்கள் நன்கு புலப்படுமாறு நூதன சம்பவங்கள் அழகுபெறச் சேர்க்கப் பெற்றன. இராமபிரானது அபூர்வ குணாதிசயங்களும், அரிய வீரச் செயல்களும், தியாக புத்தியும், மக்களது உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. இவரது பேரொளித் திருமேனியானது தெய்வ மணத்தாற் கமழ்ந்தது. உயரிய மக்கட் பண்பும், உயரிய தெய்வப்பண்பும் ஒருங்கு சிறந்து விளங்கத் தொடங்கியது. இவரது மஹிமையும் பூர்த்தி யெய்தியது. பக்தி நிரம்பிய நம் மூதாதையர்களது உள்ளத்தே, இராமபிரான் தெய்வமாகவே குடிகொண்டு நின்றனர். இராம சரிதத்தில் வழங்கிய இதர கதாபாத்திரங்களின் குண விசேஷங்களும் சிறிது சிறிது பேதமெய்தின. இராமாயணம் பல வகையானும் செப்பமெய்தி ஜன ஸமூகத்தில் வழங்கலாயிற்று. நாடகமாகவும் நடித்து வரப் பெற்றது. நடிக்கப் பெறவே, இத் திவ்விய சரிதம் புது நலங்கனிந்து துளும்புவதாயிற்று. கல்லிடைகளிலே கசிந்து பிறந்து சிற்றருவியாய்ச் சிற்றோடையாய்ப் பேரருவியாய்ப் பின்னர் நதியாய்ப் பல சிறுநதிகளோடு சங்கமித்துப் பெருநதியாய் இருகரையும் புரண்டு பெருக்கெடுத்தோடும் மாரிக் காலத்துப் பேராறு போல, இராம சரித்திரமும் ஆரிய சமுதாய உள்ளத்தின் அடிப்பரப்பிலே சிறிதளவிற் றோன்றிப் பின் நாளாவர்த்தியில் வரவரப் பெருகி நிரம்பித் தக்ஷிணத்திற் கரை ததும்பிப் பெருக்கெடுத்துச் செல்லுவதாயிற்று. ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன் சமுதாய உள்ளத்தில் இடப்பெற்ற இராம கதையின் வித்தானது முளைத்துச் செழிப்புற வளர்ந்தோங்கித் திண்ணிய கவடுகள் பல திசைதொறும் போக்கிப் பசேலெனத் தழைத்துத் தண்ணிழல் பரப்பி வானளாவி நின்று தனது பூர்ண-ஆகிருதியை யடைந்தது. தக்ஷிண இந்து-சமுதாயத்தின் உள்ளப் பரப்பிலே கருத்துலகிலே-இராம சரிதம் மேற்கூறியவாறு அங்க-பரிபூர்த்தியை யெய்திய போதிலும், வாசாரூபமான காவியவுலகிலே தக்க கோலத்தோடு வெளிப்பட்டுத் தோன்றவில்லை. வாசா ரூபமாகப் பலப்படுவதற்கு உத்தமப் பெருங்கவிஞ னொருவனை அவாவி நின்றது.

இந்நிலையிலே, தென்னாடு செய்த அருந்தவத்தினாலும், தமிழன்னை பன்னெடுங்காலமாகத் திரட்டி வைத்த அரும்புண்ணியத்தின் பெரும்பயனாலும் கம்பர் பெருமான் தோன்றியருளினர். அவரது ஜனனத்தைத் 'தெய்வத் தோற்றம்' என்று தான் விசேடித்துக் கூறவேண்டும். பிரகிருதி தேவி தனது அருள்வளம் அனைத்தையும் இவர்பால் வரையாது பொழிந்தனள். 'கருவிலே திருவுடையவர்' என்பதற்கு இவரிடத்தன்றி யேனையோர்பால் பொருள் நிரம்பக் காணுதலரிது. இயற்கையிலேயே

பேர் அறிவு படைத்தவர். 'தொட்டனைத்தூறு மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத்தூறு மறிவு' என்பது பொய்யாமொழியாகலின், தம் காலத்து வழங்கிய அருங்கலைகள் அனைத்தையும் முற்றக் கற்றுத் தமது அறிவினது அளவினையும் ஆற்றலையும் முன் பின் ஒப்பின்றிப் பெருக்கிக் கொண்டனர். தமது தாய் மொழியை முற்றக் கற்றதனோடு அமையாது, வடமொழிப் பயிற்சியும், நிரம்ப வாய்ந்து விளங்கினர். தம்மோடு ஒப்பாரு மிக்காரு மில்லாத பெருங்கல்வியாளராய்ப் புலமை முற்றிய காரணத்தினாலே, 'கல்வியிற் பெரியவன் கம்பன்' என்னும் முதுமொழி காலதேச வர்த்தமானத்தால் அளவு படாத வோர் பொதுவுண்மையாய் வழங்குதலாயிற்று. உணர்ச்சி-வலி முதலிய பிற மனநலங்களும் இவர்பால் நிரம்பியிருந்தன. மக்களது உள்ளமாகிய வீணையில் எத்தனை வகையான உணர்ச்சி பேதங்கள் எழக்கூடுமோ அவையனைத்தும் தமது சங்கற்ப மாத்திரையினாலே எழுந்து இனிது சப்திக்கச் செய்யும் பேரிசையாண்மை பெற்றனர். அகத்தும் புறத்தும் காணப்படுகின்ற சௌந்தர்ய வைபவங்கள் அனைத்தையும் நுண்ணிதிலுணர்ந்து ஆழ்ந்தனுபவித்து ஆனந்த சரீரியாய்த் தோன்றினர். இவரது பாவனாசக்தி எல்லையின் அகன்று பரந்தது; கொள்ளக் குறையாத பெருங்கடல் போன்றது; எவ்வுலகத்தினுஞ் சென்று சஞ்சரிக்க வல்லது; எவ்வகைப் பொருளினையும் எவ்வகை நிலையினையும் மனக் கண்முன்னே தெளிவாய்ப் புலப்படுத்துச் சித்திரிக்கும் சிறப்பியல் வாய்ந்தது. அறிவின் பெருமையினாலும், உணர்வின் பெருமையினாலும், பாவனா சக்தியின் பெருமையினாலும், இவரது கவித்வம் முதிர்ந்து கனிந்தது. ஸ்வரங்களும், ராகங்களும், வர்ணங்களும், கீர்த்தனங்களும் ஒன்றின்மேலொன்றாய்ப் படிப்படியாய் இசைச் செல்வத்தோடு பொங்கி வருதற் பொருட்டு நலம் நிரம்பி நின்ற வீணை போல, இவரது பண்பு மிக்க உள்ளந்தானும், கவித்வ சக்தியின் வேகத்தால் பண்கனிந்தூறும் இனிய கருத்துக்கள் அடுத்தடுத்தெழுந்து ஒன்றோடோன்று இசைந்து நவநவமான கானவிலாசத்துடன் ஒழுகிவரும் பக்குவமெய்திற்று. மதுரமிக்க இவ் இருதய கானத்தை யுணர்த்துதற்கென்றே அமைந்த தென்னலாம் இவரது அரிய சொற் செல்வம். தமிழணங்கு இவ் அருந்திறற் பெரியாரது குறிப்புணர்ந்த மாத்திரையில், அவர் விரும்பிய வண்ணம், இன்சுவை கனிந்த நன் மொழியினைத் தட்டின்றி யுதவிவரக்காத்து நின்றனள். தமிழ் மொழியின் இனிமையினையும், அழகினையும், ஆற்றலையும், இவர்போல் முற்ற உணர்ந்தார் பிறர் யாரும் இல்லையென்றே கூறலாம். தமிழ் மொழி இவரது தனியரசினுக்கு அன்புற்றடங்கி நின்று குற்றேவல் புரிகுவதாயிற்று.

இங்ஙனம் உத்தமப் பெருங்கவிஞர்க்குரிய உத்தம லக்ஷணங்க ளனைத்தும் ஒருங்கு நிரம்பி விளங்கினர் கம்பர் பெருமான்.

பாரத தேவியின் அருந்தவம் முற்றுப் பெறுங் காலமாயிற்று. அவ்வம்மை பல நூற்றாண்டுகளாக ஆசையொடு எதிர்நோக்கியிருந்த ஸம்பூர்ண-ராமபிரானை வாசாரூபமாக உலகினர்க் களிக்கக் கம்பர் பெருமான் திருவுளம்பற்றினர். எத்தகைய மங்கல நன்னாளில் நமது கவிஞர் இங்ஙனம் எண்ணித் துணிந்ததென யாவரால் அளவிட்டுரைக்கத் தகும் ! தம்முயிர் போற் கம்பர் பெருமானைப் பாதுகாத்துத் தமக்கும் தமிழ்க்கும் அழியாப் புகழ் தேடிக்கொண்ட சடையப்ப வள்ளலார் தூண்ட இராமசரிதம் பாடுங்கருத்து எழுந்த தெனச் சிலர் கூறுவர். ஆனால் இத் தெய்வமாக் கதையைப் பாடவேண்டுமென்று கம்பரது உயிரே அளவு கடந்த ஆசை கொண்டிருந்தது என்பது தான் உண்மை. 'ஆசைபற்றி யறையலுற்றேன்' என்றே நமது கவிஞர் சிகாமணியும் நமக்கு உணர்த்துகின்றார். பிறர் யாரேனும் வேண்ட இத்தெய்வ நறுங்கனி ரஸம் ஊறிப் பழுத்ததாகமாட்டாது. மேலும், இப்பெருங்கருத்துக் கம்பரது இளமைப் பிராயத்திலேயே அவரது திருவுள்ளத்தில் தோன்றியிருத்தல் வேண்டும். இளமைதொட்டே தம்மை இராமாயணத்திற்கெனத் தத்தஞ் செய்தனர். தமது வாழ்வின் தனிப் பெருநோக்கம் இராம காதையை யியற்றுதலே யென்று கடைப்பிடித்தனர். இவரது சிந்தை இராமசரிதத்தையே சுற்றிச் சுழன்றது; இவரது சொற்கள் யாவும் இராம சரித்திரம் பற்றியே விளைந்தன; இவரது செயல்கள் யாவும் இராம சரிதத்தை முற்றுவிக்கும் பொருட்டே எழுந்தன.

'ஆரே யெனுமொன்று சொல்லத் தொடங்கினு மவ்விடத்துன்
பேரே வருமென் பேறுபெற்றேன் பெரு நான்மறையின்
வேரே மிதிலையின் மின்னெடும் போய் வெய்ய கானடைந்த
காரே கடல்கொளுந்தச் சிலைவாங்கிய காகுத்தனே'

என்ற அழகிய செய்யுளின் பொருள் கம்பர் பெருமானது திருவுள்ளத்தன்மையை நினைக்கும் பொழுதுதான் நமக்குப் புலப்படுகின்றது.

'உண்ணும் நீருணு முயிரினு மவனையே யுகப்பார்'

என்ற தெய்வத் திருவாக்கின் இன்னிசையிலே நமது மனம் கட்டுண்டு கிடப்பதன் காரணம் இப்பொழுதுதான் நாம் அறிகின்றோம். இவரது அகன்று பரந்து அக உலகிலே இராம சரிதமொன்றே தனியாட்சி புரிந்து வந்தது. காலம் அளவு முதலிய வரையறையின்றிச் செவிநுகர் கனிகளைச் சொரிந்து தரவல்ல கம்பரென்னும் கற்பக தருவினை, அது வெயில் முதலியனவற்றால் வாடி வருந்தாதபடி, நீர்பெய்து பாதுகாத்து வந்த சடையப்ப வள்ளலார் தாமும் இராம சரிதத்திற்கு அடுத்தபடியாகவே நம் கவிஞர் பெருமானது அன்பிற்குரியராயினர். பல வருஷங்களாக, இரவும் பகலும், இராமாயண

விஷயத்தையே கம்பர் சிந்தனை செய்து வந்தாராதல் வேண்டும். கதைப் போக்கினை அழகுபெற ஒழுங்குபடுத்துதலினும், பலவேறு கட்டங்களில் நிகழும் சம்பாஷணைகளின் முக்கியாம்சங்களைத் தெரிந்தெடுத்து அழகுபடுத்துதலினும், கதாபாத்திரங்களின் குண விசேஷங்களை அவ்வவர்க்குரிய சொற்செயல் முதலியவற்றால் விளங்க அமைப்பதிலும், இவர் வாழ்வு காலத்தின் முற்பகுதி கழிந்திருத்தல் வேண்டும். இராம சரிதம் என்னும் புண்ணிய தீர்த்தத்திலே இவர் தோய்ந்து தோய்ந்து அதன் கண் தம்மை ஊறவைத்திருத்தல் வேண்டும். தம்மை இராம சரித மயமாக மாற்றியிருத்தல் வேண்டும். பலரும் இவரைப் பித்தரெனவும் பேதை யெனவும் கூறுமாறு தமது உளங் கோயில் கொண்ட தெய்வப் பெருஞ் சரிதத்திலே ஈடுபட்டுப் பக்தராய் விளங்கினர்.

"பித்தர் சொன்னவும், பேதையர் சொன்னவும்
பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ !"

என்று நம் கவிஞர் பெருந்தகை கூறுவதன் குறிப்பு உணரத் தக்கது. இவர் தம் பெருங்காப்பியத்தைப் பாடியது பிறரது ஆணையை மேற்கொண்டன்று: பிறர் கேட்டு உளங்குளிரும் பொருட்டு மன்று; தமது ஆத்ம-தாகத்தைத் தணிக்கும் பொருட்டுத் தாம் பெய்துகொண்ட கானவர்ஷமேயாகும் இவரது 'இராமாவதாரம்'. இப்பெருந்தகையாரது கவித்வ சக்தி இராம சரித்திரத்தை அலங்கரித்தற் பொருட்டாகவே அரும்பி மலர்ந்து ஒளி சிறந்து மணங்கமழ்ந்து விளங்கியதாகும். இத்தெய்வகீதத்தைப் பாடுதற்பொருட்டாகவே அமைந்து நின்ற ஓர் அரும்பெறல் வீணையென்று நம் புலவர் பெருமானைக் கூறின் அது மிகவும் பொருத்தமுடையதேயாகும்.

இராம காதையைப் பாடுதற்கெனத் தம்மைப் பக்குவப்படுத்தி அவ் அருஞ்செயலினை மேற்கொள்ளுதற்கண்ணே தாம் ஈடுபட்டிருந்த போதிலும், கம்பர் பெருமானது உள்ளத்தில் இடையிடையே சிறிது தளர்வு தோன்றாமற் போகவில்லை யென்று கருதற் கிடமுண்டு. வான்மீகி மஹரிஷியின் பெருமையை நன்குணர்ந்தார் யார்தாம் அவரோடு கவிதையில் இகலி வெற்றி கொள்ள மனமொருப்படுவர் ? பாடுதற் கமைந்த தெய்வசரிதத்தின் பெருமையை நன்குணர்ந்தார் யார்தாம் அச்சரிதத்திற்குத் தமது கவித்வ-சக்தி போதிய தாகுமென இறுமாந்திருப்பர் ? இவ்வகைத் தளர்வு தோன்றியிருத்தல் வேண்டுமென்பதற்கு,

"நொய்தி னொய்ய சொல் நூற்கலுற் றேனெனை
வைத வைவின் மராமரம் ஏழ்துளை
எய்த எய்தவற் கெய்திய மாக்கதை
செய்த செய்தவன் சொன்னின்ற தேயத்தே."

என்னுஞ் செய்யுள் சான்றாகும். இங்ஙனம் மனந்தளர்ந்த காலங்களிற் சடையப்பவள்ளலாரே நமது கவிஞர்க்கு ஊன்றுகோலாயுதவினர். தம் உயிர் நண்பரது கவித்வ சக்தியின் பெருமையைப் பலவாறாக அறிந்த சடையப்பர் அவரை அடிக்கடி யூக்கி மனத்தளர்வகற்றி இராம சரித்திரம் பாடுஞ்செயலினை மேற்கொள்ளச் செய்திருத்தல் வேண்டும். இதனை யடிப்படையாகக் கொண்டே இராமகாதை சடையப்ப வள்ளல் தூண்டலாற் பாடப்பெற்ற தென்னும் பரம்பரை வரலாறு எழுந்ததாகல் வேண்டும்.

தமது கவித்வ சக்தியின் பெருமையினாலும் சடையப்பரது அன்பினாலும் கம்பர் பெருமானின் உள்ளத்தில் ஏகதேசமாய்த் தோன்றிய தளர்வு அறவே நீங்கியது. தோன்றாத் துணையாய் நின்று உலகனைத்தையும் இயங்கச் செய்யும் இறைவனது திருவருளால் நமது கவிஞர் பெருந்தகையின் சிந்தை செயலாகப் பரிணமித்தது. இராமாயண கானம் இனிதெழுந்து சப்திக்கத் தொடங்கிற்று. பாரத மாதாவின் தவமுற்றி அவளது உயிராசை நிரம்புவதாயிற்று. அவள் மனத்திற்குகந்த புருஷோத்தமன் என்றும் அழியாத வாசாரூபத்தில் தோன்றுவானாயினான். இராமாவதாரப் பேரிதிஹாஸம் உருப்பெறலாயிற்று. பல நூற்றாண்டுகட்கு முன்னர் நிகழ்ந்த இவ் அரிய சம்பவம் இப்பொழுதும் நம்மால் அன்போடும் மகிழ்ச்சியோடும் நினைந்து இன்புறத்தக்கதா யுள்ளது. கம்பர் பெருமானோடு உடனுண்டுறைந்து அவரைத் தம்முயிரினு மேலாகப் பாதுகாத்து வந்த சடையப்ப வள்ளலார் எத்துணை யன்போடு இப்பெருநிகழ்ச்சியைப் போற்றியிருத்தல் வேண்டுமென அறிதல் கூடுமோ ? அவரது அன்பின் திறம் யாவரால் உணரத் தக்கது ! ‘அன்பெனப தொன்றின் றன்மை யமரரு மறிந்த தன்றால்’ என்று கம்பர் தாமே அருளிச் செய்தது தமது ஆருயிர் நண்பராகிய வள்ளலது பேரன்பினை மனத்தகத்துக் கொண்டே போலும்! சடையப்ப வள்ளல் தம் ஊர்ப்புறத்துள்ள ஓர் அழகிய பூஞ்சோலையிலே அவரது அன்பே வடிவெடுத்தாற் போன்ற பெருமை வாய்ந்த மணி மண்டப மொன்று வனப்புத் தோன்ற அமைத்தனரென்று நாம் கருதல் வேண்டும். அப்பூஞ்சோலையிலே பிரகிருதிதேவி நிச்சப்தமாய் அமைதியுற்று விளங்குகின்றாள். மணி மண்டபத்தினுள்ளே கம்பர் பெருமான் அறிவும் அன்பும் கவித்வசக்தியும் தமது திருமுகமண்டலத்தே ஒளி சிறந்து தோன்ற நடுவிருந்தருளுகின்றார். சிறிது தூரத்தே விரைந்தேற்குஞ் செவியும் சோர்வறியாத ஞாபகமுடைய தமிழறிஞர் பலர் ஏடும் எழுத்தாணியுங்கொண்டு இவரைச் சூழ்ந்திருக்கின்றனர். வாயிற்படியினருகே சடையப்ப வள்ளலார் ஓர் ஆசனத்தின் மீது அமர்ந்தருளியிருந்து எவ்வகை யிடையூறும் எய்தா வண்ணம் கவலையொடு நோக்கி அன்பூண்டு விளங்குகின்றார். பூஞ்சோலையிலே அந்நியரது வரவு தவிர்க்கும் பொருட்டுக் காவலாளர்கள் நிற்கின்றனர். தமிழார்வம் தாங்கலாற்றாத

தமிழ்ச் செல்வர் சிலர் தமது ஆசை யிழுத்துச் செல்லுதலால் அறிமுகமுள்ள காவலாளரைக் கடந்து சென்று மணி மண்டபத்தருகில் வந்து இராம சரிதமாகிய கீதவமுதைச் செவிமடுத்தற்கு ஒற்றியிருந்தனர். 'உலகம் யாவையும் தாமுள வாக்கலும்' என்னும் பொருள் நிரம்பிய மதுரத் திருவாக்கு நமது கவிஞர் சிகாமணியின் இதயத்தினின்றும் பொங்கியெழுந்தது. மணிமண்டப முழுவதும் நிறைந்து பூஞ்சோலையிற் பரந்துலவி மக்களிதயத்தே குடிகொண்டு நின்றது இத்தெய்வத் திருவாக்கு. ஏடெழுதும் ஒலி கேட்கலாயிற்று. கம்பர் பெருமானது திருவுள்ளம் இராமாயண-கீதமாகக் கரைந்து பெருகி ஏட்டிற் பிரவஹித்துப் பாய்குவதாயிற்று.

இங்ஙனம் தொடங்கிய இராமாவதாரம் முற்றுப் பெறுதற்கு வருஷங்கள் பலப்பல சென்றிருத்தல் வேண்டும். சிறந்த ஆங்கில கவிஞரும் நுண்ணிய ஆராய்ச்சியாளருமாகிய கோலரிட்ஜ் என்பவர், பத்து வருஷ காலம் இதிஹாஸப் பொருளினைக் குறித்துக் கவிஞர் சிந்தனை செய்வதற்கும் பத்து வருஷ காலம் அதை எழுதி முடித்தற்கும் ஆக, இருபது வருஷ காலமேனும் ஓர் இதிஹாஸம் பாடி முடித்தற்கு வேண்டப்படுமென்று ஒரு வகையாற் கணக்கிடுவித்தனர். ஆனால், இங்ஙனம் கணக்கிடும் போது கம்பரது இராமாவதாரம் போன்ற பேதிரிஹாஸத்தினை அவர் கனவிலும் நினைத்திரார் என்பது திண்ணம். மில்டன் எழுதிய 'சுவர்க்க நீக்கம்' என்னும் ஆங்கில இதிஹாஸத்தினையும், ஹோமர், வர்ஜில் முதலானோரது இதிஹாஸங்களையும் மனத்திற்கொண்டே மேற்கூறிய காலவரையறை செய்திருத்தல் கூடும். சுவர்க்க நீக்கத்தினைக் காட்டினும் இராமாவதாரம் நான்மடங்கு பெரிது. அதனை யெழுதி முற்றுதற்கு 40-வருஷங்களேனும் முன் குறித்த கணக்கின்படி வேண்டுமெனக் கருதலாம். இங்கே ஒரு விஷயம் மனங்கொள்ளுதற்குரியது. மேல் நாட்டுக் கவிஞர்கள் கவிதை எழுதும் முறை வேறு; நமது நாட்டுக் கவிஞர்கள் கவிதை எழுதும் முறை வேறு. மேல்நாட்டுக் கவிஞர்கள், தமது மனத்தின் கண் கவிதை தோன்றியவுடன், அதனைத் தாமே யெழுதிக் கொள்ளுதல் பெருவழக்காகும். இதனால் கவிதைப் பிரவாஹமானது இடையீடின்றிச் செல்லுதற்குச் சிறிது முட்டுப்பாடு உளதாகின்றது. கவித்வ ஆவேசம் நிலைநின்று விளங்குவதற்கும் சிறிது தடை ஏற்படுதல் கூடும். நமது நாட்டுப் பெருங்கவிஞர் கவிதைகள் தோன்றத் தோன்றச் சொல்லி வருதலும் அவர்களின் மாணாக்கர்களும் பிற தமிழறிஞர்களும் உடனிருந்து அவற்றை ஏட்டில் எழுதிக் கொள்ளுதலுமே பெருவழக்காக ஏற்பட்டுள்ளது. கவிதைகள் எத்துணை விரைந்து பெருகிவரினும் ஏடேழுதுவோர் அவற்றை வரன் முறையே ஒவ்வொன்றாகப் பங்கிட்டுத் தமது திண்ணிய ஞாபக சக்தியால் விரைந்து எழுதி வந்தனர். அன்றியும் விருத்தம் முதலிய தமிழ்க் கவிதை இசையோடு கலந்தன்றித் தோன்றுதலில்லை. இவ் இன்னிசை இடையீடின்றிச் செய்யுட்கள் விரைந்து வருவதற்குப் பெரிதும் அநுகூலம் செய்கின்றது. இங்கே கூறிய இரண்டு காரணங்களாலும்

கோல்ரிட்ஜ் கணக்கிட்ட முறை நமது நாட்டிற்குப் பொருந்துமாறில்லை. இராமாவதாரம் பாடி முடிதற்கு இத்தனை வருஷங்கள் ஆகியிருத்தல் வேண்டுமென நிச்சயமாய் வரையறுத்துக் கூறுதல் ஏலாது. எனினும் ஒன்று மாத்திரம் ஐயமின்றிக் கொள்ளுதல் தகும். அறிவு, அனுபவம், கல்வி, கவித்வம் ஆகிய இவையனைத்தும் முதிர்ந்து விளங்கிய தமது வாழ்வின் உச்ச காலத்தை இராமாவதாரத்திற்கெனக் கம்பர் அர்ப்பணஞ் செய்தனரென்பதே உண்மையாகும். தினமொன்றுக்கு 700 செய்யுட்கள் வீதம் இரண்டு வாரத்திற்குள் இராமாயணம் பாடி முடிந்த தெனவும், இத்தினங்களிலே இரவுகள் யாவும் வான்மீகி-இராமாயணம் பொருள் கேட்டலிலே கழிந்தன வெனவும் சிலர் கூறுவர். இதனை,

> "அபிநவ கவிநாதன் விழுந்த நாயிற் றெழுவதன்
> முன்மறை வேதியருடனாராய்ந்
> தெழுந்த நாயிறு விழுவதன் முன்கவி பாடின தெழுநூறே"

என்ற செய்யுள் ஆதரிப்பதாமென்றுங் காட்டுவர். இவ்வரலாறு முற்றிலும் அசம்பாவிதமாயுள்ளது. உணவருந்துதல் முதலிய அவசிய கர்மங்களால் இடையீடுபடாது இராமாவதாரம் பாடப்பெற்றதெனக் கொள்ளினும் நிமிஷம் ஒன்றிற்குச் செய்யுளொன்றும் வீதம் பாடப்பெற்றதாகல் வேண்டும் ! அன்றியும் மேற்காட்டிய செய்யுள் ஏட்டுப் பிரதிகள் பலவற்றிற் காணப்படவில்லை. பிற்காலத்தே கதை பெருக்குவோர்களால் இது பாடப்பெற்றதாகல் வேண்டுமெனக் கருதுதல் தகும். மேலும் நூலினகத்து ஆழ்ந்து கிடக்கும் சில சான்றுகளும் இவ்வரலாற்றினை அநாதரிக்கின்றன. கடைசியாக, இராமாயணம் போன்ற பெருங்காவியம் பிறக்கும் கவித்வ-தத்துவத்திற்கு இவ்வரலாறு முற்றிலும் மாறாகவுள்ளது. இக்காரணங்களால் மேற்காட்டிய செய்யுள் சிறிதும் கொள்ளத்தக்கதன்று. ஆனால் இச்செய்யுள் குறிக்கும் வரலாறு மிக அரியதோர் உண்மையினை யறிவுறுத்துகின்றது. கவித்வ-ஆவேசம் நிரம்பி உணர்வு மயமாய்க் கம்பர் பெருமான் விளங்கிய அமயங்களில் இராமாவதாரம் பாடப்பெற்றதாகும். அவ் அமயங்களிற் கவிதைப் பிரவாஹம் சிறிதும் இடையீடின்றிப் பெருகிப் பாய்ந்து, கம்பீரமாயோடும் பெரு நதிபோன்று, விரைந்து சென்றது. இதனையுணர்த்தும் அத்துணையே மேலைச் செய்யுள் உண்மையுடையதாகும்.

வருஷங்கள் சில சென்றன. இராமகாதை முற்றுப் பெற்றது. சம்பூர்ண-ராம பிரான் வாசாரூபமாகத் தமிழ் நாட்டில் திருவவதரித்துப் பாரதமாதாவின் திருவுளத்தை மகிழ்வித்தனன். கம்பர் பெருமான் தமிழுலகிலே தோன்றியதன் பயன் இனிது முற்றியது. அவரது ஆன்மா இராம சரித-வடிவமாய் உருவெடுத்து விளங்கியது. தமது இராமகாதையினைத் தமிழ் மக்கட்குப் பொதுவுடைமையாகவும் குலதனமாகவும் அரங்கேற்றி ஈந்தருளுவ தொன்றே அவராற் செயற்பாலதாய் எஞ்சி நின்றது.

புண்ணிய தினமொன்று தெரிந்து கொள்ளப்பட்டது. கம்பரது இதிஹாஸத்தில் நாயக நாயகிகளுக்கு விவாஹ மஹோத்ஸவம் நிகழ்ந்ததாகக் கூறும் பங்குனி யுத்தரத்தின் மறுதினமாகிய பங்குனியத்த நாளே மிக்க பொருத்தமுடைய தினமாகக் கொள்ளப்பட்டது. ஸ்ரீ ரங்கநாதரது திருச்சந்நிதியே* அரங்கேற்றுதற்குரிய இடமாயமைந்தது. சடையப்ப வள்ளலாரால் அழைக்கப்பெற்ற தமிழ்நாட்டுப் புலவர் சிகாமணிகளும் பிரபு சிகாமணிகளும் அரங்கேற்று மண்டபத்தில் வரன் முறையே வீற்றிருந்தனர். பக்தர் குழாங்கள், பள்ளத்துப் பாயும் நன்னீர் போல, நானா திசைகளினின்றும் வந்து சூழ்ந்தனர். பண்டிதர்களும் பாமரர்களும் இடம்பெறாதுமிடைந்து நெருங்கினர். மண்டபத்தின் அகத்தும் புறத்தும் புடைசுற்றித் தமிழ் மக்கள் திரண்டு கூடினர். அதன் நடுவே சிறிது உயரிய பீடத்தின் மீது கம்பர் பெருமான் எழுந்தருளியிருந்தனர். +அவரது திருமுகத்தே பேரறிவும் ஆழ்ந்த சாந்தியும் பெருங்கவித்வ சக்தியும் நர்த்தனம் புரிகின்றன; அவரது நயனங்கள் ஆழ்ந்தகன்று உள்ளமனைத்தையும் ஒருங்கு தோற்றி விளங்குகின்றன; நோக்குவோரை யெல்லாம் வசீகரித் தமைகின்றன; அன்பு அலையெறிந்து படர்கின்றது. அறிவு கூர்த்து விளங்குவதனை யொப்ப அவரது நாசியும் நீண்டு கூர்ந்திருக்கின்றது. அவரது உதடுகள் இளநகையரும்பி விகசிக்கின்றன. அகன்ற மார்பும் திரண்ட புயமும் பேரழகு பயக்கின்றன. அவரது தடக்கைகள் தாள்களைத் தொட்டு நீண்டிருக்கின்றன. அவரது திருமேனி முழுவதும் தெய்வவொளி பரந்து சுடர்கின்றது. இப்புலவர் பெருமானையடுத்து யாரினுமினிய பேரன்பினராகிய சடையப்ப வள்ளல் வீற்றிருக்கின்றனர். கருணையின் நிலயம்; கவிஞரின் புகலிடம்; தமிழ்நாட்டுப் புலவர்கள் பல காலமாக ஈட்டி வந்த புண்ணியம் அனைத்தும் ஒருங்கு திரண்டு வடிவெடுத்து வந்தாற்போன்று அமைந்திருக்கின்றனர். அகக்கண் கொண்டு நுனித்து நோக்குவோமாயின் வேறு சில அற்புதக் காட்சிகளும் காணலாகும். தெய்வ கணங்கள் களி சிறந்து குலவுகின்றன. பாரத தேவி எல்லையற்ற சாந்தியுடனும் எல்லையற்ற ஆனந்தத்துடனும் விளங்குகின்றாள். அவளது திருமுக மண்டலத்தைச் சுற்றியிலகும் சோபாவலயத்தினூடே உளத்து நின்றும் பொங்கிவரும் களிப்பின் சிற்றருவி மெல்லென வீழ்ந்து ஒழுகுகின்றது. இத்தேவியை யடுத்துத் தமிழன்னை அழகு சிறந்து ஒளிருகின்றாள். அவளது திருமுடி மீது நூதனமா யமைக்கப் பெற்றதும் விலையற்ற

---

* திருவரங்கத்திலே கம்பர் தமது காவியத்தை அரங்கேற்றியதாகக் கூறுவர். அரங்கநாதன் சந்நிதி வெண்ணெய் நல்லூரிலுள்ள தென்று கொள்ளும்படி 'எண்ணிய சகாத்தம் என்னுஞ் செய்யுள் அமைந்திருக்கின்றது.

+ திருவரங்கத்திலுள்ள கற்சிலையொன்று கம்பர் பெருமானது திருவுருவமாகச் சிலராற் கருதப்படுகின்றது. இங்ஙனம் கருதுதற்கு ஆதாரம் யாதுமில்லை. இக் கற்சிலை கம்பர் திருவுருவன்றெனப்பதே உறுதி.

இரத்தினங்களால் இழைக்கப் பெற்றதுமான கிரீடமொன்று குளிர்ந்த ஒளி பரப்பி நிலவுகின்றது; அவளது செந்தாமரைக் கண்கள் கருணைநில வெறித்து மிளிர்கின்றன. திருமேனி முழுவதும் அன்பின் செழுமையால் பொடித்துத் துடிக்கின்றது. ரிஷிகணங்கள் ஒருபால் குழுமியிருந்தனர். அவருள்ளே வால்மீகியும் வள்ளுவரும் தலைமை தோன்ற விளங்குகின்றனர். ஆதிகவியாகிய மஹரிஷியின் சிரத்தின் மீது சடைமாமகுடம் இலங்குகின்றது. இராம கதாம்ருதத்தை உலகிற் கருளிய அவரது தெய்வத் திருவதரத்தின் கீழ் முதுமையாற் பஞ்செனவெளுத்துத் தோன்றும் தாடி நீண்டு அடர்ந்து பொலிகின்றது. அவரது ஆழ்ந்து தெளிந்த கண்களிலே கவித்வ வொளி இன்னும் நிரம்பிப் பிரகாசிக்கின்றது. ம்ழித்த சிரமுடையவராய்ச் சாந்த மூர்த்தியாய் அமர்ந்திருக்கின்றனர் வள்ளுவப் பெருந்தகையார். பேரறிவும் பேரருளும் அவர் கண்களிற் கனிந்து இலங்குகின்றன. தமிழ்த் தாய் வயிற்றில் தம்மோடு உடன் பிறந்த கவிஞர் பெருந்தகையார் மீது அவரது அளவு கடந்த காதல் படர்ந்து செல்லுகின்றது. அவரது துரிசிலாத் திருமனத்தே இன்று சிறிது கர்வம் இடம் பெற்றிருப்பது போலத் தோன்றுகின்றது.

அரங்கநாதன் சந்நிதியில் இத்துணை விசேஷமான திருக்கூட்டம் என்றும் இருந்ததே இல்லை யெனலாம். யாண்டும் கண்கள் ! யாண்டும் செவிகள் ! அனைவரும் ஏகாக்கிர சித்தராய்க் கம்பர் பெருமானை நோக்கிய வண்ணமா மிருக்கின்றனர். 'ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள அளப்பருங் கரணங்கள் நான்கும் - சிந்தையேயாக' என்ற அருமைத் திருவாக்கு எத்துணை யுண்மையுடையதென இன்று ஒருவாறு அறியலாகும். குறித்த அமையம் நெருங்கிற்று. உலகமனைத்தையும் ஆக்கியளித்துத்துடைத்தலையே தனது திருவிளையாட்டாகவுடைய பரம்பொருளை நெஞ்சுற வழுத்திக் கம்பர் தமது இதிஹாஸ கீதத்தைப் பாடி அரங்கேற்றலாயினர். உள்ளத்தை யுருக்கி யுருவஞ் செய்ததுபோலத் தோன்றிய கம்பர் பெருமானது கம்பீரத் தொனி மண்டப முழுவதும் பரந்து சென்றது; கேட்டோர் இதயத்தினின்றும் எதிரொலி யெழுந்தது. இராமாயணமாகிய அமுத கீதத்தில் ஆண்டிருந்தோர் மனங்கள் லயித்து மயங்கின.

'வயிரியர் மதுர கீதம் மங்கைய ரமுத கீதம்
செயிரறு மகர யாழின் தேம்பிழி தெய்வ கீதம்
பயிர்கிளை வேயின் கீதம் என்றிவை பருகி விண்ணோர்
உயிருடை யுடம்பு மெல்லாம் ஓவிய மொப்ப நின்றார்'

என்று கூறியதனோடொப்ப அனைவரும் சித்திரப்பதுமைகள் போன்று செய்கையற்றிருந்தனர். இராமசரிதம் படிப்படியாய் வளர்ந்தது. செஞ்சொற் கவியின்பம் இணைத்தென்பது இன்றுதான் உணரலாயிற்று. சிலபொழுது அவையகத்தார் வியப்பு

மேலிட்டு மதிமருண்டு கிடப்பர்; சில பொழுது உவகை மேலிட்டு ஆனந்தவாயில் திளைத்திருப்பர்; சில சமயம் சோகத்தால் உளங்கலங்கி நைந்து வருந்துவர்; சில சமயம் பக்தியால் உளங்கனிந்து உருகுவர். ஒருகால் நகைச்சுவை மீதூர்ந்து மெய்குலுங்கச் சிரிப்பர்; ஒரு கால் பயங்கொண்டு வெருண்டு நடு நடுங்குவர்; ஒரு சமயம் வீரம் மேலிட்டுப் புயம்பூரித்து ஏற்றெழுவர்; 'அழகெலாம் ஒருங்கே கண்டால் யாவரே ஆற்றவல்லார்?'

பூலோகத்திலும், வானுலகத்திலும், நாட்டிலும் காட்டிலும் நதிக்கரையிலும் கடற்கரையிலும் யுத்த களத்திலும், ஆகாய மார்க்கத்திலும், நிகழ்ந்த சம்பவங்களெல்லாம் திருவரங்கர் சந்நிதியிலே நடித்துக் காட்டப்பெற்றன. அயோத்தி நீங்கிய அரசர் பெருந்தகை புஷ்பக விமானமேறிச் சீதா லக்ஷ்மண சமேதராய் வானர பரிவாரங்களுடன் திரும்பத் தனது நகரமடைந்து,

'தள்ளரிய பெருநீதித் தனியாறு புகமண்டும்
பள்ளமெனுந் தகையானைப் பரத்னெனும் பெயரானை'

வாழ்வித்தருளினன். கைகேசியின் சூழ்வினையால் தடையெய்தி சீதாபஹரண மென்னும் சோக-சம்பவத்தால் இடையீடுபட்ட பட்டாபிஷேக மஹோத்ஸவம் விமரிசையாய் நிகழ்கின்றது.

'அரியணை அனுமன் தாங்க அங்கதன் உடைவாள் ஏந்தப்
பரதன் வெண்குடை கவிக்க இருவரும் கவரி பற்ற
விரிகடலுலக மேத்தும் வெண்ணைமன் சடையன் வண்மை
மரபுளோன் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி

என்ற சிறப்பு மிக்க செய்யுளைக் கம்பர் பெருமான் பாடினர். பாடின அளவில் அவைக்கணிருந்தோர் அனைவரும் சடையப்ப வள்ளலாரை நோக்கி அவரது பெருமையையே உள்ளத்தெண்ணினார்கள். வள்ளலாரோ தலைவணங்கி யிருந்தனர்.


இராமாவதாரம் அரங்கேற்றி முடிந்தது. கவிதை வெள்ளத்தின் பெருஞ்சுழியில் அகப்பட்டுத் தம்மையிழந்து நிற்பாரை யன்றிப் பிறரைக் காணுதல் அரிதாயிற்று. வான்மீகி-மஹரிஷி புனைந்த சடை முடிதுளக்கிப் புலவரேற்றினை முகம் பார்த்து மெல்ல நடப்பாராயினர். அவரைத் தொடர்ந்து வள்ளுவப் பெருந்தகை, தமிழ்வேதம், எழுதியருளிய அருமைத் திருக்கரத்தில் பொன்கொண்டிழைத்து மணியைக் கொடு புணைந்த மகுடமொன்று தாங்கிப் பின் சென்றனர். இருவரும் தம்மையடுத்து வந்ததும் கம்பர் பெருமான் எழுந்து வணங்கலுற்றனர். அப்பொழுது தகவுடையோர் சிந்தையினும்

சென்னியினும் வீற்றிருக்குஞ் சீர்த்தியுடைய வான்மீகி மஹரிஷி தந்தையினுங் களிகூரத் தழுவி நின்று, 'நீரே கவிச்சக்கரவர்த்தி; எனது அன்பிற்குரிய ஞான புத்திரரை யின்றுதான் காணப் பெற்றேன்' என்று கூறி, வள்ளுவப் பெருந்தகையார் தாங்கிச் சென்ற மகுடத்தை வாங்கிக் கம்பர் பெருமானது முடிமீது புனைந்தருளினர். தமிழ்ப் புலமைத் தெய்வமாகிய வள்ளுவர் அன்பூற்றெடுக்குந் திருநயனங்களாற் கனிந்துநோக்கி முடி புனைந்த சிரமீது தமது திருக்கைகளை வைத்து ஆசீர்வதித்தருளினர்.

பங்குனி அத்த நன்னாள்! இந்தச் சுபதினத்தன்று இற்றைக்குச் சுமார் ஆயிரம் வருஷங்கட்கு முன்னர் மேல் விவரித்தவாறு கம்பர் பெருமானது இராமாவதாரம் அரங்கேறுதலாயிற்று. இந்நாள்தான் தமிழ்த் தெய்வம் மணிமாமகுடம் புனைந்துகொண்ட பெருநாள். பாரத தேவி பன்னெடுங்காலமாக முயன்றுவந்த தவம் பயனிரம்பி முற்றியதும் இந்நாளே, இத்தகைய விசேஷ தினத்தைத் தமிழ் மக்களாகிய நாமனை வரும் இன்றுபோல் என்றும் போற்றிப் பாராட்டுவோமாக!

'எண்ணிய சகாத்த மெண்ணூற் றேழின்மேற் சடையன்வாழ்வு
நண்ணிய வெண்ணெய் நல்லூர் தன்னிலே கம்ப நாடன்
பண்ணிய இராம காதை பங்குனி யத்த நாளில்
கண்ணிய வரங்கர் முன்னே கவியரங் கேற்றி னானே'.

(சகாப்தம் 807 ; கலியாண்டு 3986 ; க்குச் சரியான விசுவாசு - பங்குனி 4 ஆம் தேதி (கி.பி. 886 - பெப்ருவரி - 23 புதன்கிழமை அஸ்த நட்சத்திரம் கூடிய நன்நாள்)



கடவுள் வாழ்த்துப் பாடல்கள் கம்பன் பாடியவைதானா?

- கம்பன் அடிசூடி பழ. பழனியப்பன்

கம்பராமாயணம் ஒரு பெரும் காவியப் பெருங்கடல்; ஆறு காண்டங்கள், நூற்றுப் பதினெட்டுப் படலங்கள், எண்ணற்ற கிளைக் கதைகள், பத்தாயிரத்து முந்நூற்று அறுபத்தெட்டுப் பாடல்களை உள்ளடக்கியது என்று பல்கலைச் செல்வர் தெ.பொ.மீ அவர்கள் தலைமையில் இயங்கிய அறிஞர் குழுவினரால் பதிப்பிக்கப் பெற்ற சென்னைக் கம்பன் கழகப் பதிப்பு பட்டியலிடும்.

"கரைசெறி காண்டம் ஏழு, கதைகள் ஆயிரத்து எண்ணூறு:
பரவுறு சமரம் பத்து; படலம் நூற்று இருபத்தெட்டே;
உரைசெயும் விருத்தம் பன்னீராயிரத்து ஒரு பத்தாறு;
வரம் மிகு கம்பன் சொன்ன வண்ணமும் தொண்ணூற்று ஆறே".

என்று பழைய தனிப்பாடல் ஒன்று இதனை விரித்து விளக்கிடும்! இப்பாடல் ஒட்டக்கூத்தர் எழுதிய உத்தர காண்டத்தையும் சேர்த்து காண்டங்கள் ஏழு என்றிடும்! கம்பன் விவரிக்கும் போர்கள் பத்து என்றும், பாடிய வண்ணம் தொண்ணூற்று ஆறு என்றும் பட்டியலிடும் இப்பாடல் கம்பன் பாடிய கடவுள் வாழ்த்துப் பாடல்களின் எண்ணிக்கை ஒன்றுக்கு மேற்பட்டிருக்க, அதனைக் குறித்து ஏதும் சொல்லாதது ஆச்சரியமே! கம்பராமாயணத்தில் பால காண்டத்தில் மூன்றும், மற்ற காண்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒன்றுமாக எட்டுக் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் உள்ளன.

இவ்வளவு பெரிய காவியத்தினை " உலகம் யாவையும்" என்ற கடவுள் வணக்கப் பாடலுடன் முதற் காண்டமாகிய பால காண்டத்தில் கம்பன் தொடங்குகிறான். அப்பாடலைத் தொடர்ந்து "சிற்குணத்தர்", "ஆதி அந்தம்" என்ற தொடங்கும் இரண்டு கடவுள் வணக்கப் பாடல்களையும் பாடுகிறான்.

இம்மூன்று பாடல்கள் தவிர, எஞ்சிய ஐந்து காண்டங்களின் தொடக்கத்திலும் தனித்தனிக் கடவுள் வாழ்த்துப் பாடல்களைக் கம்பன் பாடித் தொடங்குகிறான். ஆக மொத்தம், கடவுள் வாழ்த்துப் பாடல்கள் என்று கம்பராமாயணத்தில் கணக்கிட்டால், எட்டுப்

பாடல்கள் கிடைக்கும். இவை தவிர கம்பனில் காணக் கிடைக்கும் கடவுள் துதிப் பாடல்கள் என்று பார்த்தால், அவை நிரம்பவே உள்ளன.

1.	விராதன் துதி	-	13
2.	இந்திரன் துதி	-	5
3.	கவந்தன் துதி	-	9
4.	வாலி காட்சி	-	1
5.	வாலி போற்றல்	-	2
6.	அனுமன் போற்றல்	-	4
7.	பிரகலாதன் போற்றல்	-	22
8.	பிரகலாதன் துதி	-	9
9.	பிரமன் துதி	-	5
10.	வருணன் துதி	-	5
11.	கருடன் துதி	-	11
12.	தேவர்கள் துதி	-	7
13.	பிரமன் போற்றல்	-	11

இவை அனைத்தும் கம்பன் கல்வியில் பெரியன் என்பதை நிலை நாட்டுவனவாகும். தென் சொல்லும், வடசொல்கலையும் நிரம்பக் கற்ற பண்டிதன் அவன் என்று சான்று பகரும். ஆம். அவை வேத, உபநிடதங்களின் சாரத்தைப் பிழிந்து தருவன. கம்பன் கல்லாத கலையும் வேதக் கடலும் இல்லை என்னுமாப்போன்று கற்பவரை அறிவுக் கடலுள் ஆழ்த்துவனவாகும்.

இந்தத் துதிப் பாடல்கள் யாவும் கம்பன் பாடியவை; ஆதி காவியத்தில் கிடையாது. கதைப் போக்கிற்கு இயைய, கதைப் போக்கைத் தடைப் படுத்தாது இத்தகு துதிப் பாடல்களை காவியத்தினிடையே கம்பன் நிரம்பப் பாடிய பிறகு, காண்டத்திற்கு ஒரு கடவுள் வாழ்த்தைத் தனியே பாடத் தேவை எழுமா ? பாடியிருப்பானா ?

இப்போது, ஆய்வுக் களம் ஏதும் அமைத்து உட்புகாது, புறத்தே நின்று ஒரு கேள்வி ! இப்படியான எட்டுப் பாடல்களும் கம்பனே பாடியனவா ? ஒரு பெரும் பேரிலக்கியத்தின் மிக முக்கியமான அங்கமாகிய கடவுள் வாழ்த்துப் பகுதி பற்றி, பேரிலக்கியத்தின் ஆய்வுப் புலம் அமைத்து அதன் வழி நின்று ஆயப்புகாது, மேலோட்டமாக இப்படி ஒரு கேள்வியை எழுப்பி விடை காண முயல்வது முறையாகாது என்றாலும் ஐயம் ஒன்றினை மனதில் தோன்றிய பிறகு ஆறப்போடாது அறிஞர் பெருமக்கள் முன் படைத்து, அவர்கள் சிந்தனையைத் தூண்டி விரிவான விவாதத்திற்கு வழி வகுப்பதுவே நலம் பயக்கும்; வினாவிற்கான நிரந்தரமான விடை கிடைக்க ஏதுவாகும், இல்லையா ?

கடவுள் வாழ்த்துப் பாடல்கள் எட்டும் ஒரே மாதிரியன அன்று. ‘ உலகம் யாவையும்’ என்ற முதற் பாடலும், ஆரணிய, கிஷ்கிந்தா, யுத்த காண்டப் பாடல்களும் அகப் பாடல்கள் போன்று சுட்டி ஒருவர் பெயர் சொல்லாது தலைவர், ஆதிதேவர், அம்முதல் ஒன்று என்பன போன்ற பொதுவான சொற்றொடர்களால் சுட்டாது சுட்டி நின்றும் பால காண்டத்தின் மீதி இரு கடவுள் வணக்கப் பாடல்களும் அவதார புருஷனாகிய இராம பிரானின் மூலமாகிய திருமாலை இனங் காட்டும். அயோத்தியா, சுந்தர காண்டப் பாடல்கள் இரண்டும் இராமகாதைத் தலைவனாகிய இராமனையே வாழ்த்தி நிற்கும். இப்படியாக எட்டுப் பாடல்களும் ஒன்றொடு ஒன்று வேறு பட்டு நிற்கும்.

ஒப்பாய்வு என்று பார்த்தால், ஒன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய கம்பனுக்கு முற்பட்ட எந்தக் காப்பியத்திலும், இப்படி காண்டந்தோறும் அல்லது பேருறுப்பு தோறும் கடவுள் வணக்கம் பாடப் பெறவில்லை என்பதே உண்மையாகும். தமிழில் எழுந்த முதற் காப்பியமாகிய சிலப்பதிகாரத்தில் முதல் காண்டமாகிய புகார்க் காண்டத்தில் ஞாயிறு, திங்கள், மழை என இயற்கை வாழ்த்து கடவுள் வாழ்த்துப் போன்று அமைந்துள்ளது, மற்ற இரு காண்டங்களின் ஆரம்பத்தில் அதுவும் இல்லை. சீவக சிந்தாமணியில் முதல் இலம்பகத்தில் “மூவா முதலா” என்ற கடவுள் வாழ்த்துப் பாடல் அமைந்துள்ளது. மற்ற இலம்பகங்களில் அப்படி எதுவும் இடம் பெறவில்லை.

கம்பனுக்குப் பின் பன்னிரெண்டாம் நூற்றாண்டில் எழுந்த காப்பியமாகிய சேக்கிழாரின் பெரிய புராணத்தில் “உலகெலாம் உணர்ந்து” என்ற தில்லைத் திருச்சிற்றம்பலவன் வாழ்த்தே கடவுள் வாழ்த்தாக அமைந்துள்ளது. ஆனால் வில்லிபுத்தூரார் தம் பாரதத்தில் பேருறுப்பாகிய பருவ ஆரம்பத்தில் “ஆக்குமாறு அயனாம்” என்று தொடங்கும் கடவுள் வாழ்த்துப் பாடலில் முத்தொழில் ஆற்றும் மூவரையும் பாடியதோடு, சிற்றுப்பாகிய சருக்கங்களில் சிலவற்றின் தொடக்கத்திலும் கடவுள் வாழ்த்து அமைத்துப் பாடியுள்ளார். எல்லாச் சருக்கங்களிலும் அமைக்கப்பாததோடு, அவ்வாழ்த்துக்கள் சருக்க உட்பொதி பொருளோடு தொடர்பின்றி அமைந்துள்ளன. கண்ணன் புகழ் பாடுபவர் ஒரு சருக்கத்தின் வாழ்த்தில் வில்லினால் வெற்றிபெற்ற இராமனை வாழ்த்துவதாக அமைந்துள்ளது. இத்தகு பாடல்கள் அவருடைய முதற் கடவுள் வாழ்த்துப் பாடலோடு எவ்விதத்திலும் ஒப்புமை இன்றி தனித்து நிற்கின்றன. அவர் காலம் ஒன்பதாம் நூற்றாண்டுக் கம்பனுக்கு மிக மிகப் பிந்திய பதினாம்காம் நூற்றாண்டாகும். எனவே இடையில் வரும் சருக்க வாழ்த்துக்கள் அவர் பாடியதுதானா என்ற கேள்விக்குறி எழவே செய்கிறது.

காண்டந்தோறும் கம்பன் பாடியனவற்றைத் தனியே எடுத்துப் பொருளை நோக்கினால் கம்பன் தான் பாடினானா என்ற வினா எழவே செய்யும். கம்பனுடைய முதற் கடவுள் வாழ்த்துப் பாடலாகிய ‘உலகம் யாவையும்’ உலக இலக்கியங்களிலேயே

தனித்து நிற்கும் ஒப்புயர்வற்ற வாழ்த்தாகும். இவன்தான் இறைவன் என்று திருமாலையோ அல்லது இவன் தான் இறைவன் என்று தன் பாட்டுடைத் தலைவனாகிய இராமனையோ கம்பன் சுட்டிக்காட்டினானன்று. மாறாக சைவரோ, வைணவரோ அன்றி, பிற சமயத்தவர் எவரும் கொஞ்சமும் தயக்கமின்றி தம் சமயக் கடவுள் வாழ்த்தாகவே கொள்ளுமாப்போலவே இப்பாடல் அமைந்துள்ளது கம்பனுடைய மாபெரும் கவித்துவ மேன்மையாகும். வள்ளுவருடைய பாயிரத்திற்கும், சிறப்பாக 'அகர முதல' எனதொடங்கும் கடவுள் வாழ்த்துக் குறளுக்கும் திரு.வி.க. அவர்கள் ஒரு தனி நூலே எழுதியது போன்று 'உலகம் யாவையும்' பாடலுக்கும் ஒரு தனி ஆய்வு நூலே எழுதும் அளவிற்கு மிக நுட்பமான ஆழமான பொருள் பொதிந்த ஒன்றாகும். எந்த ஒரு சமயத்தையும் குறிப்பிடாததோடு, அச்சமயக் கடவுளுக்குரிய பெயரையும் சுட்டாது, திணை, எண், பால் கூடச் சுட்டாது கடவுள் வாழ்த்து கம்பன் ஒருவனால் தான் பாட முடியும்; முடிந்தது ! உலக இலக்கியம் வேறு எதுவும் செய்திராத தனிப்பெரும் முயற்சி.

இப்படிப்பட்ட கடவுள் வாழ்த்தோடு, ஏனைய கடவுள் வாழ்த்துப் பாடல்கள் ஒரு சிறிதும் ஒப்பாய்வு செய்ய முடியாதனவாகும். அயோத்தியா காண்ட வாழ்த்துப் பாடலாகிய 'வான் நின்று இழிந்து' எனதொடங்கும் பாடலில் - 'உடல்மிசை உயிரெனக் கரந்து எங்கும் பரந்துள்ளான்' என்ற நம்மாழ்வாரின் தாக்கத்தால் - 'ஊனும் உயிரும் உணர்வும்போல் உள்ளும் புறத்தும் உளன்' என்று பரம்பொருளின் இயல்பொன்றை முன் இரண்டு அடிகளில் பாடினாலும், பின் இரண்டு அடிகளில் அப்பரம்பொருள் இராமனாக வடிவெடுத்துச் செய்த செயல்களைக் குறிப்பிட்டு இராமனைத் தெய்வமாகக் குறிப்பிட்டுக் காட்டிவிடுகிறான். பொதுப்படக் கடவுளை வாழ்த்தியவன் இங்கே பிற சமயத்தவர் ஒப்பத் தயக்கம் காட்டக்கூடிய பெயரைச் சுட்டுவானா ? அத்தோடு இராம அவதார வரலாறாய் அனைத்துக் காண்ட நிகழ்வுகளும் ஒருசேர அல்லவா பேசப்பெறுகிறது ? பல காண்டச் செயல்களின் தொகுப்பான இப்பாடல் முதற் காண்டத்தே இடம் பெறாது இரண்டாவது காண்டத்தில் சொல்லப் பெறுவதும் பொருத்தமாக இல்லை.

மூன்றாவதாகிய ஆரணிய காண்டம் 'பேதியாது நிமிர் பேத உருவம்' என்ற வாழ்த்துப் பாடல் 'உலகம் யாவையும்' போன்று பொதுப்படப் பொருள் இயல்பைச் சுட்டினாலும், காண்ட நிகழ்வோடு தொடர்பின்றி உள்ளது. கொஞ்சம் சிக்கலான பொருள் கொண்டது. பின் இரண்டடிப் பொருள் வேதம், வேதியர், பிரமன் முதலானவர்களும் அறிந்துகொள்ள இயலாததாகிய பரம்பொருள் நம் சிற்றறிவனால் அறியப்படக் கூடியதன்று என்னும். முன் இரண்டடியோ பிரிக்கப்படமுடியாத ஒரு பொருளிலிருந்து பல்வேறு பொருள்கள் தோன்றினாலும், ஓதி ஓதி உணரும்தோறும் அவ்வுணர்வினால் உணரப்பட முடியக் கூடியது என்று பின் இரண்டடிக்கு விதிவிலக்கைக் காட்டும். முன்னே அயோத்தியா காண்டத்தே அவதார வரலாறு கூறியதன் பின் கவிஞன் அடுத்து

இவ்வளவு பெரிய தத்துவத்தை அதிலும் ஆரணிய காண்டத்து வரும் பாத்திரங்களாகிய விராதன், இந்திரன், கவந்தன் முதலானோர் வீயாத பெரு மாயம் நிரம்பியவன் என்று தோத்திரம் பாட அதனை விஞ்சிய கருத்துடைப் பாடலாக இதனை வாழ்த்தாகப் பாடுவானா என்று எழும் ஐயம் நியாயமானதே.

அடுத்த காண்டமாகிய கிஷ்கிந்தா காண்டப் பாடலாகிய 'மூன்று உரு எனக் குணம் மும்மை ஆம்' என்பதும் பொதுப்பட பொருள் உடையதாயினும், காண்டச் செய்திகளோடு இணைப்புடையதாக இல்லை. மும்மூர்த்திகள் எனவும், முக்குணங்கள் எனவும் காணப்பெறும் வடிவங்களும் மூலப் பரம்பொருளின் பல்வேறு வகையான நிலையே எனும் இக்கருத்தை கம்பன் பலப்பல இடங்களிலும், கவந்தன், பிரகலாதன் கூற்றாகவும் காட்டுகிறான். 'உலகம் யாவையும்' பாடலிலும் இம் முத்தொழில் கருத்தைக் கோடிட்டுக் காட்டியபிறகு அதற்காக மீண்டும் ஒரு கடவுள் வாழ்த்தியற்ற வேண்டிய அவசியம் எழாது என்பதால் இது கம்பன் பாடியதுதானா என்று சிந்திக்க வைக்கிறது.

சுந்தர காண்டச் செய்யுளாகிய 'அலங்கலில் தோன்றும் பொய்மை அரவு' பொதுப்படப் பொருள் கொண்டதுவாய்த் தொடங்கி, பின்னே பரம்பொருள் இராமனே என்று அடையாளம் காட்டி நிற்கும். பஞ்ச பூதங்களின் தன்மையும் முரண்பாடாகத் தோன்றி ஏற்படுத்தும் கலக்கம் பரம்பொருளின் தரிசனத்தால் விலகும் என்ற சொல்ல வந்த கவிஞன், அப்பரம்பொருள் இராமனே என்று அடையாளம் காட்டிவிடும் கடவுள் வாழ்த்து கம்பனுடைய முதன்மைக் கடவுள் வாழ்த்துப் பொருளோடு ஒட்டிவராதே!

இப்படி காண்டம் தொறும் கடவுள் வாழ்த்துக்கள் கம்பன் பாடியதுதானா என்ற ஒரு ஐயம் எழச் சில காரணங்கள் தோன்றுகிறது. முதற் காரணம் கம்பன் காவியம் மக்கள் இலக்கியமாக செல்வாக்குடன் விளங்கிவந்ததே ஆகும். பலர் இராமாயணப் பிரசங்கம் செய்வதையே தம் வாழ்க்கைப் பணியாய்க் கொண்டனர். சுவடி பெயர்த்து எழுதுபவரும், படி எடுப்போரும் பெருகினர். இவ்வாறு பேசியும், எழுதியும் வந்தவர்கள் எண்ணிக்கை கூடவே, காலக்கிரமத்தில் நூலுள் மாறுதல்கள் உண்டாயின.

கம்பராமாயணத்தின் இத்தகைய அசுரவேகச் செல்வாக்கு பலரையும் கம்பனது காவியத்தோடு ஒட்டி ஒரு பாடலைப்பாடி அதனையும் கம்பன் பாடல்களோடு சொருகிவிடும் ஆசையை மூட்டிவிட்டதும் ஒரு காரணம் கம்ப காவியத்தில் எண்ணற்ற சொருகு கவிகள் ஏற்பட்டது. இப்படித்தான் என்பர் ரசிகமணி டி.கே.சியும், அறிஞர் சொ.முருகப்பாவும் ஓரளவிற்கு இது உண்மை என்பதால் காண்டத்திற்கு காண்டம் ஏற்பட்ட கடவுள் வாழ்த்துப் பாடல்களும் இதே ரகத்தனவாயிருக்கலாம் என்று கருதவும் இடங்கொடுக்கிறது. இவ்வாறு நுழைக்கப்பெற்ற கவிதைகள் கம்பனது கவிதை

ஓசைஒழுக்கிற்கும், சொல்லாட்சிக்கும் முரண்பட்டு நிறமையை எளிதில் கண்டுவிடலாம். முதன் முதலில் பதிப்பித்தவர்கள் இத்தகைய பாடல்களைத் தனியே குறிப்பிடாது. மூலத்துடன் சேர்த்து விட்டனர். பின்னர் வந்த சிலர் இவற்றை மிகைப் பாடல்கள் என்று தனியே காட்டினர். ஆனாலும் கம்பனுக்கு ஒரு செம்மையான பாடப் பதிப்புக் காணவேண்டும் என்ற பேரவாவினால் உந்தப்பட்டவர்கள் கம்பனில் செம்பாதிக்குமேல் 'செருகு கவிகள்' என்று தள்ளிவிட்டனர். அது மிகப் பெரிய சர்ச்சையை ஏற்படுத்தியது. அவர்களும் கூட காண்டக் கடவுள் வாழ்த்துப்பாடல்களை கம்பன் பாடியதாய் இருக்கக்கூடும் என்று ஏற்றது ஆச்சரியமே. காசைச் சுண்டிப் பார்ப்பதுபோல் கம்பன் பாடல்களையும் சுண்டிச் சுண்டிப் பார்த்த ரசிகமணியிடமும் இவை தப்ப இன்னுமொரு காரணமும் உண்டு.

கம்பன் எழுதியதை தாய் ஏடு என்று கொண்டால், பிறகு படி எடுத்தவர்கள் எழுதியன மகள் ஏடு, பேத்தி ஏடு, கொள்ளுப் பேத்தி ஏடு என பிரதி எடுத்த போது சொற்கள் மாறி விட வாய்ப்பு மிகவுண்டு. ஒரு தலைமுறை ஏடுகளுக்குள்ளும் அவை எழுந்த இடம், மண்டலம் காரணமாய் வேறுபாடுகள் ஏற்பட வாய்ப்புண்டே ! அதோடு கூட கம்பராமாயணத் தனியன்களாய் மிகப் பலர் எழுதிய தனியன் பாடல்களையும் ஏட்டில் சேர்த்து எழுதத் தொடங்கினர். அத் தனியன்களில் மனம் பறிகொடுத்த படி எடுப்போர் பலர் அவற்றுக்கும் முக்கியத்துவம் தரக் கருதி கம்பன் பாடிய கடவுள் வாழ்த்துப் போலவே புதுமை செய்வதாய் காண்டம் தொறும் புகுத்தியிருக்கலாம். அதனால் தான் அவற்றில் தொடர்பின்மையும், காண்டச் செய்தியோடு பொருந்திவராமையும், கூறியது கூறலுமாயும், கம்பனது கடவுள் வாழ்த்துக் கொள்கையோடு இயையாமையும் தென்படுகிறது.

அது மட்டுமன்று; ஒவ்வொரு காண்ட, படலங்களில் எண்ணிக்கையும், படலப் பெயர்களும், படலத்தின் தொடக்கப் பாடலும், முடிவுப் பாடலும் பெரும்பாலான பிரதிகளில் வெவ்வேறாய் உள்ளன. படி எடுத்த பிரதேசச் சூழல் காரணமாயும், இவை ஏற்பட்டன. எனவே கம்பனில் காண்டப் பிரிவினை, படலப் பிரிவினை எல்லாம் கம்பன் காலத்திற்குப் பிற்பட்டே இருந்திருக்கலாம். பெரும்பாலான காண்டங்களில் முந்திய காண்டத்தின் இறுதிப் பாடலும், அடுத்து வரும் காண்டத்தின் தொடக்கப் பாடலும் சந்த வேறுபாடின்றி இருப்பதை அறிஞர்கள் சுட்டுகின்றனர். காண்டத்தின் பொருளும் ஒவ்வொரு காண்டத்திலும் முடிவுற்று அடுத்த காண்டத்தில் புதிய தொடக்கத்தைப் பெறவில்லை என்பதும் கண்கூடாகிறது. பொருள் இடையறவின்றி தொடர்ந்து செல்கிறது. சில காண்டத் தொடக்கங்கள் முன்னையதுடன் குளகம் போல இயைந்து உள்ளதையும் காண முடிகிறது. இத்தகைய தொடர் அமைப்பில் கடவுள் வாழ்த்தென்று சில பாடல்கள் வேறு சந்த அமைப்பில் இடைஇடையே வருதல் அவை கம்பன் எழுதியதுதானா என்ற ஐயத்தை ஏற்படுத்துவதில் வியப்பொன்றுமில்லையே.

மரபுகளில் ஊறிய உறைப்புடைய பண்டிதர்களும், பதிப்பாசிரியர்களும் மாற்றம் செய்ய அச்சங் கொண்டு, இருந்ததனை இருந்தபடியே இருத்திவிட்டமையே காரணமாய் அமைந்துவிட்டது. கம்பராமாயணத்திற்கு ஒரு செம்பதிப்புக் கொண்டு வரவேண்டும் என்று முயன்றோர் பலருண்டு. அவர்கள் முயற்சிகள் உருப் பெற்றாலும், முற்றுப் பெறாதொழிந்தது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பதிப்பு முயற்சி மிகச் சீரியது, அன்று வாழ்ந்த பெரும் பெரும் தமிழறிஞர்கள் ஒன்றுகூடிப் பல்லாண்டு முயன்றதன் பயனாய் சிறந்த பாட பேதப் பதிப்பாய் வெளிவந்தது; என்றாலும் அதில் அவர்கள் கைக்கொண்ட பாடத்திற்கான விளக்கம் இன்மையாலும், சில இடங்களில் அறுதிப் பெரும்பான்மைச் சுவடிகளிலும், பதிப்புகளிலும் இடங்கொண்ட பாடத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டிய காலக் கட்டாயம் நேர்ந்ததும் பதிப்பின் செம்மையைப் பாதித்தது. சொ. முருகப்பாவும் அறிஞர் பலரையும் சுவடிகளையும் கொண்டு முயன்றபோதிலும், காலன் முந்திக் கொண்டதால் அவரது முயற்சியும் தடைப்பட்டுப் போயிற்று.

மர்ரே ராஜம் பதிப்பு கம்பனைப் பரவலாக எளிய முறையில் பொருள் புரிதலுடன் எல்லோரிடமும் கொண்டு சேர்க்கவேண்டும் என்ற ஆவலின் கம்பன் அடிப்பொடி உள்ளிட்ட அன்று இருந்த அறிஞர் பலர் ஈடுபட்டும் அவர்களும், காலத்தின் கட்டாயத்திற்குட்பட்ட - வரையறுத்துக் கொண்ட - கொள்கையால் குறிப்பிட்ட எல்லையைத் தாண்ட முடியாது போயிற்று. குருதேவர் தெ.பொ.மீ தலைமையில் சென்னைக் கம்பன் கழகம் கண்ட பதிப்பும், சிந்தனைச் சித்தரும், வித்தகருமான அ.ச.ஞா தலைமையில் கோவைக் கம்பன் கழகம் கண்ட பதிப்பும் மேற்படி காரணத்தாலேயே எல்லைக்குட்பட நேர்ந்தது. பெரும்பான்மையான கொள்கை என்ற ஒன்றினைக் கொண்டு பின்பற்றும்போது அது முற்றிலும் ஏற்புடையதாகும் என்று சொல்வதற்கில்லை. ஏனெனில் கணக்கில் எடுத்துக் கொள்ளப் பெற்ற சுவடிகள், பிரதிகள் இரண்டு அல்லது மூன்று நூற்றாண்டுக்கு உட்பட்டனவாகத்தான் இருக்கின்றன. ஆகவே எடுக்கப் பெறும் பாடங்களும், மரபும் பிற்கால வழக்காகவேதான் இருக்கின்றன. ஆகவே எடுக்கப் பெறும் பாடங்களும், மரபும் பிற்கால வழக்காகவேதான் இருக்க முடியும், இல்லையா ? கம்பன் காலத்தை ஒட்டியதாக இருக்க வாய்ப்பு இல்லை.

மேற் சொன்ன பேரறிஞர்கள் எல்லாம் மரபு வழாமையின் காரணமாய் ஏற்ற கம்பராமாயணக் காண்டங்களின் கடவுள் வாழ்த்துப் பாடல்களைக் குறித்து, கம்பன் மாட்டுக் கொண்ட அச்சங் கலந்த காதலாலும் சிற்றறிவினாலும், இச்சிறியவன் ஐய வினா எழுப்பியமையை அறிஞருலகம் பொறுத்தருள வேண்டிப் பணிவதுடன், கம்பனின் திருவுளப் பாங்கினை தமிழ் இலக்கிய உலகம் மனங்கொள, அவர்கள் மனங்கொளவும் வேண்டுகிறேன்.

❋❋❋

"என் தெய்வமும், மகனும்" - புதிய பார்வை

பேரா. தி. இராசகோபாலன்

வர்மக் கலை வல்லுநர்கள் அடுத்தவன் உடம்பில், அவ்வுடம்பிலுள்ள ஒரு நரம்பில், ஒரு முடிச்சைப் போட்டுவிடுவார்களே யானால், அதனை அவர்கள் தாம் அவிழ்க்க முடியுமே தவிர, மற்றவர்களால் முடியாது. கவிச்சக்கரவர்த்தி கம்பனும் ஒரு வர்மக்கலை வல்லுநன் தான் ! இராமாயணத்திலே கம்பனும் பல முடிச்சுகளைப் போட்டு வைத்திருக்கிறான். காலங்கள் தோறும் அவன் போட்ட முடிச்சை அவிழ்த்துக் கொண்டே வருகிறார்கள், அக்கலையில் வல்லுநர்கள் ! என்றாலும், இன்னும் முடிந்தபாடில்லை.

வரதர்க்கு வரதனாகிய சிவபெருமான் அக்கினிப் பிரவேசம் முடிந்தவுடன், தசரதனை மண்ணுலகத்திற்குச் செல்லுமாறு அறிவுறுத்துகிறான். அயோத்தியில் கைகேயியினால் பட்ட இதயப் புண்ணை ஏந்தியவாறே இராமனிடத்து வருகிறான் தசரதன். அப்படி வந்த தசரதனிடம், இப்பொழுது இரண்டு வரங்களை வேண்டுகிறான் இராமபிரான். "தீயள் என்று நீ துறந்த என் தெய்வமும் மகனும், தாயும் தம்பியுமாம் வரம் தருக" என்பனவே அவ்வரங்கள் !

என்றோ ஒருநாள், அயோத்தியிலே - தசரதனுடைய அந்தப்புரத்தினுள் - அர்த்த ராத்திரியில் நடந்த இந்நிகழ்ச்சியைச் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் மறந்து போக, இராமன் மட்டும் நினைவு வைத்திருந்தது ஏன் ? அக்காட்சி அன்று அரங்கேறும்போது, அந்த இடத்தில் இராமன் இல்லை ! தசரதன் - கைகேயி - கோசலை - வசிட்டர் ஆகிய நால்வருக்கு மட்டுமே தெரிந்த செய்தியிது ! கங்கைக் கரைக்கு இராமனைத் தேடி வந்த பரதனும் தாயாரும், 'சத்துருக்கினன் தான் ஈமக்கடனைச் செய்தான்' எனத் தெரிவிக்கும் சூழ்நிலையில், கைகேயியையும் பரதனையும் தசரதன் நிராகரித்த நிகழ்ச்சி இராமபிரானுக்கு தெரிய வந்திருக்கலாம்.

மரணிக்கும் தருவாயில் தசரதன் கொடுத்த இரண்டு சாபங்கள், கைகேயியையும் பரதனையும் பாதித்தனவோ என்னவோ, இராமபிரானை உறுதியாகப் பாதித்திருக்கின்றன என்பதைக் காப்பியப் போக்கில் தொடர்ந்து காணமுடிகிறது. இந்த இரண்டு முட்களும் இராமபிரானுடைய இதயத்தை உள்ளூற உறுத்திக் கொண்டேயிருந்திருக்கின்றன. தசரதன் பதித்த இரண்டு முட்களையும் தசரதனைக் கொண்டே எடுக்க முயல்கின்றான் இராமன். கம்பர் தசரதனுடைய இரண்டு

தண்டனைகளையும் அரசாணைகளாகத் தான் வெளியிடுகின்றார்; ஆனால், வால்மீகி, கைகேயியிக்கும் பரதனுக்கும் தசரதன் விட்ட சாபங்களாகவே தெரிவிக்கின்றார்.

தசரதன் அன்றைக்கும் பரதனை மன்னிக்கத் தயாராக இருந்தான் (மண்ணே கொள் நீ; மற்றையதொன்றும் மற); இன்றைக்கும் மன்னிக்கத் தயாராக இருக்கின்றான். ஆனால் கைகேயியை மன்னிக்கத் தயாராகவில்லை. தான் கேட்ட வரங்களை மாற்றிக் கொள்ளாத கைகேயியை நோக்கி, மூன்று முறை பாவி, பாவி, பாவி என ஏசுகின்றான் தசரதன். (1) 'பாவி நீயே ! (2) பண்டே எரிமுன் உன்னை, பாவி; தேவியாகக் கொண்டேன் (3) பழிக்கு நாணாய்; மாணா பாவி'' என மண்ணுலகில் வாழும்போது மும்முறை பாவி என அழைத்த தசரதன், விண்ணுலகிலிருந்து இறங்கி வந்தபோதும், ''விரத வேடம் மற்று உதவிய பாவிமேல் விளிவு சரதம் நீங்கலதாம்'' என மறுபடியும் கைகேயியைப் பாவி என்கிறான்.

தசரதன் அன்றும் இன்றும் ஒரே வார்த்தையைப் பயன்படுத்துவபோல், இராமபிரானும் தசரதன் அன்று பயன்படுத்திய வார்த்தையைப் பயன்படுத்தியே சாபவிமோசனம் தேடுகின்றான். ''சொன்னேன் இன்றே; இவள் என் தாரம் அல்லல்; துறந்தேன்'' (நகர்நீங்கு படலம்) எனும் தசரதனின் வாக்கு மூலத்திலுள்ள 'துறந்தேன்' எனும் சொல்லைப் பயன்படுத்தியே இராமபிரானும், ''தீயள்... என நீ துறந்த என் தெய்வமும் தாயும் தம்பியுமாம் வரம் தருக'' என வேண்டுகின்றான். இங்கு வெற்றி பெற்றது தசரதனோ, இராமனோ அல்லர்; வெற்றி பெற்றது கம்பனே ! காப்பியத்தின் நனவோட்டத்தில் ஆதியிலிருந்து அந்தம் வரை கம்பனுக்கு இருந்த கவனம், வேறெந்த கவிஞனுக்கும் வாய்க்கவில்லை.

தசரதனுக்கும் இராமனுக்கும் நடக்கும் வாக்கு வாதத்தில், கம்பன் எவ்வளவு பெரிய வழக்குரைஞன் என்பதும் புலப்படுகிறது. ''தந்தையாகிய தசரத சக்கரவர்த்தியே! கைகேயியை நீங்கள் தாரமாக ஏற்காவிட்டால், நான் தெய்வமாக ஏற்பேன்; பரதனைத் தாங்கள் மகனாக ஏற்காவிட்டால், நான் தம்பியாக ஏற்பேன்'' என்பது இராமபிரானின் வேண்டுகோளிலுள்ள உட்பொருள். ஒரு தெய்வம் எப்படி இன்னொரு மனிதரைத் தெய்வம் எனக் கருதமுடியும் எனக் கேட்கலாம் ! இட்சுவாகு வம்சத்திலே ஒரு சக்கரவர்த்தித் திருமகனாக வந்து போகவேண்டிய இராமனை, அரக்கினமும் குரக்கினமும் மலையினமும் (வேடுவர்கள்) தொழும்படியாகச் செய்தவள் கைகேயி அல்லவா ? மனிதரைத் தெய்வமாக்கிய மனிதரைத் தெய்வம் என்பது பொருத்தம் தானே !

''இவள் என் தாரம் அல்லள்; துறந்தேன்... அப்பரதனையும் மகன் என்று உன்னேன்; அவனும் ஆகான் உரிமைக்கு'' என்பன தசரதனின் அரசாணைகள் என்றாலும், ஒரே

ஒரு நேரத்தைத் தவிர, மற்று எந்த நேரத்திலும் அவை பொருட்படுத்தப்படவில்லை. தசரதனின் பூதவுடலுக்குப் பரதன் எரியூட்ட முற்படுகையில், "அன்னை தீமையால் அரசன் நின்னையும் துன்னு துன்பத்தால் துறந்து போயினான் முன்னரே" (பிரத பூசனைக்குரிய பேறு இலேன்) எனச் சொல்லி வசிட்ட மாமுனிவன், சத்துருக்கினனை அப்பணியை ஆற்றும்படியாகச் செய்கிறான். தசரதன் பிறப்பித்த அரசாணையை மறந்த கோசலை தான், பரதனை ஈமக்கடனாற்ற பணிக்கின்றாள்.

கங்கைக் கரையில் பரதன் கோசலைக்குக் குகனை அறிமுகப்படுத்துகிறான். தீராக் காதலனாகிய குகனின் தெவிட்டாத அன்பைச் செவிமடுத்த கோசலை, "ஐவீரும் ஒருவீராய் அகல் இடத்தை நெடுங்காலம் அளித்தி" என வாழ்த்தும்போது, பரதனை மகனாக ஏற்றே வாழ்த்துகின்றாள். இராமபிரான் குகனை ஐந்தாவது சகோதரன் ஆக்கும்போதும் (இனி நாம் ஓர் ஐவர்கள் உளர் ஆனோம்) பரதனையும் உள்ளடக்கியே பேசுகின்றான். இன்னும் ஒரு படி மேலே போய், "பெருமகன் என்வயிற் பிறந்த காதலன்" என்று சொல்லும் இராமன், மற்ற தம்பியரைக் காட்டிலும் பரதனை உயர்வாகப் பேசுகிறான். இதற்குக் காரணம் என்ன ? இராமனுடைய மனமாகிய புதருக்குள்ளே ஒரு புதிர் இருக்கிறது.

கம்பனுக்கே கூட பரதன் மீது ஒரு பரிவு இருந்திருக்கலாம். 'அநியாயமாக அந்தத் தசரதன் பரதனைத் தண்டித்துவிட்டானே' என்று கம்பனுக்கு ஒரு கரிசனம் தோன்றியிருக்கலாம். அதனால் தான் தேவையில்லாத இடத்தில் கூட பரதனை ஏந்திப் பிடிக்கின்றான். 'வாலிவதைப் படலத்தில் இலக்குவனை எச்சரிக்க நினைத்த இராமபிரான், "எத்தாயர் வயிற்றிலும் பின் பிறந்தார்கள் எல்லாம் ஒத்தால் பரதன் பெரிதும் உத்தமன் ஆவதுண்டோ" எனப் பரதனாகிய பெரிய கோட்டை நீட்டி, இலக்குவன் என்ற கோட்டைச் சின்னதாக்குகிறான்.

"மாயா சீதைப் படலத்தில்" இந்திரசித்து தான் நிகும்பிலைக்குள் நுழைவது, யாருக்கும் தெரியாமல் இருக்கவேண்டும் என்பதற்காக, மாயா சீதையை வெட்டிய பிறகு அயோத்திக்குள் புகுந்து, பரதனைச் சந்திக்கப் போகின்றான் எனவொரு வதந்தியைப் பரப்புகின்றார்கள், அரக்கர்கள் ! அனுமனும் அதை நம்பி விடுகின்றான். பரதனுக்கு ஒன்று என்றவுடன் இராமபிரானும் புலம்பத் தொடங்குகின்றான். அப்பொழுது இலக்குவன் பரதனுடைய பராக்கிரமத்தை இராமனுக்கே எடுத்துரைக்கின்றான். "ஐயனே! நாகபாசம் போன்ற வித்தைகளைக் கற்ற இந்திரஜித் மட்டுமன்றி, மூன்று உலகங்களும் சேர்ந்து திரண்டாலும், பரதனை வெல்ல முடியுமோ ? நாகபாசம் பட்டவுடன் மயங்கி விழுவதற்குப் பரதனை இந்திரஜித் என்றா நினைத்தீர்கள் ! இந்திரஜித் தன் குலத்தோடு அழியப் போவதைத் தாங்களே அயோத்திக்குச் சென்று பாருங்கள்" எனப்

பரதனின் பேராற்றலை வியந்து பேசுகின்றான், இலக்குவன் ! எந்த இலக்குவன் அயோத்தியா கண்டத்தில், பரதனை நாய்க்குட்டி என்று ஏசினானோ, அதே இலக்குவன் நாவினால் பரதனைப் புகழ வைக்கின்றான், கம்பன்.

அயோத்தியில் இராமன் தனக்கு மகுடம் இல்லை; 'பரதனக்குத் தான் மகுடம்'' எனக் கோசலையிடம் சொன்ன மாத்திரத்தில், 'மும்மையின் நிறைய குணத்தவன்; நின்னினும் நல்லனால் ! எனப் பரதனக்குப் பட்டயமே வழங்குகின்றான், அக்கோசலை! பின்னர் மீட்சிப்படலத்தில் இராமபிரான் குறித்த காலத்தில் வரவில்லை என எண்ணிய பரதன், தீப்பாய முனைகிறான். அவனைத் தடுத்திய கோசலை, 'என் இழைத்தனை, என் மகனே' என்கிறாள். மேலும், 'எண்ணில் கோடி இராமர்களும் அண்ணல் நின்னருளுக்கு அருகாவரோ ?' என மெய்க்கீர்த்தியே செதுக்குகிறாள், கோசலை.

இவ்வாறாகப் பல்லோராலும், பரதன் பலப்படப் பாராட்டப் பெற்றாலும், இராமபிரான் மனத்திற்குள் மட்டும் ஒருமுள் - என்றைக்கோ தைத்த முள், உறுத்திக் கொண்டேயிருக்கிறது. அந்த முள் எல்லோருடைய மனத்திலும் தைத்திருக்க வேண்டும். ஆனால், தைக்கவில்லை என்றாலும், இராமனுடைய மனத்தில் தைத்த முள், ஒருநாள் அதிகமாக உறுத்தவே, தசரதனையும் சற்றுக் குறைத்து மதிப்பிடும்படியாகச் செய்துவிடுகிறது. பிரசவ வேதனையில் ஒரு தாய் கணவனைக் கடிந்து கொள்வதைப் போல, இராமபிரானுக்கும் தசரதன் மேல் ஒரு சிறு வருத்தம் மேலிடுகின்றது.

வீடணணைத் தசரதனுடைய ஏழாவது மகனாகச் சொல்லுகின்ற இராமன், "உம்முடைய தந்தையாகிய தசரதன் எனக்குக் கானகத்தைத் தந்துவிட்டு, தம் பிள்ளைகளால் நிறைவு பெற்றான்'' என வித்தியாசமாகப் பேசுகின்றான். கானகம் செல்வது விதியின் பிழை எனப் பல இடங்களில் பேசிய இராமன், தன்னுடைய அவதார நோக்கம் காட்டுக்குச் செல்வது தான் என்பதை நன்கு உணர்ந்திருந்த இராமன், இந்த இடத்தில் மட்டும், 'தசரதன் தந்தது கானகம்' எனப் பேசுவானேன் ? தசரதன் மறைவு கேட்டு அழுது புலம்பும் இராமபிரான், "கான் அடைந்தேன் என்னத் தெரியாது, காவல ! நீ வான் அடைந்தாய்; இன்னம் இருந்தேன் யான்'' எனத் தந்தை மேல் பக்தியே கொண்டிருந்த இராமன், இப்பொழுது தந்தையைக் கடிந்து கொள்வது, பரதனுக்கு வழங்கப்பட்ட அநியாய தண்டனையை எண்ணித் தானோ ?

மேலும், தசரதனை எந்தாய் ! எந்தாய் ! எனப் பேசிப் பழக்கப்பட்ட இராமன், இப்பொழுது, 'வீடணனின் தந்தை' என்று விளிப்பது, விந்தையிலும் விந்தையல்லவா ? நடைமுறையில் ஏறு மாறான பழக்கங்களைக் கொண்ட கணவனை ஒரு பெண், தன்னுடைய கணவன் என்று சொல்லிக் கொள்ளமாட்டாள், பொதுவிடங்களில் !

தன்னுடைய பிள்ளையினுடைய தந்தை என்பதை, 'இவனோட அப்பன்' என்பாள். இப்பொழுது இராமன், தசரதனை 'வீடணனின் தந்தை' என்று சொல்வதற்கும், பாமரப் பெண் 'இவனோட அப்பன்' என்று சொல்வதற்கும் அதிக வேறுபாடு இல்லையே !

இராமபிரான் காட்டுக்குச் செல்வதற்கு முதலும் முடிவுமாக அமைந்தவள், கைகேயி! இன்பத்தின் இன்பத்தையும் துன்பத்தின் துன்பத்தையும் துறந்த வசிட்ட மாமுனிவர் தம்மைக் கட்டுப்படுத்த முடியாமல், "பெண்ணோ ? தீயோ ? மாயாப் பேயோ ? கொடியோய்" எனக் கைகேயியை வசைபாடுகிறார். ஆழ்வார்களில் பெரியாழ்வாரும், "கூற்றுத்தாய் சொல்லக் கொடிய வனம் போன சீற்றமிலாதானைப் பாடிப் பற" என்று, இராமபிரான் காட்டுக்குப் போவதற்குக் கைகேயியே காரணம் என்பார். ஆனால், இராமபிரான் மட்டும் இந்த இடத்தில், 'புகல் அருங்கானம் தந்து' என்று தசரதன் மேல் பழியைப் போடுவது ஏன் ? தசரதன் எவ்வாறு பரதனைப் புரிந்து கொள்ளாமல், பழிபோட்டானோ, அவ்வாறே இராமனும் தசரதன் மேல் பழிபோடலாமா ?

குகனைத் தம்பியாக ஏற்கும்போது இராமபிரான் கொட்டுகின்ற பாசத்திற்கும், அதே பாட்டில் தசரதன் மேல் கொண்டிருக்கும் வெறுப்பையும் பார்க்கும்போது, இப்பாட்டை வேற்றுமையணிக்கு உதாரணம் சொல்லலாம் போல் தோன்றுகிறது. "குகனொடும் ஐவர் ஆனேம், முன்பு; பின், குன்று சூழ்வான் மகனொடும் அறுவர் ஆனேம்; எம்முழை அன்பின் வந்த அகன் அமர் காதல் ஐய ! நின்னொடும் எழுவர் ஆனேம்; புகலரும் கானம் தந்து, புதல்வரால் பொலிந்தான் நுந்தை!! என்பது பாடல்.

'எம்முழை அன்பின் வந்த அகனமர் காதல் ஐய' எனும்போது, எவ்வளவுக்கெவ்வளவு குகனை நெருங்கி வருகிறானோ இராமன், அவ்வளவுக்கவ்வளவு 'நுந்தை' என்று தசரதனைச் சொல்லுகின்றபோது, விலகி ஓடுகிறான்.

கம்பன் ஏன் இப்படி இராமன் பாத்திரத்தில் ஒரு கீறல் விழுவது போல், ஒரு பாடலைப் பாடினான் என்றால், அதுதான் கம்பன் போட்ட முடிச்சு. 'தள்ளரிய பெருநீதித் தனியாறு புகமண்டும் பள்ளமெனும் தகையானாகிய பரதனைத் தசரதன் ஆராயாமல் தண்டித்தமைக்குக் காரணம், தசரதன் இராமன் மேல் வைத்த புத்திரப்பாசம். அதுபோலவே இராமன், 'மனிதன் வடிவும் கொண்ட மனுவாகிய தசரதனை' 'தந்தை ! எனச் சொல்லி, அந்நியப்படுத்தியமைக்குக் காரணம், இராமன் தம்பியாகிய பரதனின் மேல் வைத்த சகோதரப் பாசமே ! கடுமையான கற்பாறைக்குள் தேரை வாழ்வது எவ்வளவு சாத்தியமோ, அவ்வளவு 'நுந்தை' என்று தசரதனைச் சொன்ன இராமனுடைய மனமாகிய கற்பாறைக்குள் பரதன் என்ற தேரை வாழ்வதும் சாத்தியம்.

அக்கினிப் பிரவேசத்திற்குப் பிறகு தேவர்கள் - இராவணனை வதம் செய்யவேண்டும் என்று திருமாலிடம் முறையிட்ட தேவர்கள், தசரதனிடம் கைகேயியிக்கும் பரதனுக்கும் சாபவிமோசனம் தருமாறு வேண்டியிருக்கலாம்; ஆனால், அவர்கள் வேண்டவில்லை. வசிட்ட மாமுனி அவதார நோக்கத்தை நன்கறிந்தவர். அவர் வேண்டியிருக்கலாம்; ஆனால், அவரும் வேண்டவில்லை. நாடகம் முழுவதையும் நன்கறிந்த கோசலை கேட்டிருக்கலாம்; அவரும் கேட்கவில்லை. வசதியாக அனைவருமே அதனை மறந்துவிட்டனர். ஆனால், இராமபிரானுக்கு மட்டுந்தான், அந்த உறுத்தல் இருந்து கொண்டேயிருந்தது. நெஞ்சினாற் பிழை செய்யாத அகலிகைக்குச் சாபவிமோசனம் தந்த இராமன் தான், கைகேயியிக்கும் பரதனுக்கும் சாப விமோசனம் பெற்றுத் தந்தார்.

தனிப்பாடல் ஒன்று கம்பன் போட்ட முடிச்சை அவிழ்ப்பதற்குப் பெரும் காரணமாய் அமைந்தது. சகோதரப் பாசத்திற்கு உதாரண புருஷர்களைச் சொல்ல வேண்டுமானால், 'கர்ணனையோ இராவணனையோ, அர்ச்சுனனையோ சொல்லாதே, பரதனையும் - இராமனையும் சொல்' என்பது அப்பாடல். "செஞ்சுடரோன் மைந்தனையும் தென்னிலங்கை வேந்தனையும், பஞ்சவரில் பார்த்தனையும் பாராதே - விஞ்சு புகழ், விரதமே பூண்டு மேதினியை ஆண்ட பரதனையும் இராமனையும் பார்" என்பது, வெண்பா.

நமது பண்டைக் காலத்துப் பாட்டிமார்கள் தங்கள் சேலைத் தலைப்பில் - முந்தானை நுனியில், சில முடிச்சுகளைப் போட்டு வைத்திருப்பார்கள். பொறுமையாக அந்த முடிச்சுகளை அவிழ்த்தால், அதற்குள் ஒரு வெள்ளி நாணயம் இருக்கும். அதைப் போல கம்பன் போட்டு வைத்த முடிச்சுகளை அவிழ்த்தால், வெள்ளி நாணயம் போன்ற நற்சிந்தனைகள் நமக்குக் கிடைக்கும்.

சென்னியில் சூடி வாழ்வாம்

அன்னையாய் அத்தன் ஆகி அருளுநல் ஆசான் ஆகி
பின்னுமெனை ஆண்டு கொண்ட பெருந்தெய்வம் தானே ஆகி
கன்னியாம் தமிழ்த்தாய் ஈன்ற கவிச்சக்ரவர்த்தி ஆன்
என்னுடைய கம்பன் பாதம் என்றும் என் உச்சி மீதே.

பாவிக வண்ணம் தோய்ந்த பைந்தமிழ்த் தூரிகையால்
ஓவியக் கவிதை தீட்டி ஒப்பிலா இன்பம் கூட்டும்
காவியப் புலவனாம் கவிச்சக்கரவர்த்தி கம்பன்
சேவடிக் கமலப்போது சென்னியில் சூடி வாழ்வாம்

– கம்பனடிப்பொடி சா. கணேசன்

தூயவன் தயரதன்

பேரா. முனைவர் த. அகரமுதல்வன்

மன்னர் மன்னனாக வாழ்ந்து, அறம் தவறா ஆட்சி புரிந்தும் அவலமாக மாண்டு போனவன் தயரதன். தான் வீழ்ந்தாலும் தருமம் வீழக்கூடாது என நினைத்து உயிர் துறந்த உத்தமன் தயரதன். "வாய்மையும் மரபும் காத்து மன்னுயிர் துறந்த வள்ளல் தூயவன்..." என்று மாவீரன் வாலி தயரதனைப் பாராட்டுகிறான். அத்தூயவன் தயரதன் பற்றி ஆய முற்படுகிறது இச்சிறு கட்டுரை.

அறநெறி நின்ற அரசன்

அரசர்க்கு அரசனாம் தயரதன் 'அறத்தின் மூர்த்தி' (அரசியல் படலம் 1) அவனிடம் அறமும் அருளும் வீரமும் ஈகையும் பணிகேட்கும் (அரசியல் படலம் 2) அவன் ஆட்சியில் வெள்ளமும் பறவையும், விலங்கும், ஏன் ? பரத்தையர் உள்ளமும் கூட ஒரு வழி ஓடின (அரசியல் படலம் 6).

மன்னனை உயிராகவும் மக்களை உடலாகவும் காலகாலமாக மக்கள் மதித்து வந்தனர். "மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்" என்று புறநானூறும் பாடிற்று. கம்பனோ, தயரத மன்னனை உடலாகவும் மக்களை உயிராகவும் படைத்துக் காட்டுகிறார். உயிர் இயக்க உடல் இயங்கும். மக்கள் இயக்க - மக்கள் விருப்பத்திற்கேற்ப நடக்கும் மக்களாட்சித் தலைவனாகவே தயரதன் விளங்கினான்.

"வயிரவான் பூண் அணி மடங்கல் மொய்ம்பினான்
உயிரெலாம் தன் உயிர் ஒப்ப ஓம்பலால்,
செயிரிலா உலகினில், சென்று நின்று வாழ்
உயிரெலாம் உறைவது ஓர் உடம்பும் ஆயினான்"
(அரசியல் படலம் 10)

ஓர் ஏழை உழவன் தனக்கிருக்கும் குறைந்த நிலத்தை எப்படிக் கண்ணாகக் காப்பானோ, அப்படி இம்மாநிலத்தைக் காத்தவன் தயரதன் (அரசியல் படலம் 12). புல்லுக்குத் துன்பம் தராமல் சூரியன் பனியை அகற்றுவதுபோன்று, பகையை நீக்கித் தன் நாட்டைப் பாதுகாத்தவன் தயரதன் (குநி.ப.16). அன்பு செலுத்துவதில் தாயையும், நலம் பயப்பதில் தவத்தையும், செல்கதிக்கு உய்வளிப்பதில் சேயையும், நோய் தீர்ப்பதில்

மருந்தையும், ஆய்வுக்கு உதவுவதில் அறிவையும் போன்று மக்களுக்குப் பயன்பட்டவன் தயரதன் (அரசியல் படலம் 12).

அன்பான கணவன்

தயரதன் நாட்டுக்கு நல்ல தலைவனாகத் திகழ்ந்தது போன்று வீட்டுக்கும் நல்ல தலைவனாக விளங்கியுள்ளான். அன்றைய அரசர்கள் அனைவருமே (இராமபிரானைத் தவிர) பலதாரமணமுடையவரே. தயரதனும் மூன்று தாரங்களை மணமுடித்திருந்தான். அதற்குத் தக்க காரணமும் இருந்தது. மகப்பேறின்மையால் அவன் அடுத்தடுத்து மறுதாரம் கொண்டிருக்கக்கூடும்.

மனைவியர் மூவரிடத்தும் அவன் ஒத்த அன்புடையவனாய் இருந்தான். எனினும் போர்க் காலத்திலும் கூட உடனிருக்கும் ஆற்றல் பெற்றவளாய்க் கைகேயி இருந்த காரணத்தால் அரசியல் தொடர்பான ஆலோசனைக்காக அவன் கைகேயியின் மனையில் அதிக காலம் உறைந்தான். அந்த உடனுறைவு அவனுக்குப் பல வெற்றிகளைத் தந்திருக்கிறது. அதுவே அவனுடைய வீழ்ச்சிக்கும் காரணமாகி விட்டது என்பர் ஆய்வாளர்.

பாசமுள்ள தந்தை

வாராது வந்த மாமணிபோல், பெருமுயற்சிக்குப் பின் பிறந்த பிள்ளைகளிடம் தயரதன் பேரன்பு கொண்டிருந்தான். நான்கு பிள்ளைகளிடமும் அவன் அன்புடையவனாக இருந்தான் எனினும் மூத்த பிள்ளையான இராமனிடத்தில் அவன் கொண்டிருந்த பாசம் அளவிடற்கரியது.

விசுவாமித்திர முனிவர், யாகம் காக்க இராமனைத் தன்னுடன் காட்டிற்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டபோது தயரதன் மிகவும் துடித்துப் போனான். கம்பன் அந்நிலையை,

“எண் இலா அருந்தவத்தோன் இயம்பிய சொல்
 மருமத்தின் எறிவேல் பாய்ந்த
புண்ணில் ஆம் பெரும்புழையில் கனல் நுழைந்தா
 லெனச் செவியில் புகுதலோடும்
உள்நிலாவிய துயரம் பிடித்து உந்த
 ஆர் உயிர் நின்று ஊசலாட
கண் இலான் பெற்று இழந்தான் என உழந்தான்
 கடுந்துயரம் - காலவேலான்” (கை.ப. 12)

எனக் காட்டுகின்றார்.

சீதையைத் திருமணம் செய்துகொண்டு சீராமன் அயோத்தி திரும்புகையில், எதிரே வந்து போருக்கு அழைக்கும் பரசுராமனின் கால்களில் வீழ்ந்து,

"இவனும் என் உயிரும்
உனது அபயம் இனி" (ப.ப. 19)

என்றும்,

"...என் மகன்; அனையான் உயிர் தபுமேல்
....எனது உறவோடு உயிர் உகுவேன்
குலத்தோடு அற முடியேல்....." (ப.ப. 23)

என்றெல்லாம் தயரதன் கெஞ்சுகிறான்.

கைகேயியிடம், இராமனைக் காட்டிற்கு அனுப்பாது இருக்க வேண்டித் தயரதன் கெஞ்சுவது கொஞ்ச நஞ்சமல்ல. மண்ணில் விழுந்து புரண்ட மாமன்னன் மாதுயரத்தினை யாவரே சொல்ல வல்லார் ? என்று கம்பரே சொல்கிறார். கைகேயின் கால்களில் விழுந்து,

"கண்ணே வேண்டும் எனினும்
ஈயக் கடவன்; என்
உள்நேர் ஆவி வேண்டினும்
இன்றே உனதன்றோ;
பெண்ணே, வண்மைக் கேகயன்
மானே, பெறுவாயேல்;
மண்ணே கொள்நீ, மற்றயது
ஒன்றும் மற என்றான்"

என்றெல்லாம் மன்றாடுகின்றான் தயரதன். இறுதியில், "மைந்தனலாது உயிர் வேறிலாது வாழ்ந்த" தயரதன், மகனைப் பிரிந்தவுடன் உயிர் விடுகிறான்.

இராமன் மீது தயரதன் கொண்டிருந்த அளவற்ற பாசமே அவன் வீழ்ச்சிக்கு காரணமாயிற்று என்பர் ஆய்வாளர்.

தயரதன் குறையுடையவனா ?

இராமன் மீது வைத்த பாசமே தயரதன் வீழ்ச்சிக்குக் காரணம் என்பது உண்மைதான். ஆனால் அது மட்டும் காரணமன்று. தயரதன் கடைப்பிடித்த நல்ல கொள்கையும் ஒரு பெருங்காரணம். ஆம் ! தயரதன் கைகேயிக்குக் கொடுத்திருந்த வரங்களை அவன் இவ்வாறு தவறாகப் பயன்படுத்தித் தன்னை இப்படி ஒரு இக்கட்டில் மாட்டுவாள் என்று அவன் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. இப்போது அவள் ஏய வரங்கள் இரண்டில் ஒன்றினால் இராமன் காடேக வேண்டும் என்றும், இன்னொன்றினால் பரதன் நாடாள வேண்டுமென்றும் கேட்டுவிட்டாள். மூத்தவன் இருக்க இளைவன் ஆளுவதா ? இது மரபல்லவே ! மரபைக் காக்க வேண்டுமெனில் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாதே ! என்ன செய்வது ?

இத்தகைய இக்கட்டான - தர்ம சங்கடமான நிலையில் நெருக்குண்டுதான் தயரதன் மாண்டு போனான். "வாய்மையும் மரபும் காத்து மன்னுயிர் துறந்த வள்ளல் தூயவன்" என வாலி வடித்துச் சொன்னது எத்துணை சரியான கணிப்பு என்பதை உணர முடிகின்றது.

இராமனும் கூட தந்தை இறந்த செய்தியைக் கேட்டவுடன், "தனியறத்தின் தாயாகவும் வாய்மைக்கு ஒருவனாகவும்" தயரதன் திகழ்ந்ததை எண்ணி

"தனியறத்தின் தாயே !
இறந்தனையே ! அந்தோ !
இனி வாய்மைக்கு யாருளரே !"

என்று புலம்புகிறான்.

முடிவுரை

நல்ல அரசனாக, நல்ல கணவனாக, நல்ல தந்தையாகத் திகழ்ந்த தயரதன் அறுபதினாயிரம் ஆண்டுகள் நிறைவாழ்வு வாழ்ந்தவன். இறுதியில் அத்தூயவன் வாய்மையும் மரபும் காக்க உயிர் துறந்து, "வையம் முற்றும் நடந்த வாய்மை மன்னன்" எனும் இறவாப் புகழ் எய்தினான்.

கம்ப ராமாயணத்தில் பெண்மைப் பண்புகள்

- புலவர் சு. முரளி

உலகுக்குக் கம்பன் அளித்த காவிய அமுதம் கம்பராமாயணம். கம்பன் கல்விக் கடல்; கவிதையின் ஊற்று; கற்பனைக் களஞ்சியம்; அரசியல் அறிஞன்; மிகச் சிறந்த உளவியல் அறிஞன் !

கம்பனைப் பற்றிய திறனாய்வுகள் பன்முகப் பார்வையில் பலரால் ஆய்வு செய்து வருகின்ற காலமிது !

உளவியல் வல்லார் சிந்தனைகளைக் கம்பன் காப்பியத்துடன் ஒப்பு நோக்கி கம்பன் படைத்த பெண் பாத்திரப் படைப்புகளில் மூவர் பண்பை உளவியல் அடிப்படையில் எடுத்து எழுதுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கம்பன் படைத்த பெண் பாத்திரங்கள்

கம்பராமாயணத்தில் தேவ நங்கைகளும், முனிபத்தினிகளும், அரச தேவியர்களும், தோழியரும், அரக்கர் குல மாதர்களும், அரக்கியரும் எனப் பல பெண் பாத்திரங்கள் படைக்கப்பட்டுள்ளனர்.

அகலிகை, அங்கார தாரை, அஞ்சனை, அதிதி, அயோமுகி, அரம்பை, அருந்ததி, அனசூயை, இரேணுகா தேவி, இலங்காதேவி, உருமை, ஊர்மிளை, ஊர்வசி, ஏமை, கங்காதேவி, கியாதி, கிருதாசி, குமுதி, கூனி (மந்தரை) கைகேசி, கோசலை, கௌசகி, சாந்தை, சீதை, சுமதி, சுமத்திரை, சுயம்பிரபை, சுரசை, சுருதகீர்த்தி, சூர்ப்பணகை, சோமதை, தாடகை, தாரை, தானிய மாலை, திதி, திலோத்தமை, திரிசடை, நீலமாலை, மண்டோதரி, மாண்டவி, மேனகை, விதர்ப்பை, விந்தை, வேதவதி, வைதர்ப்பி ஆகியோர் அடங்குவர்.

அவர்களுள் கைகேயி, கூனி, சூர்ப்பனகை ஆகிய மூவரின் பண்புகளை உளவியல் அடிப்படையில் இக்கட்டுரை ஆராய்கிறது.

நடத்தை உளவியல் நோக்கில் கூனியின் பாத்திரமும் சூர்ப்பனகையின் பாத்திரமும் நடத்தை உன்னிப்புக்கு எடுத்தாளப்படுகிறது.

கைகேயியின் பாத்திரப் பண்புகளைச் சிறப்பிக்க உளவியல் அடிப்படையில் ஆய்வு செய்யப்படுகிறது.

உளவியல் சுருக்கமான விளக்கம்

உளவியல் என்பது மனம் அல்லது மூளை பற்றிய படிப்பே ஆகும். மனித உளவியலுக்கு எண்ணங்களும் உணர்வுகளும் அடிப்படையாகும்.

'நமது மனம் மூன்று நிலைகளைக் கொண்டது என உளவியலார் கருதுகின்றனர்' (1)

அவையாவன : 1. நனவு நிலை [Conscious Mind]
2. இடை மனநிலை [Sub-conscious Mind]
3. நனவிலி நிலை [Unconscious Mind]

நனவு நிலை

உடனடியாக உணரக்கூடிய அனுபவங்கள் உளச் செயல்களைக் கொண்ட பகுதி. இது மனத்தின் மிகச்சிறிய பகுதியாகும்.

இடை மனநிலை

எண்ணங்கள், நினைவுகள், அனுபவங்கள் ஆகியவற்றை நாம் தற்சமயம் உணர்ந்திராவிட்டாலும் எப்பொழுது தேவையோ அப்பொழுது நனவு நிலைக்கு உயர்த்தி உணரத் தக்க பகுதியோகும்.

நனவிலி நிலை

நமது பண்படாத (Primitive) ஊக்கங்களும் வெற்றி கிட்டாமல் நசுக்கப்பட்ட மனவெழுச்சிகளும், முயற்சிகளும் தேங்கிக் கிடக்கும் மனத்தின் அடித்தளமே நனவிலி நிலையாகும். இப்பகுதியே நம் மனத்தின் பெரிய பகுதியாகும்.

இவை நம் மனத்தின் அடித்தளத்தில் தொடர்ந்து இருப்பதை நாம் நேராக அறிய முடியாது. இவை நம் நடத்தையைப் பாதிக்கின்றன. இதனை நாம் மறைமுகமாகவே உணர முடியும்.

மனத்தின் மூன்று பகுதிகள் என்று சொல்வதால் இவை மனத்தின் மூன்று இடப்பரப்புப் பிரிவுகள் (Spatial Division) என்று ஏற்றுக் கொள்ளக் கூடாது. நமது உள்ளம் செயற்படும் மூன்று நிலைகளையே இவை குறிக்கின்றன என உளவியலறிஞர் கூறுவர்.

நனவிலி நிலையின் இயக்கச் சக்தி (Dynamism) பற்றி சிக்மண்ட் பிராய்டு என்னும் உளவியல் அறிஞரும் அவரது கோட்பாடுகளைப் பின்பற்றும் உளப்பகுப்பாளர்களும் ஆராய்ந்து அறிந்து பல உண்மைகளை வெளியிட்டுள்ளனர்

உளவியல் சிந்தனை வரலாறு பிளேட்டோவிலிருந்து தொடங்குகிறது.

கி.மு. 387 இல் உளப்பிடி முறைகளுக்கு மூளை இயக்கங்களே காரணமாகும் என்றார் பிளேட்டோ.

கி.மு.335 இல் இதயத்தை முன்னிலைப்படுத்தினார் அரிஸ்டாட்டில்.
உளப்பகுப்பாய்வு என்னும் நிலையை அடைந்தவர் சிக்மண்ட் பிராய்டு என்றாலும் உளப்பகுப்பாய்வுத் துறையின் தொடக்கப் புள்ளியாக இருந்தவர் ஜோசப் ப்ருயரே ஆவார்.

சிக்மண்ட் பிராய்டு, யூங், அட்லர் ஆகிய மூவரும் உளப்பகுப்பாய்வின் மும்மூர்த்திகள் என்பர். அட்லர் இடத்தை லக்கான் பிடித்துவிட்டார்.

ஃப்ராய்டியத்தைப் புரிந்துகொள்ள இயற்பியல் அறிவு தேவை.

யூங்கியத்தைப் புரிந்துக்கொள்ள ஆன்மீக அறிவு தேவை.

லக்கானைப் புரிந்து கொள்ள குறியியல் அறிவு தேவை.

ஃப்ராய்டிய அணுகுமுறை சுவாரசியமாக இருக்கும்.

யூங்கிய அணுகுமுறை எல்லோருக்கும் தெரிந்தது போலத் தோற்றமளிக்கும்.

லக்கானிய அணுகுமுறை வியக்க வைக்கும்.

நனவிலியை (Un Conscious Mind) மூவரும் அகநிலையில் முதன்மைப் படுத்துகின்றனர். நனவுச் செயற்பாடுகளை இரண்டாம் நிலைகளாகக் கொள்கின்றனர்.

தனியர் நனவிலியை ஃப்ராயிடும் சமூக நனவிலியை லக்கானும் இன நனவிலியை யூங்கும் முன் வைக்கின்றனர்.

நனவிலி வேட்கையை மூவரும் உள இயக்காற்றலாகக் காண்கின்றனர்.

ஃப்ராய்டு 'இட்' வேட்கை என்கிறார்.

யூங் முழுமைக்கான வேட்கை என்கிறார்.

லக்கான் உவர் வேட்கை என்கிறார்.

உளவியல் பிரிவுகள்

உளவியலில் பல பிரிவுகள் உள்ளன.

அவையாவன :

பிறழ்வு உளவியல், நடத்தை உளவியல், உயிரி உளவியல், அறிவினை உளவியல், வளர்வு உளவியல், தனியர் வேறுபாடுகள், உடல்சார் உளவியல், சமூக உளவியல் என்பதாம்.

அவற்றுள் நடத்தை உளவியலைப் பற்றிய விளக்கம் :

சமூகத்தில் வெளிப்படுத்த முடியாத, சமூக நலத்துக்கு ஒவ்வாத சில ஊக்கங்களும், எழுச்சிகளும் மனிதனிடம் இயல்பாக உள்ளன. இவை சூழ்நிலைக்கும் மனச்சாட்சிக்கும், பொருந்தா. இருப்பினும் இவை நம் செயல்களில் வெளிப்படத் துடித்துக் கொண்டிருப்பவை. இவை வெளிப்பட முடியாதபோது உளப் போராட்டங்கள் (Mental Conflicts) மனமுறிவு (Frustration) ஆகியவை தோன்றுகின்றன. ஆசை தடைப்படும் சமயங்களில் மனமுறிவு தோன்றுகிறது. இதன் காரணமாகப் பொருத்தப்பாடின்மை தோன்றி பிரச்சனை நடத்தைகள் (Problem Behaviour) எழுகின்றன.

தீவிர இடர்தரும் நடத்தை, பிரச்சனை நடத்தை எனப்படுகிறது.

கம்பராமாயணப் பெண் பாத்திரங்களில் கூனியும், சூர்ப்பனகையும் பிரச்சனை நடத்தை உள்ளவர்கள் என ஆய்வு செய்யப்படுகிறது.

கூனியின் நடத்தை

அழிவு செய்யும் நடத்தையும், (Destructiveness) எதிர்ப்பு நடத்தையும், (Agressive Behaviour) பிரச்சனை நடத்தையின்பாற்படும் என உளவியல் அறிஞர் கூறுவர்.

கூனியின் பாத்திரப் படைப்பில் உளவியல் அடிப்படையில் மேற்கூறப் பெற்ற இரண்டு நடத்தைகளும் அவளிடம் இருப்பதை அறியலாம். அவளால் பல துன்பங்கள் பிறருக்குத் தோன்றியதைக் கம்பன் காட்டுகிறான்.

கூனியின் அழிவு நடத்தையைக் கம்பன்,

“கூனும் சிறிய கோத்தாயும்
கொடுமை இழைப்ப”

என அயோத்தியாக் காண்டத்தின் தொடக்கத்தில் குறிப்பிடுகின்றான்.

மேலும்,

“அந்நகர் அணிவுறும் அமலை, வானவர் பொன்னகர் இயல்பு எனப் பொலியும் ஏல்வையில் இன்னல் செய் இராவணன் இழைத்த தீமைபோல் துன்ன அரும் கொடுமனக் கூனி தோன்றினாள்” எனவும் மந்தரையின் மனக் கொடுமையைப் புலப்படுத்துகிறான்.

கைகேயி தூய உள்ளம் கொண்டவள். அவள் மனதை மாற்றுவதற்காகக் கூனி பலவாறு பேசுகின்றாள். கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையுந் தானே !

தந்தையும் கொடியன் நற்றாயும் தீயலாள்
எந்தையே பரதனே! என் செய்வாய்?

எனப் பரதனுக்கு நன்மை செய்பவளைப் போலப் பேசுகின்றாள். அவ்வாறே

"உனக்கும் உறுபொருள் உணர்த்துகை தவிரேன்" எனக் கைகேயிக்கு நன்மை செய்பவள் போலப் பேசுகிறாள்.

இவை பரதனுக்கும், கைகேயிக்கும் நன்மை கிடைக்க வேண்டும் என்பதற்காகக் கூறப்பட்டவை அல்ல.

பண்டை நாள் இராகவன் பாணி வில் உமிழ் உண்டை உண்டதனைத் தன் உள்ளத்திலே கூனி நினைந்து நினைந்து கனன்றதன் விளைவே ஆகும்.

கைகேயியின் மனதை மாற்ற முயன்ற கூனியை 'போதி என் எதிர் நின்று' என அவள் கூறியும் கூனி போகவில்லை. 'அஞ்சி மந்தரை அகன்றிலள் என்ற கம்பன் மொழியால் இதனை உணரலாம்.

தொடர்ந்து பேசுகின்ற கூனியின் பேச்சு கைகேயியிக்கு "வரங்களே சாபங்களாக" ஆகின்றன.

மேற்கூறிய சான்றுகளால் கூனியின் எதிர்ப்பு நடத்தை (Agressive Behaviour) புலனாகின்றது.

கைகேயியின் பண்பு நலன்

உறங்கும் பொழுது ஒருவருடைய அக மனதில் என்ன எண்ணம் எழுகிறதோ அதுதான் அவரது முகத்தில் வெளிப்படும். பகலில் முகபாவங்களை மாற்றிக் கொள்ளலாம். இரவில் இயலாது.

கைகேயி உறங்கிக் கொண்டிருந்தபோது அவள் கடைக்கண் வழி அருள் சுரந்து கொண்டிருந்தது என்பதைக் கம்பர் 'கடைக்கண் அளிபொழிய பொங்கு அணை மேல் கிடந்தாள்' என்று கூறுகிறார்.

மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய அந்தக் காரணங்கள் நான்கிலும் அருள் நிரம்பிய கைகேயி கொடுமையைச் செய்திருப்பாளா? கணவனை - வாய்மையும் மரபும் காத்து மன்னுயிர் துறந்த வள்ளலை பழியிலிருந்து காப்பதே தன் கடமை என உறுதியுடன் செயல்பட்ட தியாக வடிவம் அவள்! அதனால்தான்,

"தீயள் என்றுநீ துறந்த என் தெய்வமும் மகனும்
தாயும் தம்பியும் ஆம் வரம் தருக"

என்று இராமன் தசரதனிடம் வேண்டுகிறான்.

இனி, கைகேயியின் வலிமை, பிடிவாத குணம், உடனடி வெளிப்பாடு, தன்னவம், புறவுலகக் கவலையின்மை முதலிய பண்புகளை 'இட்' செயலியாகக் கருதலாம்.

புலனறிவு, புலனுணர்வு, அகவுலகம், புறவுலகம் இரண்டையும் சமச்சீர் செய்து அவற்றிற்கு ஏற்பத் தன்னைத் தகவமைத்துக் கொண்ட கைகேயியின் ஈகோ (Ego) செயற்பாடு இட, காலச் சூழலுக்கு ஏற்ப வெளிப்படும் சிறப்புப் பணியாகக் கருதலாம்.

கைகேயியின் தியாக மனப்பான்மைதான் சூப்பர் ஈகோ (Super Ego) வாகச் செயல்பட்டு இன்றளவும் பேசப்படும் பாத்திரமாக மாற்றி உள்ளது.

கைகேயி, தசரதனிடம் இரு வரங்களைக் கேட்கச் சொல்லிய தூண்டுதலே கூனியின் சூழ்ச்சி தான்! இது ஒரு நினைவூட்டல் நிகழ்ச்சி! சம்பராசுரப் போரில் தசரதன் கைகேயியின் மனவலிமை, உடல் வலிமையைப் போற்றி வரந் தருவதாகச் சொன்னதைக் கூனி நினைவுபடுத்துகிறாள். இந்நினைவூட்டல் நிகழ்வு உளவியல் அடிப்படையில் மீட்டுருவாக்கமாகக் கருதலாம்.

சூர்ப்பனகையின் நடத்தை

உளப் போராட்டங்களிருந்து தீவிர பொருத்தப்பாடற்ற நடத்தைகள் தோன்றும். இவை பல ஒழுங்கற்ற நெறி பிறழ் நடத்தைகளுக்கு அடிப்படைக் காரணங்கள் ஆகும் என உளநூல் அறிஞர் உரைப்பர்.

ஆரண்யத்தில் அழகு ராமரைக் கண்ட அரக்கி சூர்ப்பனகையின் உள்ளத்தில் காமம் தோன்றுகிறது. இராமரை அடையத் தடையாக இருப்பவள் சீதை என்று சூர்ப்பணகை கருதுகிறாள். அவள் இருக்கும் வரை இராமன் என்னை நோக்கவும் மாட்டான் என எண்ணுகிறாள் என்பதைக்

"காவியோ கயலோ எனும் கண்இணைத்
தேவியோ திருமங்கையின் செவ்வியாள்
பாவியேனையும் பார்க்கும் கொலோ"

என்ற கம்பன் மொழியால் அறியலாம்.

காமவெறியால் சூர்ப்பணகையின் மனம் போராடுகிறது. அதைக் கம்பன்,

"அலைக்கும் சூழி அடங்கிட அங்கையால்
மலைக் குலங்களின் தூர்க்கும் மனத்தினாள்"
"பூ எலாம் பொடியாக இப்பூமியுள்
கா எலாம் ஓடிப்பென் எனக் காந்துவாள்"

என வருணிக்கிறான்.

இது காமவெறியின் உச்சத்தை எட்டிய சூர்ப்பனகையின் உள்ளக் கொதிப்பு ! சீதை இராமனின் அருகே வர, அவளைப் பார்த்த சூர்ப்பனகை 'நீ இடை வந்தது என்னை ? நிருதர் தம் பாவை' எனச் சினம் கொள்கிறாள். சீதையை விலக்கல், இராமனை அடைதல் என்ற இரு முனைகளுக்கு இடையே தோன்றும் காமவெறி சூர்ப்பனகையிடம் உளப் போராட்டமாக வெடிக்கிறது.

இதன் காரணமாக,

" படி இலாள் மருங்கு உள்ள அளவு எனை அவன் பாரான்
கடிதின் ஓடினென் எடுத்து ஒல்லைக்
கரந்து அவள் காதல் வடிவினா ளுடன் வாழ்வதே மதி"

எனச் சூர்ப்பனகை முடிவு எடுக்கிறாள். மேலும் கரன்' இராவணன் இவர்களிடம் பொய் பல கூறுகின்றாள்.

உளப் போராட்டத்தின் முடிவு ஒழுங்கற்ற நடத்தையாக மாறும் என்ற உளவியல் உண்மைக்கு ஏற்பச் சூர்ப்பனகையின் பாத்திரம் அமைந்துள்ளது. அவளது ஒழுங்கற்ற நடத்தைக்குக் காரணம் காமவெறியால் தோன்றிய உளப் போராட்டமே !

நிறைவுரை :

கைகேயி, மந்தரை, சூர்ப்பனகை முதலிய பெண் பாத்திரங்கள், உளப் போராட்டம் காரணமாக தீமை தரும் முடிவுகளை எடுத்தனர். அதனால் தீயோராக எண்ணும் நிலை அடைந்தனர்; தீமை விளைந்தது ! இருப்பினும் எந்நாட்டிலும் எந்தக் கவியும் தன் பாத்திரங்களை முற்றிலும் தீயவர்களாக அமைப்பதில்லை.

"ஒருவன் அறிவானும் எல்லாம் யாதொன்றும்
ஒருவன் அறியா தவனும் - ஒருவன்
குணனடங்கக் குற்ற மிலானும் ஒருவன்
கணனடங்கக் கற்றானும் இல்".

(சிறுபஞ்சமூலம் - 31)

இந்த முறையை ஒட்டியே கம்பனும் தன் பாத்திரங்களில் ஒருவரையாவது முற்றும் தீயவராகச் சித்தரிக்கவில்லை.

காப்பியம் சிறக்க பாத்திரப் படைப்பில் உளவியற் கூறுகளைக் கையாண்ட காரணத்தால் கம்பன் உளவியல் அறிஞனாய் ஒளிர்கின்றான்.

பயன்பட்ட நூல்கள்

1. கம்பராமாயணம் இராமாவதாரம் — கம்பன் கழகப் பதிப்பு, சென்னை

2. கல்வி உளவியலும் கல்விச் சமூகவியலும் — எஸ். சந்தானம், பழநியப்பா பிரதர்ஸ்

3. கம்பனின் அரசியல் கோட்பாடு — அப்துல் ரகுமான் .எஸ் டாக்டர், கம்பன் கழகம், சென்னை

4. கம்பனும் உளவியலும் — டாக்டர் அ.அ.ஞானசுந்தரத்தரசு, தமிழ்ச்சோலைப் பதிப்பகம்

5. Vlaviyal Mika Curukkamana Arimugam A very short introduction in English by Gilrian Butler & Freda MC Manus. — தமிழில் மொழிபெயர்த்தவர்; தி.கு. இரவிச்சந்திரன், அடையாளம் பதிப்பகம்



கம்பன் கண்ட பக்தியும் அறமும்

– பேராசிரியர். அ.ச. ஞானசம்பந்தன்

இக்காலத்தில் அறம் என்று கூறியவுடன் அதனை ஏற்றுக் கொள்ளுபவர்களில் சிலர் பக்தியை ஏற்றுக் கொள்ள அஞ்சும் காலம் இது. நம்மையும் அறியாமல் அறமும் பக்தியும் என்ற இந்த இரண்டும் பிரிந்து சென்றுவிட்டன. அறவாழ்வைக் கடைப் பிடித்தால் போதும். பக்தியைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை என்று மார்தட்டிய நாடு இது. துக்கம், துக்க உற்பத்தி, துக்க நிவாரணம், துக்க நிவாரண மார்க்கம் ஆகிய நான்கையும் அடையவேண்டுமானால், 'புத்தம் சரணம் கச்சாமி'. 'சங்கம் சரணம் கச்சாமி' என்று சொல்லிவிட்டாலே போதுமானது. இதற்கு மேல் முழு முதற்பொருள் ஒன்று உண்டு என்று எண்ணத் தேவையில்லை என்ற அடிப்படையில் மாபெரும் சமயம் ஒன்றை நிறுவி அகில உலகமும் அதனைத் தலைவணங்கி ஏற்கும்படி செய்த புத்த பெருமான் தோன்றிய நாடு இது. அறம் ஒன்றே வாழ்க்கைக்குப் போதுமானது என்று கூறிச் சென்ற புத்த தேவன் தோன்றிய இந்த நாட்டிலே அறத்தோடு மட்டும் நீ வாழ்வாயானால் அந்த வாழ்க்கை பிறர்க்குப் பயன்படும் முழுத்தன்மை உடையதாக ஆவது கடினம். 'மாரனை வெல்லும் வீரர்களான' புத்தபெருமான் போன்ற ஒரு சிலர்க்கே தனி அறநெறி வீடுபேற்றை அளிக்கலாம்.

ஆனால் என்போன்ற-எளிய-குறிக்கோளற்ற-அறியாமை நிரம்பிய மக்கள் அறநெறி ஒன்றையே பற்றி வாழ்வது இயலாத காரியம் என்ற உண்மையை உணர்ந்த கருணை மிகுந்த பல பெரியவர்கள் "அறம் மட்டும் போதாது, பக்தியும் உடன் இருத்தல்வேண்டும்" என்றும் கூறியுள்ளனர். அப்படிச் சொன்னதோடு அமையாமல் எத்தனை எத்தனை வகையாக அதனைப் பகுத்துக்காட்ட முடியுமோ அத்தனை அத்தனை விதமாகப் பகுத்துக் காட்டியும் சென்றனர்.

மனித வர்க்கம் முழுவதனையும் ஒரு கண்ணோட்டம் விட்ட இத்தமிழர், கல்விக் கடலில் கரைகண்டவர்கள் ஒருபுறமும், 'கல்வி' என்ற மூன்றெழுத்தின் வாசனையை அறியாது வாழ்க்கை நடத்துகின்றவர்கள் ஒரு புறமும் இருக்கக் கண்டனர். இந்த இரண்டும் மனித சமுதாயத்தில் இரண்டு கோடிகள். இந்த இரண்டு கோடிகட்கும் இடையில் தொடர்பு உண்டா ? புத்த தேவன் சட்டப்படி பார்த்தால் இருத்தல் இயலாத காரியம்; அறத்தை உள்ளவாறு உணர்ந்தாலன்றி மனிதன் உயர் நெறி அடைய

இயலாது; எல்லாத் துன்பத்திற்கும் மூலமாக இருப்பது ஆசை' என்ற பேருண்மையை அறிதல் கற்றறிவுடைய பெருமக்கட்கே மிகமிகக் கடினம் என்றால், மனித வர்க்கத்தின் அடித்தளத்திலே இருக்கின்ற அறியாமை நிரம்பியவன் என்றுதான் உய்கதி அடைவது? இந்தப் பிரச்சினையை ஆராயத் தொடங்கிய நம் பெரியவர்கள், மனித சமுதாயம் முழுவதையும் ஒரு கண்ணோட்டம் விட்டவர்கள் 'அப்பா, அறியாமை நிரம்பிய உனக்கும் இடம் உண்டு !' என்றார்கள்; கல்வி என்ற ஒன்றை ஏழு பிறப்பிலும் காணாத ஒருவனுக்கும், கல்விக் கடலின் கரைகண்ட ஒருவனுக்கும் இங்கே இடம் உண்டு. அப்படியானால், இந்த இருவரும் இருவேறு இடத்தினை அடையப் போகின்றார்களா என்றால், இல்லை என்று வாதிட்ட பெருமை இந்தத் தமிழனுக்கு உண்டு. சொன்னான்:-

"மதவலி நிலைஇய மாத்தாட் கொழுவிடைக்
குருதியொடு விரைஇய தூவெள் அரிசி
சில்பலிச் செய்து பல்பிறப்பு இரீஇ
....
முருகாற்றுப் படுத்த உருகெழு வியல்நகர்"

(திருமுருகு - 232-244)

ஆட்டை அறுத்து அதனுடைய குருதியில் அரிசியைக் கலந்து சிதறி 'ஓ! வேலா' என்று கத்துகின்றானே, கல்வி என்பதையே பல தலைமுறைகளாகக் காணாத ஒருவன், அவ்விடத்தும் முருகன் இருக்கின்றான் என்கின்றான் ஒரு பழந்தமிழன். கல்வியின் கரையில் நின்று,

"புலராக் காழகம் புலர உடீஇ
உச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்து
ஆறுஎழுத்து அடக்கிய அருமறைக் கேள்வி
நாவியல் மருங்கில் நவிலப் பாடி"

(திருமுருகு - 184-178)

ஆடும் அறிவு நிறைந்த ஒருவனுக்கும் அதே முருகன்தான் வீடுபேற்றை அருளுகின்றான். கல்வி என்பதே இன்னது என்று அறியாத ஒருவனும், அறிவின் எல்லையிலே நிற்கும் ஒருவனும் சென்று சேருவது ஒரே இடம்தான் என்று சொல்லும் தெளிவான நிலை இந்தத் தமிழனுக்கு உண்டு.

தத்துவ உலகிலேமட்டுமன்றிக் காப்பிய உலகிலேயும் இந்த இரண்டையும் மோதவிட்ட பெருமை கம்பனுக்கு உண்டு. முழுமுதற் பொருளே இராமனாக

வந்திருக்கின்றான். அந்தக் காட்சியை அறியாதவர் யாரும் இல்லை. எனவே, இராமனைப் பற்றி ஒன்றும் சொல்லத் தேவையில்லை. அந்த முழுமுதற் பொருள் கங்கைக் கரையின் ஒருபுறம் அமர்ந்திருக்கிறான். நூற்றுக்கணக்கான முனிபுங்கவர்கள் – வாழ்க்கையில் இனி அறியவேண்டியது எதுவுமே இல்லாதவர்கள் – 'கற்பனவும் இனியமையும்' என்று மணிவாசகப் பெருமான் கூறியாங்கு எல்லாவற்றையும் கற்றவர்கள் இராமனைச் சுற்றி அமர்ந்துள்ளனர். அத்தனையும் கற்ற அவர்களின் கல்வி அறிவானது, பொருளின் இயல்பை அது இது எனப் பகுத்தறிவதற்குப் பயன்பட்டதே தவிர, அந்த அறிவால் வேறு பயன் ஒன்றும் அறியாது மயங்கிய நிலையில் உள்ளனர் அவர்கள். மாபெரும் தவசிகள் அத்தனை பேருக்கும் வேண்டியது ஒன்றே ஒன்று; அதுவே பிறவிக்கு மருந்து. அவர்கள் கற்கக் கற்க கல்வி பிறவிப் பெரும் பிணிக்கு மருந்தாக அமையவில்லை என்று தெரிகிறது. கற்கக் கற்க மேலும் ஐயம் எழுந்ததே தவிர, எப்படி வாழ்க்கையைப் பயன் உள்ளதாக ஆக்குவது என்பதனை அறிந்துகொள்ள அவர்களால் இயலவில்லை. இதனை அறியவே இராமனிடம் வந்துள்ளனர் போலும் ! கல்வியின் கரைகண்டவர்கள் நடுவே இராமபிரான் பாற்கடலில் பாம்பணையில் பள்ளிகொண்டது போல் வீற்றிருக்கின்றான். இந்தச் சூழ்நிலையை அடித்தளமாக அமைத்துக்கொண்டு, அறிவுச் சூழலிலே அறிவுக் கடலாக இருக்கும் இராமபிரானை வீற்றிருக்க வைத்து, அறிவுக்கும் தனக்கும் பலதலைமுறைகளாகத் தொடர்பு இல்லாத ஒருவனை இடையே புகவைத்து மோத விடுகிறான் கவிச் சக்கரவர்த்தி. திரும்பிய இடமெல்லாம் அறிவுக் கடலாக விளங்கும் அறிவுலகிற்கு இடையே அறிவே இல்லாத ஒன்று புகுந்து புறப்படுகிறது.

அறிவிலா அவன் வருகின்ற காட்சியே வெறுப்பை அளிக்கும் காட்சியாக உள்ளது. நாள்தோறும் கங்கையிலே மூன்று வேலை உடல் கழுவி வேள்வி செய்யும் முனிவர்களிடையே கங்கைக் கரையில் வாழ்ந்தாலும் ஒரு முறை குளிக்கவும் எண்ணம் ஓடாத ஒருவன், சிவந்த மேனியர்கள் சூழ இருக்கும் இடத்தின் நடுவே கரிய நிறத்தினனாகிய ஒருவன், கைகளெல்லாம் பனைமரத்தினைப் போன்ற வடிவமுடைய ஒருவன், உடல் முழுவதும் பனை மரத்தின் சிராம்புகள் போன்ற மயிர்களைப் பெற்ற ஒருவன், கையிலே மீன் நாற்றம் எடுக்கும் கலயத்தோடு நுழைகின்றான். முனிபுங்கவர்கள் நடுவே மீன் நாற்றம் வீசும் கலயத்தைத் தாங்கியவன் ஒருவன் புகுகின்றான். முரண்அழகை இங்ஙனம் ஒப்பற்ற முறையில் கையாள்கிறான் கவிஞன். கல்வியின் எதிரே கல்வி வாசனையே இல்லாமலும், உடல் தூய்மையின் எதிரே தூய்மையற்ற நிலையிலும் உள்ள ஒருவனைப் புகுத்துகிறான்.

குகன் வந்ததனைக் காவலன் இலக்குவனுக்கு உணர்த்தினான். பெற்ற தாயைவிட, பெற்ற தந்தையைவிட, மூத்த அண்ணனை விடத்தான் அறிவிற் சிறந்தவன்

என்று கருதிக்கொண்டிருப்பவனும், சினத்தின் எல்லையில் நிற்பவனுமாகிய இலக்குவன் வெளியே வந்து வந்திருப்பவனைக் காண்கிறான். வந்தவன் உடம்பிலும் கையில் உள்ள கலயத்திலும் உள்ள மீன் நாற்றமே, வந்துள்ளவன் யார் என்பதனைப் புலப்படுத்துகிறது. இருப்பினும் இலக்குவன், 'யார்' என்று கேட்கிறான். அதற்குக் குகன் கூறும் பதிலோ, சேனாவரையர் விதிப்படி, விடை வழுவாகும். அவன் கூறுகிறான்- 'தேவா நின்கழல் சேவிக்க வந்தனன்' கேட்ட கேள்விக்கு உரிய பதிலை அவன் சொன்னானில்லை. பாண்டியன் நெடுஞ்செழியன் கண்ணகியைப் பார்த்து, 'யாரையோ நீ மடக்கொடி யோய்' என்று கேட்டான். கண்ணகிப் பெருமாட்டியோ முதலில் தன் நாட்டின் பெருமையையும் அடுத்துக் கணவனின் குடும்பத்துப் பெருமையையும் கூறினாள். அப்படிப்பட்ட "மாசாத்துவான் மகனையாகி, ஊழ்வினை துரப்ப நின்நகர் புகுந்து நின்பாற் கொலைக்களப்பட்ட கோவலன் மன்வி; கண்ணகி என்பது என் பெயர்" என்று கூறுகிறாள். கேட்ட கேள்விக்கு நேரடியாக விடை சொல்வதாயிருப்பின் 'கண்ணகி' என்று கூறியிருந்தாலே போதும். அறிவுடை உலகிலே வாழ்பவர் 'யார்' என்று கேட்டவுடனே தன்னைப்பற்றியே தம்பட்டம் அடித்துக்கொள்வார்கள். பக்தி உலகிலே வாழ்பவர் தம் நினைவை இழந்துவிடுவார்கள். எனவேதான், கண்ணகி பல பேசினாலும் அனைத்தும் அவளைப் பற்றியல்லாமல், குலப் பெருமை, நாட்டின் சிறப்பு, அரசின் உயர்வு ஆகியவைகளைப் பற்றிப் பேசினாள். பக்தி நிலை அவ்வாறு பேசும், நம் அறிவுக்கு விடை வழுவாகத் தோன்றும், ஏன் ? நாம் அறிவுக் கண்கொண்டு நோக்குகின்றோம், அதனாலேயே.

இந்த அடிப்படையில்தான் குகனின் சொற்களையும் காணவேண்டும். "தேவா நின்கழல் சேவிக்க வந்தனன், நாவாய் வேட்டுவன் நாயடியேன்" என்றான். ஏழு சொற்கள். அறிவே வடிவாக நிற்கும் இலக்குவனின் உள்ளத்தில் இந்தச் சொற்கள் சென்று ஆழப் பதிந்துவிட்டன. பக்தி வடிவத்திலிருந்து தோன்றும் இச்சொற்கள் அறிவின் படிவமாக விளங்கும் இலக்குவன் மனத்தே தோற்றுவித்த உணர்ச்சி மிகப்பெரிய உணர்ச்சி. எனவே, அண்ணனிடம் ஓடினான். "உள்ளம்தூயவன் தாயினும் நல்லன் (குகப்-40) ஒருவன் வந்திருக்கிறான்" என்றான். வெகுளியில் விசுவாமித்திரன், துருவாசர் ஆகிய எல்லாரையும் விஞ்சக்கூடிய இலக்குவன் நாற்றம் வீசும் குகனைப் பற்றி அண்ணனிடம் இவ்வாறு கூறினான் எனின் இது வியப்பன்றோ ? "தேவா நின்கழல் சேவிக்க வந்தனன் நாவாய் வேட்டுவன் நாயடியேன்" என்றானே தவிர, தன் பெயரைக் கூட அந்தக் குகன் சொல்லவில்லை யென்றால், எவ்வாறு இலக்குவன் மனத்தில் 'தாயினும் நல்லன்' என்ற இவ்வெண்ணம் பிறந்தது ? சொல்லால், தோற்றத்தால் மட்டும் ஒன்றை நிர்ணயித்துவிட முடியாது. அறிவால் விஞ்சிய இலக்குவன் அறிவின் துணையை நாடாமல் உணர்வால் குகனை எடையிட்டான்.

அங்கே பக்தி செய்பவன், பக்தி செய்யப்படும் பொருள், பக்தியாகிய செயல் ஆகிய மூன்றும் வேறு வேறாக இல்லாத நிலை தோன்றுகிறது. ஆராய்ச்சி, அறிவு ஆகிய இரண்டுக்கும் அங்கே இடத்தைக் காணமுடியவில்லை. நாம் கடவுளை வணங்கும் போது கூட நம்மை மறப்பது இல்லை. அங்கே வரவு செலவு கணக்குத்தான் நினைவில் விஞ்சுகிறது; அறிவால் ஆயும்வரை 'நான் யார்? நான் வணங்கும் தெய்வம் எது?' என்பன அறிவின் அடிப்படையில் நின்று நோக்கும் வேறுபாட்டு உணர்வில் தோன்றிக் கொண்டுதான் இருக்கும். இடை இடையே பக்தி தோன்றித் தோன்றி மறையும்.

குகனிடமோ குகன் இல்லை; குகன் கொண்டு வந்த உணவு இல்லை; இராமன் ஒருவனே உள்ளான். அந்த ஒப்புயர்வற்ற நிலையில் அந்த எளிய மனிதன் நிற்கிறான். எனவேதான், இலக்குவன் கேட்ட வினாவும், குகன் அளித்த விடையும் வேறுபட்டனவாய்த் தோன்றுகின்றன. குகனைப் பற்றி இலக்குவன் இராமனிடம் கூறியதற்கும் குகன் இலக்குவனிடம் கூறியதற்கும் வேறுபாடு இருக்கக் காண்கிறோம். குகனுடைய சொற்களை இலக்குவன் இராமனிடம் கூறவில்லை; சொல்லால் சொல்ல இயலாத அவன் உள்ளத்தைச் சொன்னான். அங்கே பலப்பல முனிபுங்கவர்கள் இருக்கிறார்கள். இலக்குவனோ இராமனோ அவர்களைத் தாயாகக் காணவில்லை. ஏன்? அவர்கள் மோட்ச வீட்டிற்கு 'டிக்கட்' பெறும் நோக்கத்தோடு பயன் கருதி உட்கார்ந்துள்ளனர்; முழுமுதற் பொருளிடம் தங்கள் துயரம் கூறி விடுதலைக்கு வழிதேடி வந்துள்ளனர். ஒருவருக்குக் கூட இராமனைப் பற்றிய கவலையே இல்லை. காட்டிலே நடந்து களைத்து வந்த இராமனுக்குப் பசிக்குமே என்ற எண்ணமில்லை. எண்ணியவர்கள் 'எல்லாம் ஆகிய முழுமுதற்பொருள் நாம் கொடுத்தா உண்ணப் போகிறது' என்று அறிவின் துணை கொண்டு எண்ணி இருந்துவிட்டனர். தங்களையும் அவனையும் பிரித்துக் கண்டனர். அறிவால் வந்த வினை அது.

குகனோ இராமனையும் தன்னையும் பிரித்து அறியவில்லை. தன்னை இராமனிலே காணுகிறான். தன்னை அவனுள் கரைத்துக்கொள்கிறான், பசியும் களைப்புமே முன் நிற்கின்றன. சக்கரவர்த்தித் திருமகனுக்குப் பசிக்குமே என்ற ஓர் எண்ணம்தான் அவனைச் சுற்றிலும் வட்டமிடுகிறது. ஊருக்கெல்லாம் பயில்வானாக இருந்தாலும் தாய்க்குப் பிள்ளைதானே ! அவனுக்குப் பசி என்றால், நெடுநாள் உண்ணாமலும் வாழ இயலும் பயில்வான் என்று எண்ணாது தாய் பரிந்து சென்று "ஐயா சாப்பிடு, ஐயா சாப்பிடு" என்று அன்பாலும் ஆணையிட்டும் ஊட்டுகின்றாள். அப்படித்தான் இங்கேயும் குகன் செயல் இருந்தது; எனவேதான் "தாயினும் நல்லன்" ஆயினான். பள்ளிக்குக் குழந்தை செல்லாதது தாய்க்கும் தெரியும்; தந்தையும் அறிவான். அவன் வீடு வரும்பொழுது தந்தை கடிகிறான்; தாய்க்கு அவனைக் காணும்போது

அவன் செய்த தவறு உள்ளத்தில் எழுவதில்லை. அவனுக்குப் பசிக்குமே என்ற பரிவு உணர்வு எழுகிறது. இது கருதியே போலும் மணிவாசகப் பெருந்தகை "பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து" என்று பாடுகின்றார். அந்த அடிப்படையிலேதான் கம்பநாடன் இலக்குவன் வாயிலாகத் "தாயினும் நல்லன்" என்று குகனைப் பாராட்டுகின்றான்.

இராம இலக்குவர்க்கு மூன்று தாயர்கள் இருக்கிறார்கள்; என்றாலும் சந்தர்ப்பங் காரணமாக அவர்கள் யாரும் இப்போது உதவவில்லை. ஆனால், உணவை நினைந்து ஊட்டும் நிலையிலே குகன் முன் வந்து நிற்கின்றான். எனவே, ஊட்ட வேண்டிய தாயினும் நினைந்து ஊட்டும் கருத்துடன் முன் நிற்கும் இவன் நல்லவனாக உள்ளான் என இலக்குவன் பேசுகின்றான். இது அறிவோடு தொடர்பில்லாத நிலை; இந்நிகழ்ச்சிக்குக் கதையோடு கூடத் தொடர்பு இல்லை. 'சக்கரவர்த்தி இராமனைத் தவறாகக் காட்டுக்கு அனுப்பிவிட்டார். இராமனுக்கு இப்போது பசிக்கும்' - இந்த எண்ணம் ஒன்றுதான் குகனுடைய மனத்தில் உள்ளது. அந்தக் குகன் இராமனைக் காண நுழைகின்றான். இராமன் குகனைக் கண்டு "இருத்தியீண் டென்னலோடும்" குகன் இருக்க மறுத்துவிட்டானாம். 'தம்பி ! உட்கார்' என்று இராமன் சொல்லியும் உட்காரவில்லை. ஏன் ? 'இராமனுடைய பசி' என்ற ஓர் எண்ணம் மட்டுமே குகனை ஆட்டிப்படைக்கும் உணர்வாக உள்ளது. எனவே, உண்ணச் செய்யவேண்டும், இதுதான் அவன் வேட்கை. தாயன்பு சில காலங்களில் தவறக்கூடச் செய்யும். ஆனால், அன்பின் ஆணியாய், பக்தியின் கொடுமுடியாய் விளங்கும் குகனின் தாயன்பு மிக உயரிய நிலையில் இயங்குகின்றது. முன்னரே உண்டு வந்த தனயனைக்கூடத் தன் கையால் சோறு உண்ணவேண்டும் என்ற விருப்பத்தால், வற்புறுத்தி மறுபடியும் உண்ணச் செய்யும் தாயாரின் பிடிவாதம் தனயன்மார்களை இரண்டாட்ட நிலையில் நிறுத்துவதும் உண்டு. திறமான அறிவுடைத் தாயோ குழந்தை உண்ணுவதற்கான சூழ்நிலையை அமைத்துவிட்டுக் குழந்தை ஆர்வத்தோடு உண்பதனைக் கண்டு மகிழ்வாள். இங்கே குகன் நிலை, நினைந்து ஊட்டும் தாயின் நிலையாக, திறமான தாயின் நிலையாக இருக்கின்றது. இதனைக் கவிச்சக்கரவர்த்தி அழகாகக் காட்டுகின்றான். குகன் தான் கொண்டு வந்த உணவைக் காட்டினானாம்.

"இருத்தி ஈண்டு என்ன லோடும் இருந்திலன் எல்லை நீத்த
அருத்தியன் தேனும் மீனும் அமுதினுக்கு அமைவது ஆகத்
திருத்தினன் கொணர்ந்தேன் என்கொல் திருவுளம் என்ன –
விருத்த மாதவரை நோக்கி முறுவலன் விளம்பல் உற்றான்
(குக - 42)

(அருத்தியன் - அன்பன்; விருத்தமாதவர் - முதிய முனிவர்.)

உணவைப் பக்குவப்படுத்திக் கொண்டு வந்திருக்கிறேன். இங்கே வந்து பக்குவப்படுத்துவதானால் காலம் கழியும், உனக்குப் பசிக் கொடுமை மிகும் என அஞ்சி முன்னரே பக்குவப்படுத்தியே கொண்டு வந்துள்ளேன். சுவாமி திருவுளம் என்கொல்'' என்று கேட்கிறான். நாகரிகம் அற்ற சாதாரண மனிதன் என்று நாம் கருதும் ஒருவன் நாகரிகத்தின் உச்சத்தில் நின்று பேசிய பேச்சாகும் அது. அவன் பக்தியிலே அறிவு ஓடிவந்து பணி செய்கிறது. உயரிய பக்தியின் நிலை இதுதான். அவன் ஆராயவில்லை. ஆராய்ச்சி அவனிடம் ஓடி வருகிறது. ஏன் ? அவன் இல்லை அங்கே. இருப்பதெல்லாம் இராமனே. அவன் செயலை அறியாமை என்று எண்ணிய உயர்ந்தவர்கள் அங்கே இருந்தார்கள். அவர்கள் எண்ணம் அறியாமையில் விளைந்த விளைவாகும். அறிவிலே அறியாமையை நாம் காணவும் முடிகிறது. இதனைச் சேக்கிழார் மிகத் தெளிவாகக் காட்டுகின்றார்.

இரண்டு பேர்கள் ஒரே பொருளை வழிபட்டார்கள். குடுமித் தேவனைச் சிவகோசரியாரும் வழிபட்டு வந்தார்; திண்ணனாரும் வழிபட்டு வந்தார். ஒருவர் வேதங்களும் உபநிடதங்களும் கூறிய அறிவு நெறியிலே நின்று சாத்திரங்களைக் கரைத்துக் குடித்த சிவகோசரியார்; மற்றொருவர் கல்வி என்பதனைப் பல தலைமுறைகளாக அறியாமல் குத்து, வெட்டு கொலை என்ற சொற்களைத் தவிரப் பிறவற்றைக் கூறாத திண்ணனார். சிவகோசரியார் குடுமித்தேவரை,

நிர்குண நிராமய நிரஞ்சன நிராலம்ப நிர் விஷய கைவல்யமாய்
நிஷ்கள அசங்க சஞ்சலரகித நிர்வசன நீர்த்தொந்த நித்தமுக்த
தற்பர விஸ்வாதீத வ்யோம பரிபூரணமாகத் (தாயு - கருணா-1)

(நீர்க்குணம் - குணமற்றதாய்; நிராமய - குற்றமற்றதாய்; நிராலம்ப - சார்பற்றதாய்; நிர்விஷய-பொறிகட்குப் புலனாகாததாய்; கைவல்யமாய்-ஒரு தனியாய்; நிஷ்கள - உருவற்றதாய்; அசங்க - ஒன்றினுடனும் கூடாததாய்; சஞ்சலரகித - அசைவிலாததாய்; நிர்வசன - சொல்லைக் கடந்ததாய்; நீர்த்தொந்த - இரண்டாட்டமில்லாததாய்; நித்தமுக்த - என்றுமுளதாய்; தற்பர - தனக்குத்தானே அப்பாற்பட்டதாய்; விஸ்வாதீத - அனைத்திற்கும் அப்பாற்பட்டதாய் ; வ்யோம - வெட்ட வெளியாய்.)

தாயுமானவர் கூறியபடி முழுமுதற் பொருளாய் எல்லாம் வல்லதாய்க் காணுகின்றார். திண்ணனாரும் அதே குடுமித் தேவரைத்தான் காண்கின்றார். ஆனால், உடனே தம்மை மறந்து விடுகின்றார். நாகன் அழைத்ததும் அவருக்குத் தெரியவில்லை. அங்கே உள்ள அந்த ஆண்டவனை முழு முதற் பொருளாய், எல்லாம் வல்லதாய் ஆக்க, அழிக்க, காக்க, அளிக்கவல்ல பரம் பொருளாய் அவர் காணவில்லை. தான் வேறு அங்குக் காணப்

பெறும் குடுமித் தேவன் வேறு என்ற நிலையில் அவர் காணவில்லை. அப்படி ஒன்றுபட்ட உணர்வோடு காணுகின்றார், எனவேதான்,

"சாமி ! நீ தனியே ஈண்டுத் தங்குதல் தரித்தல் ஆற்றேன்
ஏமநல் உடுப்பூர்க்கு இன்னே என்னொடு வருதல் வேண்டும்"
(சீகாளத்திப் புராணம்)

"வெம்மறக் குலத்து வந்த வேட்டுவச் சாதியார்போல்
கைம்மலைக் கரடி வேங்கை அரிதிரி கானம் தன்னில்
உம்முடன் துணையாய் உள்ளார் ஒருவரும் இன்றிக் கெட்டேன் !
இம்மலை தனியே நீர் இங்கு இருப்பதே ? என்று நைந்தார்.
(பெரியபுராணம் - கண். புரா-107)

வேடர்குலத்து உதித்த திண்ணனுக்குக் காட்டில் விலங்குகட்கு இடையே தனித்து இருப்பது எவ்வளவு இன்னல் நிறைந்தது என்பது நன்கு தெரியும். எனவே, இறைவன் தனியே இருப்பது கண்டு மனம் உருகினார். இது அறிவுக்கு அப்பாற்பட்ட பக்தி. உணர்வு ஒன்றிய பக்தி, இந்தப் பக்திக்கு ஒரே ஒரு சோதனைதான் உண்டு. அந்தப் பக்தியில் ஈடுபட்டுவிட்ட பிறகு ஈடுபட்டவனுக்குத்தான், தனக்கு உரிய பசி, தாகம் தனக்குரிய கடமைகள் என்பன இல்லாமற் போய்விடும். அத்தகைய நினைவுகள் எழுமானால் அங்கே பக்தியின் ஆழம் குறைந்து போய் விடுகிறது. திண்ணனார் எந்த விநாடியி லிருந்து குடுமித் தேவரைக் கண்டாரோ அந்த விநாடியி லிருந்து அவரைப் பற்றிய நினைவு தவிர வேறு நினைவே இல்லாமல் இருந்தார். "இவருக்குப் பசிக்கும் இவருக்கு இந்த ஊன் பிடிக்கும். நேற்றுக் கொண்டுவந்ததைவிட இன்று நல்ல உணவாகத் தரவேண்டும்" என்ற நினைவுகள் நிறைந்து நின்றாரே தவிர, தாம் காண்பது முழு முதற்பொருள், காற்செருப்பால் அச்சிவபெருமானின் தலையிலுள்ள மலர்களை அகற்றுவது தவறு" என்று அவர் நினைக்கவே இல்லை. இந்த நினைவு நிலை அவருக்குத் தோன்றவும் இல்லை. இதன் காரணத்தை எளிதாக அறிய முடியும். தான் என்ற ஒன்றைப் பிரித்துக் கண்டால் எதிரே உள்ள பொருள் வேறாகிவிடும். அந்தப் பிரிவு மனப்பான்மையில் உயர்வு, தாழ்வு முதலியன தோன்றிவிடும். பிரிவு மனப்பான்மையற்ற திண்ணனுக்கு இந்த வேறுபாடு தோன்றாதது சரியே. அதுதான் பக்தியின் முடிவுநிலை. அந்த முடிவாகிய பக்தியில் ஆராய்ச்சிக்கு இடமே இல்லை. ஆராய்ச்சியில் ஈடுபட்டு ஆண்டவனிடம் செலுத்தப்படும் பக்தி, அச்சத்தில் தோன்றும் பக்தி. சிவகோசரியாரின் கனவில் தோன்றி இந்த வேறுபாட்டினை ஆண்டவனே சொல்கிறான். வருந்தி நிற்கின்ற சிவகோசரியார், உண்மை நிலையை உணர வேண்டுமென்றே இந்த நிலைக்களனை இறைவன் உருவாக்குகின்றான். சிவகோசரியாரோ திண்ணனாரின் செயலை வெறுத்தார்; பாவஞ் செய்வதாகவே

எண்ணினார். இராமனைச் சூழவிருந்த முனிபுங்கவரும் குகன்தேனும், மீனும் திருத்திக் கொண்டுவந்தபோது அப்படித்தான் எண்ணினார்கள். வெறுத்தார்கள். ஏன்? சிவகோசரியாரும் முனிவர்களும் அறிவின் துணைகொண்டு ஆராய்ந்து தாங்களாகவே அவனிடமிருந்து தங்களைப் பிரித்துக் கொள்கின்றனர்; தாம் வேறு அவன் வேறு என்ற வேறுபாட்டுணர்ச்சி தோன்றும்போதே மனிதன் கீழே போய்விடுகிறான்.

குகனும் திண்ணனாரும் தம்மை இறைவனிடமிருந்து வேறு பிரித்துக் காணவில்லை. பாகற்காய் கசக்கும், பச்சை மிளகாய் காறும் என்பது குழந்தைக்கு தெரியும்; ஆனால் இந்த வடிவங்கள் சர்க்கரையில் செய்த பொம்மையாக இருந்தால் இனிக்கும் என்பதும் தெரியும். இதனைத் தெரிந்துகொண்டுள்ள குழந்தையிடம், கையிலே காசு இல்லாத காரணத்தால் 'ஐயோ ! அது பாகற்காய் ; கசக்கும், மிளகாய் உறைக்கும் என்று கூறினால், அந்தக் குழந்தை "கசக்காது, உறைக்காது, அவை இனிக்கும்" என்றுதான் கூறும். மீனும் தேனும் கடவுளுக்கு ஆகாதவை என்று நினைத்தார்கள் முனிவர்கள். அவர்கட்கு அந்தக் குழந்தை அறிவு கூட இல்லை. ஏன்? மிகப் பெரிய பேரறிஞர்கள் என்றாலும் வேறுபாட்டு உணர்வினாலே வந்த வினையாகும் இது. அங்கே இருப்பது தேனாயினும், மீனாயினும் அவைகட்கு உள்ளே குழைந்து நின்று இருப்பது அன்பு என்பதனை மறந்துவிட்டார்கள். சர்க்கரையே மிளகாயாகவும், பாகற்காயாகவும் இருப்பது போல் தன்னலமற்ற அன்பே மீன் வடிவிலும், தேன் உருவிலும் அங்கே உள்ளது என்பதனை அவர்களாகவே அறிந்து கொள்ளஇயலவில்லை. எனவேதான், இராமன் அன்பே உருவாக நிற்கும் குகனைப் பார்த்து

> *'அரியதாம், உவப்ப, உள்ளத்து அன்பினால் அமைந்த காதல்*
> *தெரிதரக் கொணர்ந்த என்றால், அமிழ்தினும் சீர்த்த அன்றே !*
> *பரிவினில் தழீஇய என்னில் பவித்திரம்; எம்ம னோர்க்கும்*
> *உரியன; இனிதின் நாமும் உண்டனம் அன்றே என்றான்'*
>
> (குகப். – 43)

குகன் அன்புடன் கொணர்ந்த சட்டியுள் அறிவே வடிவாய் விளங்கிய முனிபுங்கவர்க்குத் தேனும் மீனும் மட்டுமே தெரிந்தன. அன்பே வடிவமாய் விளங்கும் முழுமுதற் பொருளாகிய இராமனுக்குத் தேனும் மீனும் தெரியவில்லை. அதன் எதிராக அவைகளின் உருவில் விளங்கும் அன்பு (பரிவு) ஒன்றே தோன்றிற்று. உபநிடதம் படித்த முனிவர்க்கு, புறத்தே தெரிந்த இரண்டு பொருள்களைத் தாண்டியுள்ள மூன்றாம் பொருள் கண்ணுக்குப் புலப்படவில்லை; கருத்துக்கும் எட்டவில்லை. தேனும் மீனும்

இழிவானாலும் மூன்றாம் பொருளாகிய அன்பு குழைந்து சேர்ந்துவிட்டதானால் அது பவித்திரமாகிவிட்டது. இந்தச் சூழ்நிலையில் இரு வேறு நிலைப்பட்டவர்கள் இயங்கும் நிலையைக் கம்பநாடன் மிகவும் தெளிவாகவும் செம்மையாகவும் விரிவாகவும் காட்டிவிட்டான்.

அவ்வாறானால் அறிவோடு கலந்தால் பக்தி வெளிப்படாதா என்று வினாவினால், வெளிப்படும் என்றே கூறலாம். ஆனால், அந்த வெளிப்பாட்டிற்கு எப்போதும் ஒரு குறை இருந்து கொண்டேயிருக்கும். அறிவோடு கூடிய பக்தியில் எப்போதும் ஆபத்தும் உண்டு. என்ன ஆபத்து என்றால், தான் என்ற 'அகங்காரம்' தோன்றித் தன்னையும் மீறி வெளிப்பட்டு விடுதல் கூடும் 'இலக்குவனுக்குப் பக்தி இல்லையா ? பிராட்டிக்குப் பக்தியில்லையா ? என்றால், நிச்சயமாக உண்டு. ஆனால், அது 99.99 சதவிகிதமே தவிர முழுமையானது என்று சொல்லமுடியாது. 'நான் தலைவனுக்கு ஏவல் செய்கிறேன்' என்ற எண்ணம் அடிப்படையில் இருந்துகொண்டேயிருக்கிறது. முழுமுதற் பொருளாக விளங்கும் இராமனுக்குத் தான் ஒருவனே துணையாக நிற்பதாக இலக்குவன் நினைத்துவிட்டான். எனவேதான் இராமனுக்குத் தீங்கிழைத்த கைகேயியிடம் ஆத்திரமும் கோபமும் ஏற்படுகிறது.

"சிங்கக் குருளைக்கு இடும் தீஞ்சுவை ஊனை நாயின்
வெம்கண் சிறுகுட்டனை ஊட்ட விரும்பினளால்" -

என்றும்

"புலிப்பாவை பரங்கெடப் போரில் வந்தோரை எல்லாம்
அவிப்பானும், அவித்துஅவர் ஆக்கையை அண்டம் முற்றக்
குவிப்பானும், இன்றே என்கோவினைக் கொற்ற மௌலி
கவிப்பானும் நின்றேன்; இதுகாக்குநர் காமின்' என்றான்"

(நகர் நீங்கு - 117, 121)

என்றும் சீறுகிறான். சிங்கக்குட்டிக்கு இடுவதற்கென இருந்த ஊனை ஒரு சிறு நாய்க் குட்டிக்கு இடுவதற்கு முனைந்து விட்டார்கள். அவர்களைக் கொன்றுவிடுகிறேன்" என்று சீறிப் பேசுகிறான்; இந்த அவல நிலையைத் தான் ஒருவனே தனி நின்று சரிப்படுத்திவிட முடியும் எனச் சீறுகின்றான். இந்த அகங்கார உணர்வு அவன் உள்ளத்தில் தோன்றிவிட்டது. இலக்குவன் இராமனிடத்தில் உள்ள பக்தியால்தான் அவ்வாறு கோபிக்கின்றான். ஆனால் அவன் பக்தியில் 'தான்' என்ற அகங்காரம்

இழையோடி நிற்கிறது. இது அறிவால் வந்த வினை. அறிவோடு கூடிய பக்தியையும் இப்பகுதியில் விளக்கமாகக் காட்டுகிறான் கம்பன்.

'அறிவு கலந்தால் பக்திக்கு விமோசனமே இல்லையா ?' என்றால், உண்டு. அதனை மூன்றாவது பாடமாகக் கம்பன் காட்டுகின்றான். அதுதான் இராமகாதையில் இராமனையும் விஞ்சி நிற்கின்ற ஒரு மாபெரும் பாத்திரம். முதலில் நூறு இராமர்க்குச் சமமாகி நின்று 'ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ ? எனக் குகனால் அடுத்துப் போற்றப்பட்டு, ஆயிரம் கோடி இராமனுக்குச் சமம் என இராமனைப் பெற்ற கோசலையினால் இறுதியில் புகழப்பட்ட பரதனே அப்பாத்திர மாவான். இப்பரதன் படத்தினைக் கவிச்சக்கரவர்த்தி ஒப்புயர்வற்ற முறையில் தீட்டிக் காட்டுகிறான்.

அறம் அறிவின் துணைகொண்டு பணிபுரிவது, பக்தி அறிவுக்கு அப்பாற்பட்டு வருவது இந்த இரண்டும் கலந்து ஒரு மனிதனிடம் விளங்க முடியுமா என்று கூட ஐயப்படும் நிலை இன்றுளது. ஆனால் கம்பநாடனே "இதோ ஒரு மனிதனிடம் இவை இரண்டும் கலந்து பணிபுரிகின்றன பாருங்கள்" எனக் காட்டுகின்றான். இலக்குவனிடமும் பக்தியும் அறமும் இருந்தன. ஆனால், அவனிடம் அறிவின் பகுதியாகிய 'நான் செய்கிறேன்' என்ற முனைப்புத் தோன்றிக்கொண்டே யிருந்தது. இந்த முனைப்பு அவன் அறத்தையும் பக்தியையும் குறைபடச் செய்துவிட்டது. ஆனால், பரதனைப் பொறுத்தமட்டில் அறம் பக்தி என்ற இரண்டும் சரிசமமாக நிற்கின்றன. அதனால் 'நான் செய்கின்றேன்' என்ற முனைப்பு இல்லாமலே போய்விடுகிறது. எனவே, அதில் குறைபாட்டினைக் காணவே முடியவில்லை. பரதன் அற அடிப்படையில் செயல்பட்டாலும் சரி, பக்தி அடிப்படையில் செயல்பட்டாலும் சரி - அங்கே பரதன் என்ற தனிப்பொருளைக் காண முடியவில்லை. இராமனைத்தான் காணுகிறோம்; அதுவே பரதனின் சிறப்பு. இராமன் பரதன், அறம் பக்தி இவைகளை வேறு வேறாகக் காணமுடியாது. எல்லாம் ஒன்றாக விளங்கும் காட்சியைத்தான் பரதனிடம் காணுகின்றோம்.

ஓவியன் ஒருவன் ஓவியத்தினை ஒரு திரைச்சீலையில் வரைந்திருந்தான்; பலர் வந்து பார்த்தனர். ஓவியம் எங்கே ? திரைச்சீலையை விலக்குங்கள். ஓவியத்தினைக் காணலாம்" என்றனர். "ஐயா ! திரைச்சீலைதான் ஓவியம்" என்றதோடு வெற்றிப் பெருமிதமும் எய்தினான். அதுபோலப் 'பரதன் என்ற பொருள் அறிவா ? அன்பா ? அறமா ? பக்தியா ?" என்றால், 'ஆம் ! இவை அனைத்துமே பரதன் தான்' என்று விடை கூறலாம். அவை வேறு, பரதன் வேறு அல்ல. நான் என்ற அகங்காரத்தினை அறவே கரைத்துவிட்ட பாத்திரம் பரதன். அத்தகைய சிறந்த பாத்திரத்தினைப் பெற்றது.

இராமகாதை ; ஆதலினால் தான் பலமொழிகளைக் கற்றறிந்த திரு. வ.வே.சு. ஐயர் அவர்கள் "உலகக் காப்பிய இலக்கியங்களை எடுத்துக்கொண்டு பார்ப்பீர்களானால் கவிச்சக்கரவர்த்தி கம்பனின் பக்கத்தில் வருவதற்குக் கூடப் பிற காப்பிய ஆசிரியர்களை எதிர்பார்க்க முடியாது" என்று பெருமிதத்தோடு கூறுகின்றார். உலக இலக்கியங்கள் முழுவதையும் எடுத்துக்கொண்டு பார்த்தால் இப்படிப்பட்ட பாத்திரப் படைப்பைக் கவிச்சக்கரவர்தி கம்பனைத் தவிர வேறு யாராலும் படைக்க முடியாது என்று கூறிவிடலாம். இந்தப் பெருங்காவியத்தினைத் தமிழில் தவிர வேறு மொழியில் எழுதியிருந்திருப்பானானால் உலகெலாம் போற்றும் ஓர் ஒப்பற்ற நிலையைப் பெற்றிருப்பான். பரதனைப் பற்றி

'தள்ளரிய பெருநீதித் தனியாறு புகமண்டும்
பள்ளம்எனும் தகையானைப் பரதனென்னும் பெயரானை
எள்ளரிய குணத்தாலும் எழிலாலும் இவ்விருந்த
வள்ளலையே அனையானைக் கேகயர்கோன் மகள் பயந்தாள்'
(குலமுறை - 21.)

என்று எல்லாவற்றிற்கும் மேலானவன் எனத் தன்னை எண்ணிக் கொண்டிருக்கும் விசுவாமித்திரனே இவ்வாறு கூறுகிறான். அறக்கடல் பரதன் என்கின்றான்; அறக்கடல் வேறு, பரதன் வேறு அல்ல என்றும் கூறுகின்றான். அந்தப் பாத்திரம் ' இந்நின்ற வள்ளலையே ஒக்கின்றான்! இராமன் வேறு, பரதன் வேறு இல்லை ; இராமனைப் பார்த்தவர்கள் பரதனை வீட்டில் சென்று பார்க்க வேண்டியதில்லை. வடிவத்தால், பண்பால், பிறவற்றால் பரதன் இராமனையே ஒத்துள்ளான். அத்தகைய படைப்பு, பரதனாகிய படைப்பு.

பார்க்கும் பரதன் எனும் அந்தப் பாத்திரம் தனியே எடுத்துப் பிரித்தப் பாத்திரம் இல்லை. பரதனை நோக்கும்போதெல்லாம் பரதன் மட்டுமா தோன்றுவான்? அறம் தோன்றும் ; பக்தியும் தோன்றும். இவற்றை விட்டுத் தனியே பரதன் என்ற ஒருவனைக் காண இயலாது. அப்படி ஒரு பாத்திரத்தினைப் படைக்கும் ஆற்றல் கவிச்சக்கரவர்த்திக்கு உண்டு. அறம் என்பது பற்றி உபநிடதமும் அதனை ஒட்டிச் சாமர்செட்மாம் என்ற மேனாட்டறிஞனும் 'அது வாளின் கூரிய முனை போன்றது' எனக் கூறுகின்றனர். பல சமயங்களில் வாழ்க்கைப் பிரச்சினையை ஆயும்பொழுது அறமா அது சரியா எனப் பிரித்தறிய முடியாத நிலையில் 'இது சரியா அது சரியா' என்ற ஐயப்பாட்டில் நிற்க வைத்துவிடும். அறமும், பக்தியும் உருவாகிய பரதனுக்கும் ஒரு சோதனை. அந்த நிலையின் மூலம் பரதனின் குறிக்கோள் எங்கே இருக்கின்றது

என்பதனைக் காட்டுகிறான் கவிச்சக்கரவர்த்தி. பரதன் தன் பாட்டன் வீட்டில் இருந்தவரை அயோத்தியில் நடந்தவை ஒன்றுமே தெரியாது. வரும்வரை தந்தையின் இறப்பும், இராமன் காடு ஏகிய செய்தியும் அவனுக்குத் தெரியாது. முனிவன் அழைத்ததாக வந்த செய்தி கேட்டு ஊருக்கு வந்தான். வரும் வழியில் அயோத்தி நல்கும் காட்சியைப் பார்த்தான்; சந்தேகம் வந்துவிட்டது. அம்மாவிடம் சென்றான். முதலில் அவன் கேட்ட கேள்வி, 'தந்தை வலியன்கொல்' என்பதே. அந்தத் தாயார் இந்த உலகில் எந்தப் பெண்ணும் சொல்லாத ஒன்றினை, சொல்ல முடியாத ஒன்றினை "வானத்தான்" என்று சொல்லால் கூறினாள். இந்த உலகில் எந்த மனைவியும் சொல்ல முடியாத சொல்லைச் சொல்கிறாள். கணவனை இழந்த நிலையில் எவளிடமும் தோன்றாத ஒரு அலட்சிய நிலையில் நின்று பேசுகிறாள். இத்தகைய நிலை ஒரு பெண்ணிடம் தோன்றும் என்பது கனவிலும்கூட எண்ணமுடியாத நிலை. இது பரதனை மயங்கச் செய்கின்றது. 'வானத்தான்' என்று அலட்சியமாகச் கூறுவது அவனை வெகுளவும் செய்கிறது. அங்கே அறம் அவனுக்குத் துணை செய்கிறது. உண்மை முழுவதையும் தெரிந்துகொள்ளும் முன்பே கோபித்துக் கொள்ளும் இலக்குவன் இயல்பு வேறு; பரதன் இயல்பு வேறு. எனவேதான், அடுத்து அண்ணனைப் பார்க்கத் துணிந்தான். அவனிடம் ஆறுதல் பெறலாம் என எண்ணினான். ஏன்? பரதனைப் பொறுத்தமட்டில் தாய், தந்தை, தெய்வம் அனைவருமே இராமன்தான்.

எனவே, 'இராமன் எங்கே' என்றான். அவன் மனைவியுடன் காட்டில் உள்ளான்' என்றாள் அப்பெருமாட்டி. 'மனைவியோடு போய் விட்டான்' என்றால் அது மரபுக்கு ஒவ்வாத நிலை. என்ன தவறிழைத்தான்? தவறு செய்தவர் காட்டுக்கு அனுப்பப்படுதல் நியாயம். "தவறிழைத்து மானம் கெட்டு காட்டுக்குப் போனானா, தானாக விரும்பிப் போனானா?" இவை பரதனுடைய வினா. இராமன் இவற்றுள் எந்தக் காரணத்தினால் போயினான் என்று வினவுகிறான். பரதன் மூன்று காரணங்களைக் கற்பித்துக்கொண்டு கேட்டான். அவள் வேறு ஒன்றும் சொல்லமுடியாத நிலையில் "இரண்டு வரம் கேட்டேன். ஒன்றால் உனக்கு ஆட்சி உரிமையைப் பெற்றேன். மற்றொரு வரத்தால் இராமனைக் காட்டுக்கு அனுப்பினேன். இதனைப் பொறுக்காமல் மன்னன் மாண்டான்" என்றாள். இதுதான் நிலைக்களன். இதனை அமைத்துக் கொண்டான் கவிச்சக்கரவர்த்தி. ஒரு மகன் - ஒரு தாய். மகன் அன்புடையவள். தாயும் தன் மகனிடம் அன்புடையவன். அன்பு காரணமாகத்தான் அறத்தையும் எண்ணாமல் வரத்தினால் பட்டத்தை வாங்கினாள். அன்புடைய இருவர்க்கிடையில் உரையாடல். 'அறத்தின் ஆணி' என்று இராமனாலே புகழப்பட்டவன், "தள்ளரிய பெருநீதித் தனி ஆறு புகமண்டும் பள்ளம்" என்று விசுவாமித்திரனாலே பேசப்பட்டவன், 'ஆயிரம் இராமர் வந்தாலும் உனக்குச் சமமாகாது' என்று குகனாலே புகழப்பட இருக்கிறவன், 'ஆயிரம் கோடி

இராமருக்கும் மேலானவன்' என இராமனைப் பெற்ற கோசலையினாலே புகழப்படும் பரதன் தாயையும் கொலை செய்யத் துணிகின்றாள். பரதன் அரச குமாரன், அறத்தின் நிலைக்களன். எதிரிலே நிற்பவள் அன்பால் அறமற்ற கொடிய செயலைச் செய்தவள், அறமல்லாதனவற்றை யார் செய்திருந்தாலும் அவர்கள் தண்டிக்கப் படவேண்டியவர்கள். அதுதான் அறம். அந்த வகையில் அவன் உந்தப் பெறுகின்றான்.

" நீ இனம் இருந்தனை! யானும் நின்றனென்;
ஏ எனும் மாத்திரத்து எற்று கின்றிலேன்
நாயகன் முனியும்என்று அஞ்சினேன் அலால்
தாய்எனும் பெயர்எனைத் தடுக்கற் பாலதோ? "

" மாளவும் உளன்ஒரு மன்னன் வன்சொலால்
மீளவும் உளன்ஒரு வீரன் மேயபார்
ஆளவும் உளன்ஒரு பரதன் ஆயினால்
கோள்இலது அறநெறி குறைஉண்டாகுமோ? "

(பள்ளி-72, 73)

என்கிறான். தாய்க்கொலை பொல்லாதது என்றாலும் துணிகிறான். ஆனால் " நாயகன் முனியும் என்று அஞ்சினேன்" என்று கூறுவதால் தான் வழிபடுகிற இராமன் முனிவான் என்றே விட்டுவிடுகிறானாம். "தாய் என்கிற உரிமைக்கான உறவுக்காக உன்னை விடவில்லை" என்று கூறுவதால் இராமனிடம் இருந்த பக்தி அங்கே அவனுக்குத் துணை செய்கிறது; தாய்க் கொலையிலிருந்து அவனைத் தடுத்து நிறுத்துகிறது. தாய்க் கொலையை எண்ணுவதும் பாதகம். பரதன் இவ்வாறு எண்ணியது அற வாழ்வா ? என்ற வினா அடுத்துத் தோன்றுவது இயல்பே.

அறம் 'தேன் தடவிய வாள் முனை போன்றது' என்று காந்தியடிகள் கூறுவார்கள். அது பக்தியோடு சேரவில்லையென்றால் பல சமயங்களில் தவறு செய்துவிடும். அறத்தோடு அன்பு சேரவில்லையென்றால், அறம் என்ற பெயரால் பல தவறுகள் நடந்துவிடும். அறத்தோடு பக்தி அல்லது அன்பு என்ற உணர்வு இழைந்து நிற்கவில்லையென்றால் அதனால் அறமுடையானுக்கும் பயன் இல்லை; மற்றவர்களுக்கும் பயன் இல்லை. புத்ததேவன் இதனை மறக்கவில்லை. கருணையின் அடிப்படையிலே வாழும் அறவாழ்வுதான் பயனுடைய வாழ்க்கை என்று செயலிலும் காட்டினான். உலக மக்கள் உணரும் வகையில் அதனைச் செய்து காட்டினான். பிம்பிசாரன் செய்த யாகத்திற்கு ஆடு சென்றது. "அந்த ஆட்டைக் கொன்று யாகத்திலிட்டுத்தான் உயர்கதி பெற முடியமென்றால் ஆட்டின் உயிரினும் உயர்ந்த

உயிராகிய என் உயிரைத் தருகிறேன்" என்று ஆட்டைத் தோளிலே சுமந்து சென்றான். பிற்காலத்திலோ அந்தப் புத்தனைப் பின்பற்றுவதாகக் கூறிக்கொள்பவர்கள் அறத்தைமட்டும் வைத்துக்கொண்டு இரக்கத்தை, கருணை உணர்வை மறந்துவிட்டார்கள். எனவே, அறமும் வெறும் சடங்காயிற்று. சமயம் உயிர் இழந்தது. அடிப்படையை மறந்து மேல் கட்டிடத்தை மட்டும் அழகு செய்யும் நிலைக்கு வந்துவிட்டார்கள்.

அறமும் பக்தியும் நிறைந்த பாதையில் வாழ்பவனாகிய பரதனுக்கு ஓர் இக்கட்டான நிலை இது. அறத்தின் அடிப்படையோடு நிற்கும் நேரத்தில் தாய்க் கொலையைவிடக் கொடுமையானது வேறு ஒன்றும் இருக்காது. அறம் அறிவோடு தொடர்புடையது. எனவே, அறவழியிலே செல்பவன் இத்தகைய செயலைச் சிந்திப்பதும் பெருங் குற்றமாகும். பக்தியின் நோக்கிலே யார் எவர் என்ற வேறுபாடே இல்லை. தாயா, தந்தையா என்று கருதக்கூட நேரம் இல்லை. தன்னால் வணங்கப்படும் பெருந் தெய்வமாகிய தன் கடவுள் இராமன். அவனுக்குத் தீங்கு செய்பவர் தண்டிக்கப்பட வேண்டியவர்கள். எனவேதான், இராமன் ஒருவேளை தவறிழைத்து அதன் பயனாகக் காட்டிற்கு அனுப்பப்பட்டும் இருக்கலாம் என்ற விவகாரத்திற்காக நினைக்கவும் பரதன் அஞ்சுகிறான். இதனை மனத்திற்கொண்டுதான் கீழ்வருமாறு பேசுகிறான்;

" தீயன இராமனே செய்யுமேல் அவை
தாய்செயல் அல்லவோ தலத்து உளோர்க்கெலாம்"

(பள்ளி - 61)

" தீயன இராமனே செய்யும்?" இங்கு ஏகாரம் எதிர்மறைப் பொருளில் வந்துள்ளது. இராமன் தவறே செய்யமாட்டான். அவனால் தவறு செய்ய முடியாது. ஒருவேளை பிறர் கண்ணுக்குத் தவறுபோல் தோன்றும் நல்லதைச் செய்தால்?, 'செய்யுமேல் - அது தாய் செயல்' என்கின்றான். 'தாய் செயலே தவிரத் தீச் செயலன்று' என்று கூறுகின்றான். குழந்தையைக் காலின் இடையில் போட்டு அமுக்கி மருந்தை ஊற்றும் தாயின் செயல் காண்பதற்கு மறம் போலக் காட்சியளித்தாலும், அது அன்பு காரணமாக நிகழும் செயலே தவிரக் கொடுமையான செயலன்று. வள்ளுவர் கூட :

"அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை."

என்று கூறுகின்றார். மருத்துவரின் செயலை நோக்கி முடிவுக்கு வருவது தவறு. செயலின் நோக்கம், பயன் ஆகியவைகளைக் கொண்டு நோக்கம், பயன்

ஆகியவைகளைக் கொண்டு முடிவுக்கு வருவதுதான் நடு நிலைமையுடைமையாகும், முறையுமாகும். இதனை நன்றாக உணர்ந்தவன் தமிழன். எனவேதான், கம்பன் பரதன் வாயிலாகத் “ தீயன இராமனே செய்யும் ” என்று கேட்டு, ‘ அது தாய் செயல் ’ என்று கூறுகின்றான். என்றால், இராமன் தவறு செய்யவில்லை என்ற முடிவிற்கு வந்தபின், ஏன் காட்டிற்குச் சென்றான் என்று வினாவுகிறான். இது அறத்தின் அடிப்படை எழுப்பிய வினாவாகும்.

ஒருவன் பூசை செய்கிறான். அவன் தந்தை முதுகில் அடிக்கிறான். ஆனால், பூசையிலீடு பட்டவனுக்கு அந்த அடி தெரியவில்லை. ஆனால், பூசைக்குரிய பாலைக் காலால் தட்டியபோது அவ்வாறு தட்டிய தந்தையின் காலை வாளால் துண்டித்தான். தந்தையைக் கொலை செய்யப் புகுந்தவன் சண்டேசுவரன். இது தவறு இல்லையா ? தனக்குத் தீங்காகவே தெரியவில்லை. தன்னால் வணங்கப்படும் தெய்வத்திற்குத் தீங்கு செய்யப்படும்போது செய்தவர் யார் என்ற ஆராய்ச்சிக்கே இடம் இல்லை. உறவுக்கோ பிறவற்றிற்கோ அங்கு இடம் இல்லை. இந்த உணர்வு நிலையைத்தான் நாவுக்கரசர் பெருமான்

“ முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள் மூர்த்தி
அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள் பெயர்த்தும்
அவனுக்கே பிச்சி ஆனாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள் அகன்றாள்
அகலிடத்தார் ஆசாரத்தைத்
தன்னை மறந்தாள் தன் நாமம் கெட்டாள் தலைப்பட்டாள்
நங்கை தலைவன் தாளே.”

என்று பாடுகிறார். இதே நிலைதான் பரதன் நிலையும். இந்த நிலையில் ஈடுபட்டுவிட்ட பரதனுக்குத் தந்தையில்லை, தாயில்லை, எல்லாம் இராமன் தான்.

“ எந்தையும் ஆயும்எம் பிரானும் எம்முனும்
அந்தமில் பெருங்குணத்து இராமன் ஆதலால்
வந்தனை அவன்கழல் வைத்த போதுஅலால்
சிந்தைவெங் கொடுந்துயர் தீர்கலாது.”

(பள்ளி - 57)

என்கிறான் பரதன். ஆதலால்தான், நாயகன் முனியும் என்று அஞ்சித் தாயைக் கொல்லவில்லை. எனவே, அறிவே பக்தியாய், பக்தியே அறிவாய் விளங்கிய நிலையைப்

பரதனிடம் காணுகிறோம். அதற்கு அறிவு நிலையில் நின்று ஆராயவும் தெரியும்; பக்தி நிலையில் நின்று தன்னை அர்ப்பணிக்கவும் தெரியும். குகனிடத்தும் திண்ணனிடத்தும் அறிவுக்கு அப்பாற்பட்ட பக்தி நிலையைக் காணுகின்றோம். சிவகோசரியாரிடம் அறிவு நிலை விஞ்சி அறத்திற்கு மட்டும் சிறப்புத் தரும் பக்தியைக் காணுகின்றோம். அவைகளையெல்லாம் கண்டவர்கள் அறமும் பக்தியும் இணையவே இணையாதோ என்றுகூட எண்ணத் தொடங்கி விட்டனர். ஆனால், கவிச்சக்கரவர்த்தி கம்பன் படிப்படியே பலப்பல படங்களைக் காட்டிவிட்டு, அறமும் பக்தியும் இணையும் நிலையில் தவறே நேராத உயரிய நிலை ஏற்படும் நிலையினைக் காட்டுகிறான். இதனைப் பரதன் வாழ்வின் மூலம் அறிகிறோம். அறமும் பக்தியும் முரண்பட்டவையோ என்று எண்ணும் திறனாய்வாளர்களின் சிந்தனைக்குக் கம்பன் நல்ல கருவூலமாகின்றான்; அறத்தையும் பக்தியையும் பரதனிடம் இணைத்துக் காட்டுகிறான்.

இந்தப் பேருலகில் அறம் வேறு பக்தி வேறு என்றும், இரண்டுக்கும் முரண்பாடு உண்டு என்றும் கருதவேண்டா. அறத்தின் அடிப்படையில் பக்தி தோன்றும். பக்தி முதிர்ந்தால் அறம் அதனுள் இழையோடி நிற்கும் பக்தியின் சிறப்பில் அறம் கலந்து நிற்கும். இந்த உண்மையைக் கம்பன் தன் காப்பியத்தில் தெளிவாகக் காட்டுகிறான்.



பாடிப்பாடி மகிழ்வோம்

ஆரியத்தோ டரியதமிழ் ஆழம்கண்ட பேரறிஞன்
தேரும் பிருமன் படைப்பெல்லாம் திருத்தி அழகுசெயவல்லோன்
யாரும் புகழக் கவியுலகில் இராஜ ராஜன் எனத் திகழ்வோன்
பாரில் எங்கள் கம்பனெனப் பாடிப்பாடி மகிழ்வோம்.

- கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை